பக்கங்கள்: 36

# உதயன்

சுடர் 27
கதிர் 72

வள்ளுவர் ஆண்டு 2043 தை 23 திங்கட்கிழமை (06/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

www.onlineuthayan.com

# சர்வ கட்சிக் கூட்டத்துக்கான திகதி அறிவிப்பு மிக விரைவில்

## கூட்டமைப்பின் பதிலுக்காக எவ்வளவு காலம்தான் காத்திருப்பது என்கிறார் சஜின் வாஸ் எம்.பி.



கொழும்பு, பெப்ரவரி 6

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்காகப் பெயர்களை வழங்குவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்து வருகின்றனர். பொறுமைக்கும் எல்லையுண்டு. இந்த நிலைமை தொடருமானால், இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்ட அரசு, சர்வ கட்சிக் குழுவைக் கூட்டும். அதற்கான திகதி மிக விரைவில் அறிவிக்கப்படும்.

- இவ்வாறு அரச தரப்புப் பேச்சுக் குழுவின் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜின் வாஸ் குணவர்த்தன நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அரசுக்கும், தமிழ்க் கூட்டமைப்புக்குமிடையில் நடைபெற்றுவந்த

23

## நகுலேஸ்வரம் கும்பாபிஷேகத்தில் மஹிந்த

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ்.குடாநாட்டுக்கு இன்று வருகை தரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கீரிமலை நகுலேஸ்வரம் சிவன் கோயிலுக்குச் செல்கிறார். அங்கு ஜனாதிபதி கும்பாபிஷேக வழிபாடுகளில் கலந்து கொள்வார்.

கோயிலிலுள்ள இரண்டரை அடி உயரமுடைய சிவலிங்கத்துக்கு மஹிந்த தங்கத்திலான நெற்றிப் பட்டை ஒன்றையும் வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று காலை 8 மணிக்கு கும்

23

## மக்கள் கட்சியில் ஹிருணிகா

முல்லேரியாவில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகளான ஹிருணிகா பிரேமச்சந்திர இலங்கை மக்கள் கட்சியில் இணைந்து அரசியலில் ஈடுபடப் போகிறார் என அறிவித்துள்ளார். கடந்த ஒக்டோபர் 8 ஆம் திகதி முல்லேரியாவில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் பாரத லக்ஷ்மன் உயிரிழந்த பின்னர் பலராலும் அறியப்பட்டவர் ஹிருணிகா. 1984ஆம் ஆண்டு, முன்னாள் ஜனாதிபதியின் கணவரும் பிரபல சிங்கள திரைப்பட நடிகருமான விஜய குமாரதுங்கவினால் இலங்கை மக்கள் கட்சி ஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் தூத்துக்குடி கப்பல் சேவை

கொழும்பு - தூத்துக்குடி பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்காக மீண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கப்பல்சேவை சில மாதங்களே இயங்கியது. பின்னர் பொருளாதார மற்றும் சட்டச் சிக்கல்கள் காரணமாக நிறுத்தப்பட்டுவிட்டது. கடந்த ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட ஸ்கோஷியா பிரின்ஸ் கப்பல் சேவை சட்டச் சிக்கல்கள் மற்றும் லாபமின்மை ஆகிய காரணங்களால் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் இச்சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு புதிய மாலுமி மற்றும் பணியாளர்களுக்காக இலங்கையிலும் இந்தியாவிலும் விளம்பரம் செய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபன அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

## போலி வைத்தியர்கள் 'உள்ளே' தள்ளப்படுவர்

போலி வைத்தியர்களாக சமூகத்தில் நடமாடுபவர்களுக்கு எதிராக உரிய தண்டனை வழங்க தற்போதுள்ள நீதிக் கட்டமைப்பில் திருத்தங்களை கொண்டுவர எதிர்பார்த்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. நாட்டில் 50 ஆயிரம் போலி வைத்தியர்கள் இருப்பதாக அமைச்சால் தெரிவிக்கப்பட்டுள்ளது. போலி வைத்தியர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு ஆலோசனைக் கூறியுள்ளார்.

## புது டில்லியில் ஜெயலத்

இந்தியாவில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் எவ்வாறு இயங்குகின்றன என்பதை ஆராய்வதற்கு ஐ.தே.க. தீர்மானித்துள்ளது. இலங்கையின் தனியார் மருத்துவக் கல்லூரிகள் விடயத்தில் தனது நிலைப்பாட்டை வகுப்பதற்காக இந்த ஆய்வை ஐ.தே.க. மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது. இதற்காக ஐ.தே.கவின் பிரதிப் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன புது டில்லிக்கு சென்றுள்ளார். இந்தியாவில் சுகாதார முறைமை இயங்கும் விதத்தையும் தனியார் துறையின் பங்களிப்பையும் தான் ஆராயவுள்ளதாக ஜயலத் ஜயவர்தன தெரிவித்தார். இந்தியாவில் இதய சத்திரசிகிச்சைகள் தொடர்பான மருத்துவசேவைகள் எவ்வாறு கையாளப்படுகிறது என்பதையும் தான் ஆராயவுள்ளதாக அவர் கூறினார்.

## அமெரிக்க அதிகாரிகள் படையெடுப்பு கதிகலங்கிப் போய் அரசு வாயடைப்பு

### உண்ணாவிரத நாயகர்கள் மௌனம்

கொழும்பு, பெப்.6

அமெரிக்க இராஜதந்திரிகளின் படையெடுப்பால் கதிகலங்கிப்போயுள்ள அரசு, உண்ணாவிரத நாயகர்களை அதிரடியாகக் களமிறக்காததிலிருந்தே அவர்களது விஜயத்தின் முக்கியத்துவத்தை உணரலாம். தூக்குக்கயிற்றில் சிக்கியவன் துள்ளிக் குதித்தால் நிலைமை என்னவாகும்? அதனை உணர்ந்துதான் அரசு மௌனமாகிவிட்டது.

மேற்குலக நாடுகளுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி அதீத தேசப்பற்றை வெளிக்காட்டும் அமைச்சர்களான விமல், சம்பிக்க ஆகியோர் தற்போது மௌனம் காக்கின்றனர்.

- இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும், தெஹிவளை -

23

## ஜனாதிபதி இன்று திறக்கும் சாவகச்சேரி ஆஸ்பத்திரி கட்டடங்கள் பின்லாந்து, ஐரிஸ் நாடுகள் கட்டியவை

### ஆனால் பழைய நினைவுக் கற்கள் அகற்றப்பட்டு அந்த இடத்தில் புதிய மஹிந்த 'கட் அவுட்'



முன்னர் இருந்த நினைவுக் கல்



அந்த இடத்தில் புதிய 'கட்அவுட்'

யாழ்ப்பாணம், பெப்.6

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சாவகச்சேரி ஆதார வைத்தியாசாலையில் இன்று திறந்து வைக்கப்படவுள்ள கட்டடங்கள், 3 மாதங்களுக்கு முன்னர் வைத்திய சாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டிருந்தன. இந்தக் கட்டடங்

23

## சர்வதேச சமூகத்தின் தலையீட்டுக்கு வழியமைத்துக் கொடுக்கிறது அரசு

கொழும்பு, பெப்.6

உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேச தலையீடுகளுக்கு அரசே வழியமைத்துக் கொடுத்துள்ளது எனக் குற்றஞ்சாட்டியுள்ள ஜே.வி.பி., அரசின் போலி நாடகமான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தாம் ஒருபோதும் அங்கம் வகிக்கப்போவதில்லை என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினூடாகவே இறுதியானதொரு தீர்வு காணப்படும். இதற்கு எதிர்க் கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளமை தொடர்பிலும், ஜெனிவாக் கூட்டத் தொடருக்கு முன்னர் மூன்று உயர்மட்டத் தூதுவர்களை அமெரிக்கா இலங்கைக்கு அனுப்புவது குறித்தும் கருத்து வெளி

23

### ஜெனிவா மாநாட்டில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை

## சர்வதேச அழுத்தங்களுக்குப் பணிந்து மீள் பரிசீலனைக்குத் தயாராகிறது அரசு

கொழும்பு, பெப்.6

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை ஜெனிவா மாநாட்டில் சமர்ப்பிக்கப்போவதில்லை என்ற தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்வது தொடர்பில் இலங்கை அரசு கவனம் செலுத்திவருகின்றது என அறியமுடிகின்றது.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது உயர்மட்ட ஆலோசகர்களுடன் கலந்துரையாடி வருகின்றார் என அரச உயர்மட்ட வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

முன்னர், நல்லிணக்க

23

## இந்தோனேஷியாவில் 2 இலங்கையர் கைது

கொழும்பு, பெப்.6

இந்தோனேஷியாவில் போலியான தன்னியக்கப் பணப்பரிமாற்று அட்டையைப் பயன்படுத்தி 100 மில்லியன் ரூப்பியா பண மோசடி செய்த இரு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

23

## யாழ்.வரும் ஜனாதிபதிக்கு பாதுகாப்பு தமிழ்ப் பொலிஸாருக்கு இடமில்லை

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பாதுகாப்பு வழங்கும் பணியில் இருந்து தமிழ்ப் பொலிஸார் இறுதி நேரத்தில் நீக்கப்பட்டு விட்டனர் என்று தெரிய வருகின்றது.

ஜனாதிபதியின் பாதுகாப்பு விடயம் தொடர்பாக நேற்று யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற பொலிஸாருக்கான கூட்டம் ஒன்றில் இது குறித்து அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தரும் ஜனாதிபதி, சாவகச்சேரி, யாழ்.மத்திய கல்லூரி, மாவட்ட செயலகம், நகுலேஸ்வரம் ஆகிய இடங்களில் இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி கலந்து கொள்ளும் இந்த நிகழ்வுகள் எவற்றிலும் தமிழ்ப்

23

## முக்கிய செய்தியுடன் அமெ. உயர்மட்ட தூதுவர்கள் மூவர்

கொழும்பு, பெப்.6

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ள அமெரிக்கா அதற்கிடை

23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யாழ்ப்பாணம் வந்த இராஜதந்திரிகளுக்கு 'வடக்கு அபிவிருத்தி' குறித்து விளக்கம்

யாழ்ப்பாணம், பெப்.6

வடக்கின் அரசியல் நிலவரம் என்ன நிலையில் இருக்கிறது என்று யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த வெளிநாடுகளின் இராஜதந்திரிகள் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

ஐரோப்பா, இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு ஆகிய நாடுகளில் இருந்து இலங்கையின் சுதந்திரதின நிகழ்வுக்கு அனுராதபுரம் வருகை தந்திருந்தனர் வெளிநாட்டு இராஜதந்திரிகள். அவர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தனர். அவர்களுக்கு வடக்கின் அபிவிருத்தி தொடர்பாக விளக்கமளிக்கும் மாநாடு இடம்பெற்றது. அங்கு வைத்தே இராஜதந்திரி ஒருவரால் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது.

யாழ்.பொதுநூல கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வடக்கில் இடம்பெற்று வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியினால் விளக்கமளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஆறு பேரை மட்டும் கேள்வி கேட்பதற்கு அனுமதித்தார் ஆளுநர்.

இதன்போதே இராஜதந்திரி ஒருவர் பொருளாதார ரீதியாக அபிவிருத்தி ஏற்பட்டுவிட்டதாக விளக்கமளித்தீர்கள். வடக்கின் அரசியல் நிலவரம் எப்படி இருக்கிறது? எனக் கேட்டார்.

ஜனநாயக ரீதியிலான தேர்தல் இடம்பெற்றுப் பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்துள்ளனர். வடமாகாண தேர்தலை நடத்துவதற்கான சந்தர்ப்பம் வரும்போது அதனை ஜனாதிபதி நடத்துவார் என்று பதிலளித்தார் ஆளுநர்.



மிதிவெடி அகற்றுவது எப்போது பூர்த்தியாகும்? மக்களை மீள்குடியமர்த்தும் பணி எப்போது முடிவுக்கு வரும்? புலம் பெயர்ந்தவர்களால் மீள்குடியமர்வு நடவடிக்கைக்கு இடையூறு உள்ளதா? நல்லிணக்கம் மற்றும் பேச்சுவார்த்தை நிலைமை எப்படியுள்ளது?

இந்தக் கேள்விகளையும் இராஜதந்திரிகள் கேட்டனர்.

ஆளுநர் பதிலளித்தார்:

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலக பிரிவில் 14 பிரிவுகளில் மிதிவெடிகள் அகற்றப்பட்டுவிட்டன. ஒரு பிரிவில் ஒரு சிறிய பகுதி மட்டும் அகற்றப்பட்டாதிருக்கிறது. மக்கள் விரைவில் மீளக்குடியமர்ந்தப்படுவார்கள்.

அரசினால் முன்னெடுக்கப்பட்டு வரும் மீள்குடியமர்வு நடவடிக்கையை புலம்பெயர்ந்தோர் உள்ளிட்ட வெளிச் சக்திகள் குழப்புவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

நல்லிணக்கம் மற்றும் பேச்சுவார்த்தை தொடர்பாக அரச உயர் மட்ட அதிகாரிகளிடம் கேட்டறியுங்கள்.- என்றார்.

அதனைத் தொடர்ந்து பிரதிநிதிகளுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. ஓலையினால் செய்யப்பட்ட தட்டில் வைத்தே அவை வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வெளிநாட்டு விவகார அமைச்சின் இணைப்புச் செயலாளர் ஹம்லெத், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி, யாழ்.மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இராஜதந்திரிகள் யாழ். கோட்டை, புல்லுக்குளம், மத்திய கல்லூரி நீச்சல் தடாகம், இந்திய வீட்டுத் திட்டம் உள்ள அரியாலைப் பகுதி, நல்லூர் முருகன் கோயில், சங்கிலிய மன்னனது வளாகம் ஆகிய பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டனர்.

இந்தக் குழுவினர் யாழ். ஆயரைச் சந்திக்கும் நிகழ்வு இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது.

இராஜதந்திரிகளின் நிகழ்வுகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பங்குபற்றியிருக்கவில்லை. (ஒ-3)

## அபலை பெண்ணுக்கு நேர்ந்த கதி

தென்மராட்சி, பெப். 6

பெண் ஒருவரிடம் தவறாக நடந்து கொள்ள முற்பட்ட மூவர் ஊர் மக்களால் நையப்புடைக்கப்பட்டு சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் மீசாலை புத்தூர் வீதியில் வண்ணாத்திப் பாலத்தடியில் நேற்று இரவு 9.15மணிக்குஇடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோயில் மடத்தடிக்குச் செல்வதற்காக தனது குழந்தையுடன் வீதியில் நடந்து சென்ற குறித்த பெண் அவ்வழியாக வந்த ஹன்ரர் ரக வாகனத்தை மறித்து ஏறியுள்ளார்.

வாகனத்தின் பின்பகுதி மூடப்பட்டிருந்தது. அதில் பயணித்த மூன்று பேர் குறித்த பெண்ணுடன் தவறாக நடக்க முற்பட்டுள்ளனர். இதனைக் கண்டு குழந்தை கூச்சலிட்டு கத்தியுள்ளது.

குழந்தை குழறிய சத்தம் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் வீதியில் நின்ற இளைஞர்களுக்கு கேட்கவே அவர்கள் வாகனத்தை பின் தொடர்ந்து சென்று வண்ணாத்திப் பாலத்தடியில் மறித்துள்ளனர்.

இதன்போது வாகனத்துக்குள் ஒரு பெண்ணும் குழந்தையும்அழுதவாறு காணப்பட அவர்களிடம் சம்பவத்தைக் கேட்டு மூவரையும் குறித்த இளைஞர்கள் நையப்புடைத்தனர்.

பின்னர் அருகிலிருந்த இராணுவ முகாமிற்கு தகவல் கொடுத்து அந்த மூன்று பேரையும் இராணுவத்தினரிடம் ஒப்படைத்ததுடன் சாவகச்சேரி பொலிஸுக்குத் தகவல் கொடுத்தனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் மூன்று பேரையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று விசாரணைகளை நடத்திவருவதாக தெரிவித்தனர். அவர்கள் மூவரும் சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. குறித்த பெண் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் மடத்தில் தங்கியிருக்கும் ஏழைப் பெண்மணி எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-10-15-207)

## பூனேயில் நடக்கும் வாசனைத் திரவிய மாநாட்டில் இலங்கையும்

இந்தியாவில் பூனேயில் இடம்பெறவுள்ள சர்வதேச இந்திய வாசனை திரவிய மாநாட்டில் இலங்கையும் பங்குகொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் 200ற் கும் மேற்பட்ட வெளிநாட்டு மற்றும் 250ற்கும் மேற்பட்ட இந்திய வர்தகர்களும் கலந்து கொள்வர் என்று அறிவிக்கப்படுகிறது.

11 வது வருடமாக இடம்பெறும் இந்த வாசனை திரவிய பொருள் மாநாட்டின் மூலம் மேலதிக ஏற்றுமதி வர்தக கட்டலைகள் கிடைக்கும் என இந்திய வர்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மாநாட்டில் கனடா, நெதர்லாந்து, இலங்கை, சுவிடன், பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா, மலேசியா, தென்னாபிரிக்கா, சிரியா, ஆஸ்திரேலியா, சீனா உட்பட ஏறாளமான நாடுகள் கலந்து கொள்ளவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-15)

# விபத்துக்களில் பாதிக்கப்பட்டோரின் உரிமையை பாதுகாக்க நடவடிக்கை

கொழும்பு, பெப். 6

வாகன விபத்துகளின் ஊடாக பாதிக்கப்படும் பாதசாரிகளின் உரிமைகளை பாதுகாத்துக் கொள்ளும் விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்தவுள்ளதாக சட்ட உதவி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இதுவரை உரிய வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவில்லை என ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி எஸ்.எஸ்.விஜேரத்ன தெரிவித்துள்ளார்

வீதி விபத்துகளை எதிர்நோக்கும் பாதசாரிகள் நட்ட ஈட்டை பெற்றுக் கொள்வதற்காக செல்லும் வேளையில் பல்வேறு அசாதாரண நிலைமைகளை எதிர்நோக்குகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையை போன்றே வாகனங்களினால் விபத்துக்குள்ளாகுபவர்களின் எண்ணிக்கை கடந்த 3 மாதங்களில் 60 தொடக்கம் 70 வீதம் வரை அதிகரித்துள்ளதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாகன விபத்துக்குள்ளாகும் நபர்களுக்கு நட்ட ஈட்டை பெற்றுக் கொள்வதற்கு சட்ட ரீதியில் வலுவான உரிய முறையொன்று இல்லை எனவும் சட்டத்தரணி எஸ்.எஸ்.விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி, வாகன விபத்துகளை எதிர்நோக்கும் நபர்கள் காப்புறுதி நிறுவனத்தின் ஊடாக தமது நட்ட ஈட்டை பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மாணவியை கடத்தியவர் கைது

12 வயதான பாடசாலை மாணவியை ஒருவரைக் கடத்திச் சென்று தடுத்து வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 31 ஆம் திகதி குறித்த மாணவி பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது ஓட்டோவில் வந்த குறித்த நபர் மாணவியைக் கடத்திச் சென்று ரத்தோட்டை பிரதேசத்திலுள்ள வனப் பிரதேசத்தில் தடுத்து வைத்துள்ளார்.

மாணவியைக் கடத்தியவர் முன்னாள் இராணுவச் சிப்பாய் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பிரிட்டனில் தமிழ்ப் பெண் மாயம்; தேடுதல் வேட்டையில் பொலிஸார்

பிரிட்டனில் 31 வயதான தமிழ்ப் பெண் ஒருவர் காணாமற் போயுள்ளார். குளோசிஸ்டர், கொனி ஹில் பகுதியில் வசித்து வந்த, இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட கோகுலவதனி மயூரன் என்ற பெண்ணே கடந்த 31 ஆம் திகதி தொடக்கம் காணாமற்போயுள்ளார் என அந்நாட்டுப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக விசாரித்து வரும் பிரிட்டன் பொலிஸார், அவரைக் கொலை செய்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் அதே பகுதியைச் சேர்ந்த 31 வயதான ஆண் ஒருவரை கைதுசெய்தனர். எனினும் விசாரணைகளின் பின்னர் குற்றச்சாட்டுகளின்றி அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

காணாமற்போன பெண்ணின் நலன் குறித்து தாம் பெரிதும் கவலை கொண்டுள்ளார் எனவும், அவர் பற்றி தகவல் கிடைத்தால் உடன்தொடர்பு கொள்ளுமாறும் பிரிட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த வவுனியாவில் தீவிர நடவடிக்கை

வவுனியா, பெப்.6

வவுனியா நகரப்பகுதியில் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் வவுனியா மாவட்ட சுகாதாரப் பிரிவினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

குருமன்காடு, வைரவப் புளியங்குளம், இறம்பைக் குளம், பஸ் நிலையப் பகுதி, காளிகோயிலடி மற்றும் ரயில் நிலையப் பகுதி ஆகிய இடங்களில் டெங்கு நுளம்பு பெருகக் கூடிய இடங்களை இனங்கண்டு அப்பகுதி களுக்குத் தினமும் புகையூட்டும் நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டு வருகின் றனர்.

சுகாதாரப் பிரிவினரின் இந்த நடவடிக்கையினால் வவுனியா நகரை அண்டிய பகுதிகளில் டெங்கு நோய் பரப்பும் நுளம்பின் பெருக்கம் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து வீடு வீடாகச் சென்று பரிசோதனை செய்கின்றனர். டெங்கு நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவான சூழ்நிலை காணப்படும் வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கையிலும் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கைகள் அண்மைக்காலமாக நெளுக்குளம், கூமாங்குளம், பண்டாரிக்குளம், வைரவப் புளியங்குளம் போன்ற பகுதிகளில் தீவிரமாக இடம் பெற்று வருகின்றன. (க - 400)

# வடக்கு அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு கூட்டமைப்புக்கு உரிய அழைப்பு இல்லை

### தாம் கலந்துகொள்வதற்கான சாத்தியமில்லை என்கிறார் சுரேஷ்

கொழும்பு, பெப். 6

வடமாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொள்வதற்றான சாத்தியம் இல்லை எனவும் தமக்கு முறையான அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

அபிவிருத்திக்குழுக் கூட்டம் தொடர்பில் அரசு, முன்கூட்டியே உரியவகையில் அறிவிக் காததன் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். அரசின் திட்டமிட்ட புறக்கணிப்பு நடவடிக்கையும் [illegible] கக் கூடும் என்றும் அவர் சந்தேகம் வெளியிட்டார்.

வடமாகாண அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று காலை யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ளுமா என்றும், அரச தரப்பிலிருந்து அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதா என்றும் கேட்டபோதே சுரேஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு-

வடமாகாண அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை (இன்று) நடைபெறும் என்று அரச தரப்பு இன்று மாலைதான் [illegible] அறிவித்தல் [illegible] தொலைபேசி ஊடாக அறிவிக்கப்பட்டதே தவிர உரியமுறையில் எழுத்து மூலம் அழைப்பு விடுக்கப்படவில்லை. அறிவிக்கப்படவுமில்லை.

குறித்தக் கூட்டம் தொடர்பில் கூட்டமைப்புக்கு அரசு முன்கூட்டியே உரிய வகையில் அறிவிக்காததால் அந்தக் கூட்டத்தில் எமது கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்வதற்கான சாத்தியம் இல்லை என்றே நான் கருதுகின்றேன்.

ஏனெனில், எமது உறுப்பினர்கள் வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இடம்பெறும் மக்கள் சந்திப்புக்களில் கலந்துகொள்வதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது. எனவே, திடீரென இவ்வாறு முறையற்ற வகையில் அறிவிக்கப்பட்டால் கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வது கடினமாகவே இருக்கும்.



அரசு தமது தரப்பை நியாயப்படுத்துவதற்காக பல்வேறு சாக்குப்போக்குகளைக் கூறலாம். ஆனால் அதனை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளக்கூடாது என்ற எண்ணத்தில் அரசு இவ்வாறு செய்துள்ளதோ என எண்ணத் தோன்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# பெரும் பீடை வளரத்தான் வேண்டுமா இந்த நாட்டில்?

• இலங்கையில் எந்த ஒரு பிரதேசமும் எந்த ஓர் இனத்துக்கும் சொந்தமானது அல்ல. முழு நாடும் அனைவருக்கும் சொந்தமானது. எல்லோருக்கும் பொதுவானதே நமது நாடு.

• நாட்டில் சமாதானத்தை நிலைநிறுத்துவது, தனி ஒருவரினால் செய்யப்படக்கூடிய ஒன்றல்ல. அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். இந்த உண்மையைச் சகலரும் புரிந்து கொள்வது அவசியம்.

• கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, தனது அறிக்கையில், கடந்த காலப் பிரச்சினைகளுக்கு அனைவரும் பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறது. எமது மனச்சாட்சியின்படி, நாம் அனைவரும் அதனை ஏற்றுக்கொண்டு தான் ஆகவேண்டும்.

• தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்போது, மக்களால் உருவாக்கப்பட்ட நாடாளுமன்றத்தை ஒதுக்கிவிட முடியாது.

• நாட்டின் சட்டம், நீதி அனைத்துக்கும் பணிந்து நடப்பது போலவே, ஜனநாயக சக்தியான நாடாளுமன்றுக்கும் நாம் கட்டுப்பட்டுச் செயற்பட வேண்டும்.

• ஜனநாயக நீரோட்டத்தில், தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் சக்தி, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு மட்டுமே உண்டு.

தேசத்தின் அறுபத்து நான்காவது சுதந்திரதின விழா, நேற்று முன்தினம் அநுராதபுரத்தில் நடைபெற்றவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு ஆற்றிய உரையின் ஏழு துளிகள், அம்சங்கள் இவை.

இனப்பிரச்சினைக்கான தீர்வு நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலமே காணப்பட வேண்டும். வேறு எந்த மாற்று வழிகள் மூலமாகவும் அல்ல என்பதில், ஜனாதிபதி மிகத் தெளிவாக இருக்கிறார் என்பதனையே அவரது உரை அழுத்தமாகப் புலப்படுத்துகிறது; ஆணித்தரமாக உணர்த்துகிறது.

தீர்வை வகுப்பதில் பிரதான பங்காளிகளாக விளங்க வேண்டியவை ஆளும் தரப்பும் தமிழர் தரப்பும் என்பதும் எவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய - ஏற்றுக்கொள்ள வேண்டிய - நியாயமாகும்.

ஜனாதிபதி மிகப் பகிரங்கமாக, நாட்டின் சுதந்திரதின விழாவில் நாடாளுமன்றத்தின் மூலமான தீர்வை ஊன்றி வலியுறுத்தி இருப்பதால், அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் (தமிழர் தரப்புப்) பேச்சு முற்றாகத் தொப்பெனப் (*Abrupt*) போடப்பட்டாயிற்று என்ற நிலைப்பாட்டையே பிரதிபலிக்கிறது.

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின்போது, தமிழர் தரப்பின் நியாயமான கோரிக்கைகள் எதனையும் உரியவாறு பரிசீலனைக்கு எடுக்காமல்-

காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறி, முகத்தை அடுத்த பக்கம் நோக்கித் திருப்பி வைத்திருக்கிறது அரசு.

ஜனாதிபதியின் மேற்காட்டப்பட்ட உரை, விருப்பமானால், "ஜனநாயக" முறைப்படியான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வந்து பேசுங்கள்; உங்கள் நிலைப்பாட்டைத் தெரிவியுங்கள்; அங்கு ஏற்றுக்கொள்ளப்படும் தீர்வு வடிவம் ஒன்றுக்கு ஆதரவு தாருங்கள். அப்போதுதான் உங்கள் மீது, தமிழ் மக்கள் மீது ஒரு தீர்வைத் திணிக்க முடியும் என்ற தோரணையில் புத்திமதி கூறுவது போன்று அமைகிறது! அல்லவா...?

— தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசாங்கத்துடன் ஒரு வருடத்துக்கும் மேலாகப் பேசிவிட்டது. ஆயினும் பேச்சில் எட்டப்பட்ட தீர்மானம் எதனையும் - ஒன்றையாவது - இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை. அவை வெறும் தீர்மானங்களாகவே உள்ளன. இந்த நிலையில் அரசுடன் எப்படித் தொடர்ந்து பேசுவது?

— இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்ன என்பதனை அரசு எம்மிடம் தெரிவிக்க வேண்டும். அதன்.பின்னரே தெரிவுக்குழு குறித்து நாம் யோசிப்போம். அதுவரை நாம் அக்குழுவுக்குச் செல்ல மாட்டோம்.

— சர்வதேச நாடுகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசியே, இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன. அதனாலேயே, கூட்டமைப்பைத் தெரிவுக்குழுவுக்கு இழுப்பதில் அரசாங்கம் குறியாக உள்ளது.

இவ்வாறு மஹிந்தவுக்குப் பதில் அளிப்பது போன்று, ஒரே நாளில் - இலங்கையின் சுதந்திர தினத்தன்று - சம வேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திருகோணமலையில் வைத்துக் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

ஜனாதிபதிக்குப் பதில் அளிக்கும் வகையிலும் சம்பந்தனின் பேச்சு அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

தமிழர் தரப்பின் நியாயங்களை, நியாயமான கோரிக்கைகளை வழங்கி, நாட்டின் இனங்களுக்கு இடையே நல்லுறவையும் சமாதானத்தையும் உண்டாக்குவதற்கு உகந்தவேளை இது என்பதனைப் பொருட்படுத்திச் செயற்பட முன்வராமல்-

பெரும்பான்மையினர் என்பதனால், சிறுபான்மை இன மக்களைத் தமது எண்ணிக்கைப் பலத்தினாலும் ஆட்சிப் பலத்தினாலும், மிதித்து நசுக்கலாம் என்ற நச்சு கலந்த உத்தியைக் களைந்துவிடும் மனப்பாங்கு தெற்கின் தலைவர்களிடம் எப்போதுமே வரமாட்டாது என்பதனை ஜனாதிபதியின் உரை தொட்டுக் காட்டுகின்றது.

தமிழ் மக்கள் இந்த நாட்டின் ஒரு தேசிய இனம் என்றும் சம்பந்தன் சுட்டிக் காட்டியிருப்பதும் நோக்கற்பாலதாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் (1996ஆம் ஆண்டின்) சர்வதேச சிவில் அரசியல் உரிமை தொடர்பான சமவாயத்தின் (*International Convention for Civil and Political Rights*) பிரகாரம்-

* தேசிய இனம் ஒன்றுக்கு உள்ளக சுயநிர்ணய உரிமை, வெளியக சுயநிர்ணய உரிமை உண்டு.

* அதேபோன்று, தேசிய இனம் தனது சமூக, கலை, கலாசாரத்தைப் பின்பற்றவும் உரிமை உண்டு.

* சிறுபான்மை இனங்களின் உரிமைகளைச் சம்பந்தப்பட்ட நாட்டின் அரசு பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால் எமது நாட்டில் அந்த உரிமைகளைத் தறுக்கணிக்கும் கயமைத்தனமான போக்குகளே கடந்த பல தசாப்தங்களாகத் தலை உயர்த்தி நிற்கின்றன.

சிங்களச் சகோதரர்களைப் போலவே இங்கு பன்னெடும் காலமாக, சந்ததி சந்ததியாகத் தமிழர்களும் வாழ்கிறார்கள். அவர்களுக்கென, தனித்துவமான, மொழி, கலை, கலாசாரம், பண்பாடுகளையும் அவற்றுக்கான அடையாளங்களையும் கொண்ட மூத்த குடிமக்கள் தமிழர்கள், என்பதனை சிங்கள அரசியல் தலைவர்களும், அவர்கள் வழியாகத் தென்னிலங்கை மக்களும் சகவாழ்வுக்கான நல்லெண்ணத்துடன் புரிந்து கொள்ள மாட்டார்களா?

அதற்கான காலம் கனியும் என்று சிறிதளவான நம்பிக்கை தானும் துளிர்ப்பதற்கான அறிகுறி, தூரத்தேயேனும் தென்படாதிருப்பது, இந்த நாட்டைப் பீடித்த பெரும் பீடையாகவே, வளரத்தான் வேண்டுமா?

# மீளக்குடியமர அனுமதிக்கப்படாத காணிகளில் சட்டவிரோத மண் அகழ்வு

மீளக்குடியமர அனுமதிக்கப்படாத கிளாலி மேற்கு, தரவை மேற்கு ஆகிய பகுதிகளில் பொதுமக்களின் காணிகளில் சட்டவிரோதமாக மண் ஏற்றும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகக் காணி உரிமையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளாலி மேற்கு, தரவை மேற்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பங்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்படாத காரணத்தால் உறவினர் வீடுகளிலும், கைவிடப்பட்ட காணிகளிலும், பளைப் பிரதேசத்தில் குடியமர்ந்துள்ளன.

இந்த நிலையில் தமது காணிகளைப் பார்வையிடுவதற்கு மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளதால் அண்மைக்காலமாக தமது காணிகளுக்குச் சென்று துப்புரவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் போது ஏற்கனவே குடிமனைகள் அமைக்கப்பட்ட இடங்கள் சிதைக்கப்பட்டு அதே இடத்தில் மண் அகழ்வும் இடம் பெற்றிருப்பதை அவதானித்துள்ளனர் இந்த நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படாமல் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருவதாக நேரில் கண்ட காணி உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர் எனினும் தடுக்க முடியாமல் உள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த இரு பிரதேசங்களிலும் மீளக்குடியமர அனுமதி வழங்கப்படாத காரணத்தால் தமது காணிகளில் மண் அகழ்வு இடம்பெறுவதை யாரிடமும் முறையிட முடியாத நிர்ப்பந்தங்களுக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-14)

# சிற்றூர்திச் சேவைகளுக்கான புதிய அனுமதிகள் நிறுத்தம்

## இணையத் தலைவர் கெங்காதரன் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் தேவைக்கு மேலதிகமான சிற்றூர்திகள் சங்கங்களினால் பதிவு செய்யப்பட்டிருப்பதால் புதிய சேவைக்கு அனுமதி வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளது யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் சங்கங்களின் இணையத்தவைர் பொ. கெங்காதரன் இதனைக்கூறியுள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு அமைவாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் காலாவதியான பயணிகள் சேவை அனுமதியைப் புதுப்பித்து வழங்குவது முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, சிற்றூர்திகள் சேவையில் ஈடுபடாத பாதைகள், மக்கள் மீளக்குடியமர்வு செய்யப்பட்ட இடங்களில் சேவை வழங்கப்படுவதற்கும் எதிர்வரும் டிசம்பர் மாதம் அனுமதி வழங்கப்படவுள்ளது.

அதுவரை சங்கத்தில் சேவையில் ஈடுபடும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் பெற்ற சிற்றூர்திகள் இணையம் ஊடாக யாழ். மாவட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் அனுமதியைப் பெற்று சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-14)

# நகுலேஸ்வரர் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று

சரித்திரப் பிரசித்தி பெற்ற நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வர சுவாமி ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறுகிறது.

கிரியைகள் கடந்த மாதம் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. நேற்று ஞாயிற்றுக்கிழமை எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம் பெற்றது.

இன்று திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு தூபிகளுக்குக் கும்பாபிஷேகம் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து முற்பகல் 9.30 மணிக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறும். மாலை 5 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் இடம் பெறும். மகாகும்பாபிஷேகப் பூசை வழிபாடுகள் ஆலயத்தின்பிரதானகுரு சிவஸ்ரீ ந.குமாரசாமிக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (அ-14-86)

### மகா கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புறுக

*இன்று நடைபெறும் அருள் பெருக் கும் கீரிமலை நகுலேஸ்வரம் ஸ்ரீ நகுலாம்பிகை சமேத ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமானின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா இனிதே சிறப்புற எல்லாம்வல்ல மாவை முருகப் பெருமானை வேண்டுகின்றோம். சகல அடியார்களுக்கும் ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.*

மகாராஜ ஸ்ரீ
ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்,
ஆதீன கர்த்தா, பிரதம குரு, கந்தசுவாமி தேவஸ்தானம், மாவையாதீனம், மாவிட்டபுரம்.

(வர்ணச் சிறப்புமலர் உள்ளே...)

# வெளிநாட்டுப் பறவைகளுடன் இலங்கை வந்தவருக்கு அபராதம்

வனம் சார் தாவரங்கள் மற்றும் வனவாழ் உயிரினங்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் எட்டு லட்சம் பெறுமதி கொண்ட எட்டு வெளிநாட்டுப் பறவைகளை இலங்கைக்கு எடுத்துவந்த விமானப் பயணி ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டாம் திகதி அதிகாலை பாங்கொக்கிலிருந்து கட்டுநாயக்காவுக்கு வந்திருந்த விமானமொன்றில் இந்தப் பறவைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அவற்றின் சொண்டுகளை பசை நாடாக்கள் கொண்டு ஒட்டி, துளையிடப்பட்ட அட்டைப் பெட்டிகளுக்குள் வைத்து பின் பயணப் பையில் வைத்து இவை எடுத்து வரப்பட்டிருந்தன.

சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பைச் சேர்ந்தவர் எனவும் கூறப்படுகிறது. இதற்கு முன்னர் பல தடவைகள் இவர் சிங்கப்பூர் கொழும்பு இடையிலான விமானப் பயணங்களை மேற்கொண்டிருந்தவர் எனவும் நீண்ட நாள் கண்காணிக்கப்பட்டதன் பின்னரே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுங்க அதிகாரிகளால் இவருக்கு ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதோடு கைப்பற்றப்பட்டுள்ள பறவைகளை விமான சேவையூடாக மீளவும் பாங்கொக்குக்கு அனுப்பி வைப்பதற்கு சுங்கத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்தனர்.

உலகம் முழுவதிலும் பறவைக் காய்ச்சல் பரவி வருவதன் காரணமாக இத்தகைய சுற்றிவளைப்புக்களை கடுமைப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளது - என்று விமானநிலைய சுங்கப் பிரிவு தெரிவிக்கிறது.(ம-22)

# விவசாய அபிவிருத்திக்கு 22.2 மில். அமெ.டொலர்

யாழ்ப்பாணம், பெப்.6

சர்வதேச விவசாய அபி விருத்தி நிதியத்தால் வடமாகாண விவசாயத்துறை அபிவிருத்திக்கு 22.2 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் பெரும்பான்மையானோர் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மீளக்குடியமர்வு செய்யப்பட்ட பிரதேசங்களில் பெருமளவு விவசாய நிலங்கள் தரிசு நிலங்களாகக் காணப்படுகின்றன. இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்குடன் சர்வதேச விவசாய அபிவிருத்தி நிதியம் அதற்கான நிதியை வழங்க வுள்ளது.

இந்த நிதி மூலம் வடமாகாணத் தில் விவசாயிகள் தமது விளை நிலங்களில் உற்பத்திகளைப் பெருக்கி அதற்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீடு தொடர்பான ஒப்பந்த உடன்படிக்கை இத்தாலியில் உள்ள இலங்கைத் தூதுவர் அசித்த பெரேராவுக்கும் சர்வதேச விவசாய அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் கனயானுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம - 14)

# நிகழ்வுகள் இன்று

**சின்னம் சூட்டல்**

மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலய மாணவத் தலைவர்களுக்கு சின்னஞ் சூட்டும் நிகழ்வு காலை 8 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீ காந்தரூபனும் சிறப்பு விருந்தினராக இளைஞர் நாடாளுமன்ற தென்மராட்சி பிரதேச உறுப்பினர் எஸ்.ரி.விமலும் கலந்து கொள்வர். (ம-9)

**வழிகாட்டல் கருத்தரங்கு**

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கான முதலாவது விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கான வழிகாட்டல் கருத்தரங்கு பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இதில் யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடபதில் பீடாதிபதி வி.பி.சிவநாதன், கணக்கியல்துறைத் தலைவர் கே.அருள்வேல் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.(ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிக்கப்படுகின்றன வளங்கள் அபிவிருத்தி தான் இல்லை

கிளிநொச்சி, பெப்.6

கிளிநொச்சி மாவட்டத்தின் வளங்கள் அழிக்கப்படுவதற்கு ஏற்ப அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதில்லையென இங்குள்ள பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

**கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான வளங்களான மணல், கிரவல், பயன்தரு காட்டுமரங்கள் என்பன அழிக்கப்படுவதற்கு ஏற்ப அபிவிருத்திகள் இல்லை.**

கிளிநொச்சி மாவட்டத்தின் இயற்கை வளங்களான மணல், மரங்கள் என்பன அதிகளவில் பல்வேறு தரப்புக்களாலும் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆனால் அதற்கேற்ப அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதில்லை.

அதாவது பூநகரியின் கௌதாரிமுனையில் உள்ள மாவட்டத்தின் முக்கிய வளங்களில் ஒன்றான மணல் வளம் பல்வேறு தரப்பினராலும் சட்டவிரோதமான முறையிலும், அரசியல் செல்வாக்குகள் மூலமும் தினமும் பெருமளவில் கொண்டு செல்லப்படுகின்றன.

ஆனால் அந்தக் கிராமத்தில் வாழுகின்ற குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன. அத்துடன் பூநகரியை அண்டிய பகுதிகளில் உள்ள மக்கள் தமது கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணலைப் பெற்றுக் கொள்வதில் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதைப் போன்று முட்கொம்பன், கண்ணகைபுரம், வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடுநகர் ஆகிய பகுதிகளில் தேவையான மணல் வளம் உள்ளபோதும் இங்குள்ள மக்கள் தமக்கு தேவையான மணலை அதிகூடிய விலை கொடுத்துப் பெறவேண்டிய நிலை காணப்படுகின்றது. இங்குள்ள மணல் வளம் 'நீலப் படையணி' என்ற அமைப்பின் மூலம் சட்டவிரோதமான முறையில் அபகரித்துச் செல்லப்படுகின்றது.

இதைவிட ஜெயபுரம், வன்னேரிக்குளம், முழங்காவில், ஆனைவிழுந்தான் போன்ற இடங்களில் உள்ள பெறுமதி வாய்ந்த காட்டு மரங்கள் சில அரசியல் வாதிகளதும், அதிகாரிகளினதும் செல்வாக்கையும், பெயரையும் பயன்படுத்திச் சட்டவிரோதமான முறையில் கொண்டு செல்லப்படுகின்றன.

ஆனால் இந்த மாவட்டத்தில் இடம்பெற்ற யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான வளங்களை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான வளங்களான மணல், கிரவல், பயன்தரு காட்டுமரங்கள் என்பன அழிக்கப்படுவதற்கு ஏற்ப அபிவிருத்திகள் இல்லையென மாவட்டத்தின் பல்வேறு தரப்பினரும் கவலை தெரிவித்துள்ளனர். (க-6)

# 100 ஆண்டுகளில் புதிய சாதனை

அக்கராயன், பெப்.6

*பாடசாலையின் 100 ஆண்டுகால வரலாற்றில் மாணவியொருவர் முதன் முறையாக தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.*

*கிளிநொச்சி மாவட்டம் பூநகரி வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலையில் முதன் முறையாக மாணவி மேரி விதுசா 152 புள்ளிகளைப் பெற்றுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். 100 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட இந்தப் பாடசாலையில் இம்முறைதான் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.*

*பூநகரிக் கல்விக் கோட்டத்திலே மிகவும் பின் தங்கிய கிராமத்திலே இந்தப் பாடசாலை அமைந்துள்ளது. இங்கு 217 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 8 ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபட்டுள்ளனர்.*

*கிளிநொச்சி நகரின் மேற்குப் பகுதியிலிருந்து 64 கிலோ மீற்றர் தூரத்திலே பூநகரிக் கடற்கரையில் இந்தப் பாடசாலை அமைந்துள்ளது.*

*இந்த மாணவிக்குத் திருமதி மேரி. றொக்சி என்ற ஆசிரியை கற்பித்து வந்துள்ளார்.*

*மேலும் இந்த மாணவியின் சாதனையை ஊரிலுள்ள அனைவரும் பாராட்டியுள்ளனர். (க-410)*

# எளிமையான முறையில் சுதந்திர தின நிகழ்வுகள்

கிளிநொச்சி, பெப்.6

இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகள் கிளிநொச்சியில் எளிமையாகக் கொண்டாடப்பட்டுள்ளன.

அரச நிறுவனங்கள், பாடசாலைகள் என்பவற்றில் காலை 8.50 மணியளவில் தேசியக் கொடி ஏற்றி வைத்ததுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தேசியக் கொடியை ஏற்றி வைத்து சுந்திர தின நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

இதில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வலயக் கல்விப் பணிமனையின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதைப் போன்றே இங்குள்ள பாடசாலைகளிலும் சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பிரதி அதிபர் திருமதி கெங்காதேவி ஜெயராஜ் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இதனைப் போன்றே ஏனைய பாடசாலைகளிலும் சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெற்றன. இதேவேளை வவுனியாவிலும் சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. வவுனியா மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

மேலும் அரச நிறுவனங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றிலும் தேசியக் கொடி ஏற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. (க-405-421)



*கரைச்சிப் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன் புரி சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அரச அதிபர் திருமதி றாபவதி கேதீஸ்வரன் உத்தியோகத்தர் ஒருவருக்கு பரிசளித்துக் கௌரவிக்கும் போது கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் அருகில் காணப்படுகின்றார். (121)*

# மல்லாவிப் பிரதேசத்தில் கொள்ளைச் சம்பவங்கள்

துணுக்காய், பெப்.6

மல்லாவிப் பிரதேசத்தில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

**கொள்ளையர்கள் கறுப்பு நிறத் துணியால் தம்மை உருமறைப்புச் செய்ததுடன், தலைக் கவசமும் அணிந்திருந்தனர்.**

முதலாவது சம்பவம் மல்லாவி யோகபுரம் மத்தியில் நேற்று முன்தினம் இரவு 11.30 மணி யளவில் இடம்பெற்றுள்ளது. கொச்சைத் தமிழில் பேசிய மூன்று பேரைக் கொண்ட கொள்ளையர்கள் யோகபுரம் மத்தி குஞ்சுக்குளம் கிராமத்திலுள்ள நமசிவாயம் ஸ்ரீகரன் என்பவரது வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்தவர்களைக் கத்தி முனையில் பணயமாக வைத்து வீட்டினுள் வைக்கப்பட்டிருந்த நகை முழுவதையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

பின்னர் 11.42 மணியளவில் திருநகர் 4 ஆம் யூனிட் என்னுமிடத்திலுள்ள வே.பத்மநாதன் என்பவரின் வீட்டினுள் நுழைந்த கொள்ளையர்கள் கொள்ளையிட முயற்சி செய்துள்ளனர்.

ஆனால் வீட்டிலுள்ளவர்கள் பலத்த எதிர்ப்புக் காட்டியுள்ளனர். இதில் கொள்ளையர்களின் தாக்குதலில் 51 வயதான பத்மநாதன் ராகினி காலில் காயமடைந்துள்ளார்.

அத்துடன் 23 வயதான பத்மநாதன் தர்ஷி என்ற இளம் பெண்ணும் முதுகில் தாக்கப்பட்டுள்ளார். சத்தம் கேட்டு அயலவர்கள் அங்கு கூடவே கொள்ளையர்கள் தயாராக நின்ற ஓட்டோவில் தப்பியோடி விட்டனர்.

கொள்ளையர்கள் கறுப்பு நிறத் துணியால் தம்மை உருமறைப்புச் செய்ததுடன், தலைக் கவசமும் அணிந்திருந்தனர்.

மாங்குளம் பொலிஸார் இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க)

# அடிப்படை வசதிகள்

மன்னார், பெப்.6

மன்னார் விடத்தல்தீவு சுகாதார நிலையம் அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொண்டுள்ளது.

போர் முடிவுக்கு வந்து மக்கள் மீள் குடியமர்ந்துள்ள போதிலும் இந்தச் சுகாதார நிலையம் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி இயங்கி வந்தது.

இந்தப் பிரதேசத்தின் மருத்துவ மாது மற்றும் மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக மாந்தை மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் ஜேம்ஸ் சுதாகரன் உரிய அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதன் பயனாகக் கடந்த மாதம் விடத்தல்தீவு சுகாதார நிலையத்துக்குரிய அனைத்து அடிப்படை வசதிகளும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஜி. குணசீலன் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவை தொடர்பாகப் பிரதேச மக்களும், பிரதேச சபை உறுப்பினரும் தமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார். (க)

# பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரி

முல்லைத்தீவு, பெப்.6

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மல்லாவி மத்திய கல்லூரியின் பொன் விழா எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை, முற்பகல் 9மணியளவில் கல்லூரி முதல்வர் து.யேசுதானந்தர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலர் இ.இளங்கோவனும், சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன், வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாகத் துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதிலூட்ஸ்மாலினிவெனிற்றன், துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன், ஆலங்குளம்653ஆவதுபடைப்பிரிவை சேர்ந்த லெப் கேணல் ஏ.எம். என்.வி.ஹேரத், மல்லாவி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி.ஐ. ஹெட்டியாராச்சி ஆகியோரும் கலந்து கொள்வர்.

விருந்தினர்கள் அழைத்து வரப்பட்ட பின்னர் சரஸ்வதி சிலை, சிறப்புக் கல்விக் கூடம், கூடைப்பந்தாட்ட மைதானம் என்பன திறந்துவைக்கப்படவுள்ளன. தொடர்ந்து பொன் விழா மலர் வெளியீடும் மாணவர், ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வுகளும் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு, கலைநிகழ்வு என்பனவும் இடம்பெறவுள்ளன.

துணுக்காய் கல்வி வலயத்தில் முன்னணிப் பாடசாலையான மல்லாவி மத்திய கல்லூரி பொன் விழா கொண்டாடுவது துணுக்காய் வலயப் பாடசாலைகள், மாணவர்கள் பெற்றோர்கள் மத்தியிலும் பெரும் மகிழ்வை ஏற்படுத்தி உள்ளது. பொன் விழாவுக்கான ஏற்பாடுகளில் பாடசாலைச் சமூகத்தினர் உற்சாகத்துடன் செயல்படுவதைக் காணமுடிகின்றது. (க-18,16)

# கிளிநொச்சியிலும் ஆணைக்குழு

கிளிநொச்சி, பெப்.6

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகம் வாரத்தில் இரு நாள்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் தனது சேவைகளை வழங்க உள்ளது.

இந்த அலுவலகத்தை அமைப்பதற்கான இடத் தெரிவு தற்போது இடம்பெறுகின்றது. கிளிநொச்சி மாவட்ட மக்கள் யாழ்ப்பாணம் வந்து ஆணைக்குழுவின் சேவைகளைப் பெறுவதில் எதிர்நோக்கும் பயணக்கஷ்டங்கள் இதன் மூலம் நீக்கப்படுமெனக் கரைச்சிப் பிரதேச செயலக வெளிக்கள [illegible] போது [illegible] தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது. (க-121)

# வெற்றிடங்களுக்குத் தீர்வு

கிளிநொச்சி, பெப்.6

கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் நிலவும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கான வெற்றிடங்கள் அடுத்த மாதமளவில் நிரப்பப்பட்டு விடுமென கிளிநொச்சி மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பா.கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

**கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்தில் ஐந்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதனால் அந்தப் பகுதிகளின் சுகாதார நடவடிக்கைகளில் பிரச்சினைகள் காணப்படுகின்றன.**

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்தில் ஐந்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதனால் அந்தப் பகுதிகளின் சுகாதார நடவடிக்கைகளில் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் கடந்த 27 ஆம் திகதி திங்கட் கிழமை பூநகரிப் பிரதேசத்துக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பா.கார்த்திகேயன், பூநகரி பிரதேசத்தில் நிலவி வரும் பொதுச் சுகாதார பரிசோதகர் பதவிகளுக்கான வெற்றிடங்கள், மார்ச் மாதம் அளவில் நிவர்த்தி செய்யப்பட்டு விடுமெனத் தெரிவித்துள்ளார். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளின் ஒய்வூதிய நிதியை நிலுவையுடன் விரைவில் தாருங்கள்

## ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், பெப்.6
நாடு தழுவிய ரீதியில் 98 ஆயிரம் விவசாயிகளின் ஒய்வூதிய நிதியை உரிய ஒய்வூதிய நிலுவையுடன் உடன் வழங்க வேண்டும். இவ்வாறு யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளன தலைவர் க.முதலியார் கடிதம் மூலம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடு தழுவிய ரீதியில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டமான 'ஒய்வூதியம்' தற்போது இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது.

இந்தநிதியைகையாண்டு வந்த விவசாய அமைச்சும் காப்புறுதி நிறுவனமும் தம்மிடம் இருந்த நிதியை ஜனாதிபதி அபிவிருத்திக்கு எடுத்து விட்டதாக தெரிவித்துள்ளார்.

இதனால் நாடு தழுவிய ரீதியில் 98 ஆயிரம் ஒய்வூதியர்கள் தமது அடிப்படை ஒய்வூதியமான ஆயிரம் ரூபாவை இழந்துள்ளனர்.

இதனால் கடந்த 3 மாதம் ஒய்வூதியப் படி இன்றி அவதியுறுகின்றோம்.

விவசாய ஒய்வூதியர்கள் 1987 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் விவசாயிகளாக சேர்க்கப்பட்டவர்கள் தற்போது கடந்த மூன்று மாதங்கள் ஒய்வூதியம் வழங்கப்படாது உள்ளது.

அத்துடன் ஒய்வூதியம் நிறுத்தப்பட்டது தொடர்பாக விவசாயிகளுக்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை.

2012 அபிவிருத்தி ஆண்டாக ஜனாதிபதி பிரகடனம் செய்து விட்டு எமது அடிப்படை ஒய்வூதியத்தை நிறுத்தியது உண்மையான அபிவிருத்தி அல்ல.

எனவே வழங்கப்படாத ஒய்வூதியத்தை 98 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கி விவசாயிகளின் வாழ்வுக்கு ஒளியேற்ற முன்வர வேண்டும் - என்றுள்ளது.

இந்த கடிதங்களின் பிரதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம)

## யாழ். மண்ணில் கால் பதிக்கும் ஜனாதிபதியிடம் ஒரு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், பெப்.6
இலங்கையின் 64 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இந்த வருடத்தில் தமிழர் தாயக பூமியில் கால்பதிக்கும் நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எமது மக்கள் வரவேற்கிறார்கள்.

இன்று யாழ். மண்ணில் கால்பதிக்கும் ஜனாதிபதி மக்களுக்கு என்ன புதிய செய்தியை வெளிப்படுத்துவார் என்று மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்த வகையில் பின்வரும் கோரிக்கைகளை மக்கள் முன்வைக்க விரும்புகிறார்கள்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்த மாகாணங்களாக இணைந்திருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை அரசியல் பிரச்சினையாக்காது உடன் நடத்தி முடிக்க வேண்டும்.

தமிழ்மொழி மூலமான ஆளுநரை உடன் நியமிக்க வேண்டும்.

மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து நிறைவு செய்து கொடுக்கக்கூடிய ஆளுநரை அரசியல் பந்தமில்லாத வரை உடன் நியமிக்க வேண்டும்.

மாகாண நிர்வாகம் அரசியல் தலையீடு இன்றிச் செயற்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

## ஜனாதிபதியின் வருகையால் சாவகச்சேரி எங்கும் பொலிஸ்

தென்மராட்சி.பெப்.6
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வருகையை முன்னிட்டு சாவகச்சேரிப் பகுதியில் பெரும் எண்ணிக்கையில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்

இவர்கள் நகரப்பகுதிகளில் உள்ள கல்லூரிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஏ-9 பிரதான வீதியில் இந்தப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் நகரப்பகுதிகளில் போக்குவரத்தில் ஈடுபடும் தனியாரின் வாகனங்களும் சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை,

யாழ்நகரமும் பலத்த சோதனையிடப்பட்டு கண்காணிக்கப்படுகின்றது.

அரச அலுவலர்கள், அதிகாரிகள் தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக்கு செல்வதைப் பின்போட்டுள்ளனர்.

இதேவேளை, வீரசிங்கம் மண்டபத்தில் விசேட சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ம-9-131)

## இலங்கையருக்கு புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம், பெப்.6
இந்திய அரசு புலமைப் பரிசில் திட்டத்தில், இந்தியாவின் பட்டப்படிப்பு மற்றும் மேல்படிப்புக்களை மேற்கொள்ளுவதற்கான உதவுத் தொகைகளை இலங்கை மாணவர்களுக்கு வழங்க முன்வந்துள்ளது.

இப்புலமைப் பரிசில் திட்டத்தில் நேரு நினைவு உதவித் தொகையில் மருத்துவம் தவிர்ந்த அனைத்து இளங்கலைப் பட்டதாரிகளுக்கு 120 இடங்களும், மௌலானா ஆசாத் உதவித் திட்டத்தின் கீழ் முதுகலைப் படிப்புக்கு 50 இடங்களும், ராஜீவ்காந்தி புலமைப் பரிசில் திட்டத்தில் தகவல் தொழில்நுட்பத்துறைக்கு 25 இடங்களும் உள்ளன.

இந்தப் புலமைப் பரிசுத் திட்டங்களில் பொதுநலவாய நாடுகள் சார்க் நாடுகளுக்கான புலமைப் பரிசில் திட்டத்திலும், எல்.ஓ.சி - ஏ.ஆர்.சி புலமைப் பரிசில் திட்டத்தில் மருத்துவம் தவிர்ந்த அனைத்துப் பாடங்களுக்கும் 10 இடங்கள் உள்ளன.

இது தவிர இந்திய - இலங்கை பரிவர்த்தனை புலமைப் பரிசில் திட்டத்தில் மருத்துவம் தவிர்ந்த அனைத்துப் பாடங்களினதும் கலாநிதி பட்டப் படிப்புக்கான 5 இடங்களும் உள்ளன.

குறித்த புலமைப்பரிசில் திட்டத்துக்கான விண்ணப்பப் படிவங்களை இலங்கை உயர்கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

இந்தப் புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னதாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களையும் சான்றிதழ்களையும் செயலாளர், உயர்கல்வி அமைச்சு, இல18, வாட்பிளேஸ், கொழும்பு 07 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் மட்டும் தமது விண்ணப்பப் படிவங்களின் ஒரு பிரதியை கல்விப் பிரிவு, இந்திய துணைத் தூதரகம், இல 280, பலாலி வீதி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் இந்திய புலமைப் பரிசில் திட்டம் எனஎழுதப்படவேண்டும்ஒருவிண்ணப்பதாரி ஒரு விண்ணப்பம் மட்டுமே அனுப்ப முடியும். விவரங்களுக்கு பலாலி வீதியில் உள்ள இந்திய இணைத் தூதரகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

(ம-16-7)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு இன்று ஜனாதிபதி வருகை

யாழ்ப்பாணம், பெப்.6
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 156 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இருமாடிவிடுதிகள் இரண்டு, வைத்திய அதிகாரிகளுக்கான இரு மாடிவதிவிடம் ஆகியவை இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப் படவுள்ளன.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, மத்திய மாகாண சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொள்வர்.

ஜப்பானிய நிறுவனமொன்றால் யாழ்.மாவட்டத்தின் ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, வடமராட்சி கிழக்கு ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் மேற்கொண்டுள்ள போசாக்கு நலத்திட்டத்தில் கடமையாற்றும் குடும்ப நல சேவையாளர்களுக்கு மோட்டார் சைக்கிள்களும் சுகாதார தொண்டர்களுக்கு சைக்கிள்களும் ஜனாதிபதி கையளிக்கவுள்ளார். (ம-9-131-17)

## வயோதிபப் பெண்ணிடம் சங்கிலி அபகரிப்பு

வலி வடக்கு, பெப் 06
தாவடிப் பகுதியில் வீட்டில் இருந்த வயோதிபப் பெண்ணின் சுமார் ஒன்றரை லட்சம் பெறுமதியான சங்கிலி இனம் தெரியாதவர்களால் பலாத்காரமாக பறித்துச் செல்லப்பட்டுள்ளது.

கடந்த புதன் கிழமை பகல் இந்தச் சம்பவம் தாவடிப் பிள்ளையார் ஆலயத்துக்க அருகில் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள இடத்தில் இடம் பெற்றுள்ளது. சுமார் எழுபது வயது உடைய திருமதி அன்னலிங்கம் என்பவரின் சங்கிலியே இவ்வாறு திருடிச் செல்லப்பட்டுள்ளது.

வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று இளைஞர்கள் இந்த அபகரிப்பை கனகச்சிதமாக முடித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார்கள்.

இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

(ம-86)

## இரவல் நகை விவகாரம் நீதிமன்றுக்கு

நிகழ்வொன்றுக்குச் செல்வதற்காக இரவல் வாங்கிய 3 பவுண் நகையை 6 மாதங்களாகியும் திருப்பிக் கொடுக்காது மோசடி செய்தமையால் அது நீதிமன்ற விவகாரமானது. இது தொடர்பாக வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீதிவான் ஆர்.எஸ். எம். மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கென எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனுடன் தொடர்புடைய சந்தேக நபருக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்ட நீதிவான் இந்த வழக்கை அடுத்த மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

(ஒ-4)

# குடாநாட்டிலும் இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப்.6
யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சுதந்திரதின நிகழ்வுகள் அமைதியான முறையில் கொண்டாடப்பட்டன.

வடமராட்சியில்

இலங்கையின் 64 ஆவது சுதந்திர தினத்தையொட்டி வடமராட்சி பிரதேசத்தில் உள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் ஆகியவற்றில் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டு சுதந்திரதினம் கொண்டாடப்பட்டது.

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையிலும் கரவெட்டிப் பிரதேச செயலத்தில் பிரதேசசெய லர் இ.வரதீஸ்வரன் தலைமையிலும் மருந்தங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் ந. திருலிங்கநாதன் தலைமையிலும் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டு பிரதேச செயலர்கள் உதவி அரசாங்க அதிபர் ஆகியோரால் சுதந்திர தினத்தையொட்டி கொடிகள் ஏற்றப்பட்டன.

உடுவிலில்...



தொடர்ந்து கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலர் தலைமையில் உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், ஊழியர்கள் சிரமதானம் மேற்கொண்டு பிரதேச செயலக வளாகத்தை துப்புரவு செய்தனர்.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலும் புதிதாக கட்டப்படவுள்ள உதவி அரச அலுவலகர், உதவி அரச அதிபர், உத்தியோகத்தர் விடுதி அமைய உள்ள இடத்திலும் சிரமதானப் பணிகள் இடம் பெற்றன.

தெல்லிப்பழையில்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலும் தேசியக் கொடியேற்றும் நிகழ்வு இடம்பெற்றது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் (பதில்) ஏ.ஜெயரூபன் இலங்கைத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். இங்கு கடமையாற்றும் ஊழியர்கள் தமிழில் தேசியக் கீதத்தைப் பாடினார்கள். இந்த நிகழ்வில் இங்கு கடமையாற்றும் ஊழியர்களும் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். இதேநேரத்தில் வைத்தியசாலையின் முன்புறத்தில் உள்ள மதிலிலும் சிறிய தேசியக் கொடிகள் பறக்க விடப்பட்டுக் காணப்பட்டன.

உடுவிலில்

இலங்கை 64 ஆவது சுதந்திரதினத்தை ஒட்டி உடுவில் பிரதேச செயலர் அலுவலகத்தில் பல்வேறு நிகழ்வுகள் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் இடம்பெற்றன.

காலையில் தேசியக் கொடியை பிரதேச செயலாளர் ஏற்றி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து தேசிய கீதத்தை மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மாணவிகள் இசைத்தார்கள்.

இதனைத் தொடர்ந்து சிரமதானப் பணிகள் மரம் நடுகை மற்றும் மரக்கறிப் பயிர்கள் நடுகை என பல நிகழ்வுகளும் அலுவலக ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை, சிறீரெலோவினரின் ஏற்பாட்டில் கோண்டாவில் மேற்குப் பகுதியில் சிரமதானப் பணிகள் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அப்பகுதி மக்கள், பாடசாலை மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் பல சமுர்த்திப் பயனாளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இவர்களுடன் சிறீரெலோ கட்சியின் ஊடக செயலாளர் எஸ். செந்தூரன் தலைமையிலான கட்சி உறுப்பினர்கள் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி அறம்பொல உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(வ-8-86-300)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவில் அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.6

வட பகுதிக்கான ஆயிரம் கோடி ரூபா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நெடுந்தீவில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நெடுந்தீவில் கடந்த புதன் கிழமை நடைபெற்றுள்ளது. இதன் போது நெடுந்தீவுப் பகுதியில் செயல்படுத்தப்பட வேண்டிய முக்கிய தேவைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதில் பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் தேவைகள் குறித்த கருத்துக்களை முன்வைத்தனர்.

இந்த நிகழ்வில் உதவி அரச அதிபர் ஆ.சிறி, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ம-16-7)

## போதை தலைக்கேறியதால் 6 பேரைக் கடித்த குடும்பஸ்தர்

### அனலைதீவில் உண்மைச் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப்.6

அனலைதீவில் குடும்பஸ்தர் ஒருவர் மதுபோதையில் ஆறுபேரைக் கடித்துக் காயப்படுத்திய சம்பவமொன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

அனலைதீவைச் சேர்ந்த 26 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவர் தனது நண்பர்களுடன் சேர்ந்து மதுபானம் அருந்தியுள்ளார்.

அவரது நண்பர்கள் குறித்த குடும்பஸ்தர் அருந்திய மதுபானத்தினுள் தடை செய்யப்பட்ட லேகியத்தைக் கலந்து கொடுத்துள்ளனர்.

இதன் காரணமாக போதை தலைக்கேறிய பிரஸ்தாப நபர், தனது உறவுக்கார குடும்பப் பெண் ஒருவரோடு கதைப்பது போல் அருகில் சென்று கடித்துள்ளார்.

அந்தப் பெண்ணின் அலறல் கேட்டு அருகில் சென்ற இன்னொரு பெண்ணையும் அதனைத் தடுக்கச் சென்ற நான்கு ஆண்களையும் கை மற்றும் கால்பகுதிகளில் கடித்துள்ளார்.

**மதுபானத்தினுள் தடை செய்யப்பட்ட லேகியத்தைக் கலந்து கொடுத்துள்ளனர்.**

இவரால் கடியுண்டவர்கள் உடனடியாக அனலைதீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதுடன் மேலதிக சிகிச்சைக்காக ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இது தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் கடியுண்ட பெண் ஒருவரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-251-16)

## 'என்றிப்' நிதி உதவியுடன் மறவன்புலோ கூ.ச.புனரமைப்பு

யாழ்ப்பாணம், பெப்.6

கைதடி மேற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மறவன்புலோ கிளை நிலையம் 'என்றிப்' பின் 2.8 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கிளை 2012 ஆம் ஆண்டின் முதலாவது மினிகோப் சிற்றியாக உள்ளது என்று யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

'என்றிப்' திட்டத்தின் மூலம் புனரமைப்பு செய்யப்பட்ட கூட்டுறவு கிளை நிலையமானது கடந்த 31 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கூட்டுறவுக் கிளையில் பொதுமக்களின் நுகர்ச்சிப் பொருள்கள், எரிபொருள் வகைகள், நிவாரணப் பொருள்கள் என்பனவும் விநியோகிக்கப்படவுள்ளன.

இதுவரை காலமும் அந்தப் பகுதி மக்கள் கூட்டுறவுச் சங்கத்தின் தேவைகளைப் பூரணமாக அடையவில்லை. தற்போது புனரமைப்பு செய்து திறந்ததன் மூலம் பொதுமக்கள் பூரணமடைந்துள்ளனர்.

மறவன்புலோ வயல் சார்ந்த பிரதேசமாக இருப்பதால் அந்தப் பகுதி மக்களின் நலன்கருதி எதிர்காலத்தில் நெல் உடைக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்தார்.

இந்த இயந்திரத்தை ஆரம்பிக்க கூட்டுறவு நிதி யிலிருந்து 5 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் மேலும் தெரிவித்தார். (ம-13-16)

## உடுவில் பிரதேசத்திலுள்ள வேலையற்றோர் விவரம் கோரல்

யாழ்ப்பாணம், பெப்.6

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் படித்துவிட்டு வேலையற்றிருப்போர் தொடர்பான தகவல் திரட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேச சபைக்கு உட்பட்ட 18 வயது முதல் 40 வயது வரையான படித்துவிட்டு வேலையற்றிருப்போர் உடுவில் பிரதேசத்தில் அதற்கான படிவங்களைப் பெற்றுப் பூரணப் படுத்தி ஒப்படைக்குமாறு கூறப்பட்டுள்ளது.

**இந்தப் பிரதேச சபைக்கு உட்பட்ட 18 வயது முதல் 40 வயது வரையான படித்து விட்டு வேலையற்றிருப்போர் உடுவில் பிரதேசத் தில் அதற்கான படிவங் களைப் பெற்றுப் பூரணப் படுத்தி ஒப்படைக்குமாறு கூறப்பட்டுள்ளது.**

அத்துடன் ஜே/201 முதல் ஜே/ 206 வரையான கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை ஏழாலை வடக்கு ஜே/205 கிராம சேவகர் பிரிவிலும் ஜே/207 முதல் ஜே/211 வரையான கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் குப்பிளான் வடக்கு ஜே/211 கிராம சேவகர் பிரிவிலும், ஜே/195 முதல் ஜே/200 வரையான கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு எதிர்வரும் 21 ஆம், 23 ஆம் திகதிகளில் சுன்னாகம் நகர் மத்தி ஜே/196 கிராம சேவகர் பிரிவிலும் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தப் பதிவுகள் குறிக்கப்பட்ட தினங்களில் காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை நடைபெறும். ஏனைய கிராம சேவகர் பிரிவுகளுக்கான பதிவு நடவடிக்கை தொடர்பாகப் பின்னர் அறிவிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. (ம-14)



நெடுந்தீவு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உள்ளூர் கல்வி வளர்ச்சிக்காக நடத்திய அதிஷ்டலாபச் சீட்டில் முதல் பரிசு பெற்ற மாணவிக்கு சைக்கிள் ஒன்றை வழங்கினர். நெடுந்தீவு பல.நோ.கூ. சங்கத் தலைவர் அ.வெ.அரியநாயகம் சைக்கிளை வழங்குகிறார். (ம-7)

## 'ஹெல்மட்' திருடியவர் அகப்பட்டார்

தென்மராட்சி, பெப்.6

சாவகச்சேரிப் பகுதியில் ஹெல்மட் திருடும் நபர் வசமாக சிக்கிக் கொண்டார். நேற்று முன்தினம் சாவகச்சேரி வைத்தியசாலை உத்தியோகத்தர் வாகன பாதுகாப்பு நிலையத்தில் விடப்பட்டிருந்த வைத்திய அத்தியட்சகரின் மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த ஹெல்மட்டை திருடிச் செல்லும் வேளையில் இவர் மாட்டிக்கொண்டார்.

வைத்தியசாலையில் விடுதிகள் திறப்புவிழாவை முன்னிட்டு உத்தியோகத்தர்கள் வாகன பாதுகாப்பு நிலையத்தில் பொதுமக்களின் சைக்கிள்களும் மோட்டார் சைக்கிள்களும் விடப்பட்டிருந்தன.

நோயாளி போல் வந்த இந்த நபர் அவசர அவசரமாக வெளியேறுவதில் சந்தேகம் கொண்ட வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் துரத்திச் சென்ற போது அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சோதனைச் சாவடிப் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டு ஹெல்மட் மீட்கப்பட்டது.

இந்த நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். வைத்தியசாலையில் ஏற்கனவே உத்தியோகத்தர் பலரின் ஹெல்மட்டுக்கள் திருட்டுப் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

யாழ். நகரில் பயணிகள் தங்குவதற்கான விடுதிகளில் திடீரென நெருக்கடி ஏற்பட்டுள்ளது. விடுதிகள் அனைத்தும் பயணிகளால் நிரம்பி வழிந்ததால் பெரும் எண்ணிக்கையான பயணிகள் இரவு பொழுதைப் போக்க பெரும் சிரமம் அடைந்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் சுற்றுலாப் பயணிகளின் வருகை திடீரென அதிகரித்துக் காணப்பட்டது. சனி, ஞாயிறு நாள்களுடன் செவ்வாய்க்கிழமை விடுமுறையை அடுத்து பயணிகளில் அநேகமானோர் யாழ் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## நல்லை ஆதீனக் கட்டட இரண்டாம் கட்டப் பணி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் மூலம் லண்டன் நல்லை ஆதீன திருப்பணிக்குழுவின் நிதியுதவியுடன் நல்லை ஆதீனக் கட்டடத்தின் இரண்டாம் கட்ட கட்டட வேலைகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள் ஆசியுடன் பழனி ஆதீன குருமகா சந்நிதானம் சாது சண்முக அடிகளார், மரன்பாளையம் ஆதீன சிவாச்சாரிய அடிகளார் ஆகியோர் கலந்து கொள்வர். (ம-14)

## கைதடியில் டெங்கு ஒழிப்பு

கைதடி, பெப்.6

தற்போது வேகமாக பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக கைதடி வளர்மதி சனசமூக நிலையம் மக்களிடையே விழிப்புணர்வு பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றது.




சனசமூக நிலைய நிர்வாகிகளும் கல்விக் கழகம், விளையாட்டுக் கழகம் மற்றும் மாதர் கழகம் ஆகியவை இணைந்து கடந்த வாரம் தொடக்கம் ஒலிபெருக்கி மூலம் டெங்கு நோயின் அபாயத்தைப் பற்றியும் அதனைக் கட்டுப்படுத்தும் முறை பற்றியும் மக்களிடையே நேரடியாகச் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

பொதுமக்களின் வீட்டு வளவில் இருக்கும் நோயைப் பரப்பக் கூடிய பொருள்கள் போன்றவற்றை அப்புறப்படுத்தி அந்தக் கழிவுப் பொருள்களை பிரதேசசபை ஊடாக தூர இடங்களில் வைத்து அழிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

வளர்மதி சனசமூக நிலையத்தின் இந்தச் செயற்பாட்டை இந்தப் பிரதேச பொது அமைப்புக்கள் பாராட்டுவதுடன் ஏனைய சனசமூக நிலையங்களும் இதனைப் பின்பற்றி செயலாற்ற வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-288)

## பஸ் தரிப்பிடமின்றி நெருக்கடி

கைதடி, பெப்.6

கைதடியிலிருந்து சாவகச்சேரி ஊடாக செல்லும் பஸ்ஸை எதிர்பார்த்து மதுபானச்சாலை வாசலில் காத்திருக்கும் அவலநிலை கைதடியைச் சேர்ந்த பயணிகளுக்கு ஏற்பட்டுள்ளதாக பலராலும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கைதடியிலிருந்து யாழ். நகருக்குச் செல்லும் பயணிகளுக்காக் மட்டும் பஸ் தரிப்பிடம் உள்ளது.

ஆனால் கைதடியிலிருந்து சாவகச்சேரி ஊடாக செல்லும் பஸ்ஸில் ஏறுவதற்கான தரிப்பிடம் நீண்ட காலம் இல்லை.

இதனால் பயணிகள், [illegible] வாசலிலே காத்திருக்க வேண்டி உள்ளதாகவும் பெண் பயணிகளும் பாடசாலை மாணவிகளும் கூறுகின்றனர். காத்திருக்கும் வேளை மதுபானச்சாலை வாசலில் மதுபோதையில் நிற்கும் சிலர் அவர்களைப் பார்த்து தகாத வார்த்தைகளைப் பிரயோகிப்பதாகவும் சில நேரங்களில் அங்கசேஷ்டை விடுவதாக வும் விசனம் கூறப்படுகின் றது.

இதனால் வெயிலில் நின்று பஸ் ஏறுவதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பயணிகளின் அவல நிலையை பல பொது அமைப்புகளும் அரச அதிகாரிகளும் கண்டும் காணாமல் இருப்பது தமக்கு வேதனையளிப்பதாகவும் அந்தப் பிரதேச முதியோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-288)

## சப்பல் வீதியை அலங்கரிக்க பூங்கன்றுகள்

யாழ்.சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன்பாகச் செல்லும் சப்பல் வீதியின் இருவழிப்பாதையில் பூங்கன்றுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த இருவழிப் பாதையின் நடு வீதியில் உள்ள மேடையில் இதற்கென பூங்கன்றுகள் நட்டு அவற்றை பராமரிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வீதியும் கடந்த வாரத்தில் இரவோடு இரவாக 'காப்பெற்' வீதியாக மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரதினக் கொண்டாட்டம்; மக்களுக்கு உரிமை மறுப்பு

நாடு சுதந்திரம் அடைந்துவிட்டதாகக் கூறிக்கொண்டு காலாகாலமாக சுதந்திர தினங்களை ஆட்சியிலிருப்பவர்கள் கொண்டாடி, இல்லாத ஒரு விடயத்திற்கு விழா எடுக்கின்றனர் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் மத்திய மாகாண சபை உறுப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நுவரெலியா, பெப். 6

64ஆவது சுதந்திர தினத்தை அரசு கொண்டாடியுள்ளது. ஆனால், நாட்டில் மக்கள் சுதந்திரமாகப் பேசக்கூட முடியவில்லை. இவ்வாறானதொரு துர்ப்பாக்கிய நிலை இன்று நிலவுகிறது.

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் மத்திய மாகாணசபை உறுப்பினர் முரளி ரகுநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கையின் 64ஆவது சுதந்திரதினம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு சுதந்திரம் அடைந்துவிட்டதாகக் கூறிக்கொண்டு காலாகாலமாக சுதந்திர தினங்களை ஆட்சியிலிருப்பவர்கள் கொண்டாடி, இல்லாத ஒரு விடயத்துக்கு விழா எடுக்கின்றனர். இவ்வாறு விழா எடுக்கப்படுகையில் கூட இந்த நாட்டின் தேசிய இனங்களில் ஒன்றான தமிழ் இனம் ஏதோ ஒருவகையில் பாதிப்புக்களையே எதிர்கொண்டு வருகின்றது.

மலையகம், வடக்கு, கிழக்கு மற்றும் முஸ்லிம் மக்கள் எனத் தமிழ்பேசும் மக்கள் எதிர்கொண்டுவரும் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்ட நிலைமைக்கு யாரும் பொறுப்புச் சொல்வதற்குத் தயாரில்லை. தமிழ் மக்கள் நாட்டில் எதிர்கொண்டுள்ள பாதிப்புகளுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய கடப்பாட்டிலிருந்து நீங்கிக் கொள்வதற்காக பல்வேறுபட்ட வியூகங்களுடன் கூடிய நெருக்குவாரங்களையே இன்றைய அரசு மேற்கொள்கின்றது.

எமக்கெதிராக நடைபெறும் அநீதிகளை திரையிட்டு மறைப்பதற்காக கோலாகல விழாக்களை சுதந்திர தினத்தில் ஏற்பாடுசெய்து அதில் தமிழர்கள் மனப்பூர்வமாக கலந்துகொள்வதாகக் காட்டிக்கொள்கின்றது.

இந்த நாட்டின் பொருளாதாரத்துக்காக உழைத்து வருகின்ற எமது மலையக மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படவில்லை. எமது பிள்ளைகள் கல்வி கற்பதற்கு உரிய வசதிவாய்ப்புக்கள் ஏற்படவில்லை. அரச பணிவெற்றிடங்களில் எமக்கான வாய்ப்புக்கள் உரிய முறையில் இல்லை. இதுபோன்ற நிலைமையே வடக்கு, கிழக்கு மக்களுக்கும் நடைபெறுகின்றது.

நாட்டில் எமது மக்கள் உழைப்புக்கேற்ற சம்பளங்களைப் பெறுவதற்குக்கூட திண்டாடுகின்றனர். அரசியல் உரிமைகளுக்கு அப்பால் பொருளாதார உரிமைகள் கூட எமது மக்களுக்கு மறுக்கப்படுகின்றது.

எதிர்வரும் காலங்களிலாவது உரிய ஜனநாயகச் சூழலுக்கு இடமளிக்கப்பட வேண்டும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கடலின் நுரையால் மக்கள் பெரும் அச்சம்

கல்முனை,பெப்.6

கல்முனை கடற்கரையை அண்மித்த பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கடலில் இருந்து கரையில் ஒதுங்கிய அதிகளவு நுரையால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கடலில் இருந்து நுரைகள் வெளியேறி காற்றினால் அடித்துவரப்பட்டு கடற்கரையோரங்களில் பரவியதையடுத்து மக்கள் அச்சமடைந்தனர்.

இதுபோன்ற சம்பவங்கள் முன்னரும் பல தடவைகள் இடம்பெற்றுள்ளன. கடல் கொந்தளிப்பு ஏற்படும் காலங்களில் சிலவேளைகளில் சுழிக்காற்று வீசுமானால் இதுபோன்ற நுரைகள் வெளியேறுவது வழமையாகும் என்று மீனவர் ஒருவர் தெரிவித்தார்.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தின் பின்னர் மக்கள் இவ்வாறான விடயங்களில் கூடிய கவனம் செலுத்துகின்றனர் என்று தெரிவித்தார். (ச)

## பஸ் விபத்து; 16 பேர் காயம்

தங்காலை,பெப்.6

ஹம்பாந்தோட்டை - தங்காலை வீதியின் சிட்டிக்குளம் பிரதேசத்தில் தனியார் பயணிகள் பஸ்ஸும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 16 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.45 மணிக்கு இடம்பெற்றுள்ளது. ஹம்பாந்தோட்டையில் இருந்து எம்பிலிபிட்டிய சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸுடன் தெனியாய சென்று கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்து சபை பஸ் பின்பக்கம் மோதி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தில் காயமடைந்தவர்கள் ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)

## பக்தர்களின் வருகை அதிகரிப்பு

நுவரெலியா,பெப்.6

சிவனொளிபாதமலை பருவகாலத்தில் அங்கு செல்லும் யாத்திரிகர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

யாத்திரிகர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் வீதிகளில் வாகன நெரிசல் காணப்படுகின்றது. இதனால் வீதி விபத்துக்களும் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிவனொளிபாதமலைக்குச் செல்பவர்கள் தாம் கொள்வனவு செய்யும் உணவு [illegible]தரம் பார்த்துக் கொள்வன[illegible] செய்யும்படி நுவரெலியா மாவட்ட செயலாளர் டி.பி.[illegible] குமாரசிறி தெரிவித்து[illegible]ளார். [illegible]

## குறைபாட்டை நீக்குக!

நாவிதன்வெளி, பெப். 6

துறைநீலாவணை மத்திய மருந்தகம் மற்றும் மகப்பேற்று விடுதியின் வளப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்துதரவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதாரப் பணிமனைப் பிரிவுக்குட்பட்ட இந்த வைத்தியசாலை நீர்த்தட்டுப்பாடு, கட்டடம், சுற்றுமதில் மற்றும் மின்பிறப்பாக்கி உட்பட பல குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. அதேவேளை, திடீரென மின்சாரம் தடைப்படும் சந்தர்ப்பங்களில் இந்த வைத்தியசாலையும், வளாகமும் இருளில் மூழ்குகின்றன என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ச)

## வைத்தியசாலைக்கு நிதியுதவி

கண்டி, பெப். 6

கண்டியிலுள்ள தேசிய புற்றுநோய் வைத்தியசாலைக்கு பிறாக்கி சிகிச்சை இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்காக ஐக்கிய அரபு எமிரேட்ஸின் செம்பிறை அமைப்பினால் சுமார் 5 லட்சத்து 90 ஆயிரம் அமெரிக்க டொலர் நிதியுதவியளிக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரம் கொழும்பு புற்றுநோய் வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டதிலிருந்து 3,500 இற்கு மேற்பட்ட பெண் புற்றுநோயாளிகள் இதுவரை சிகிச்சை பெற்றுள்ளனர்.

தினமும் எட்டு நோயாளிகள் குறித்த இயந்திரத்தில் சிகிச்சைபெற்று வருவதுடன், ஒரு நோயாளிக்கான சிகிச்சை மூன்று தடவையில் நிறைவுசெய்யப்படுகின்றது.

இந்த இயந்திரத்தில் சிகிச்சைபெறுவதற்கு ஆறு மாதங்கள் காத்திருக்க வேண்டிய நிலைமை காணப்பட்டமையால், கொழும்பிலுள்ள ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தூதரகம் செம்பிறை அமைப்பிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே மற்றுமோர் இயந்திரத்தை கண்டியிலுள்ள தேசிய புற்றுநோய் வைத்தியசாலை கொள்வனவு செய்வதற்கு நிதியுதவியளித்துள்ளது. (ச)



இலங்கையின் 64 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு மத்திய மாகாண சுதந்திர தின நிகழ்வு கண்டி, போகம்பரை மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றது.

## மதுபானம் கொண்டு சென்றவர் கைது

நோர்வூட்,பெப்.6

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஒட்டோ ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட பெருமளவான மதுபானங் களை பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன், சந் தேக நபர் ஒருவரையும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

புளியாவத்தைப் பகுதியை நோக்கி இந்த மதுபானங்கள் முச்சக்கரவண்டியில் கொண்டு செல்லப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இலங்கையின் 64ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மதுபான விற்பனைக்கு நாடு முழுவதும் தடைவிதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## காவலுக்குச் சென்றவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு,பெப்.6

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரடியனாறு வயல் பிரதேசம் ஒன்றில் காவலில் ஈடுபட்டு வந்த ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காவலில் ஈடுபட்டு வந்த வந்தாறுமூலையைச் சேர்ந்த பி.வியஜயராசா (57 வயது) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரால் மீட்கப்பட்ட சடலம், பிரேத பரிசோதனைக்காக செங்கலடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

வயல் பிரதேசங்களில் யானைகளின் அட்டகாசங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் தொடர்பில்மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# எதிர்கால சமூகத்திடம் மறுமலர்ச்சி வேண்டும்

## யோகராஜன் எம்.பி இப்படிக் கூறுகிறார்

நுவரெலியா, பெப். 6

வருங்காலச் சந்ததியின் சுதந்திரமான வாழ்வுக்குச் சொந்தமான வீடும், காணியும் உரிமையுடைய சமூகமாக மாற்றம் ஏற்படவேண்டும். ஏமாற்றங்களிலேயே அமிழ்ந்து போயுள்ள சமூகத்திடம் மறுமலர்ச்சி மாற்றமும், உணர்வுள்ள மனமாற்றமும் ஏற்படவேண்டும். அதுவே எமது குறிக்கோளாகப் பலம்பெற வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் தெரிவித்தார்.

நாகசேனை பகுதியிலுள்ள 'வலஹா' தோட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உரிமைகள் மறுக்கப்பட்டு நாடற்றவர்களாக இருந்த பெருந்தோட்டத் துறை இந்திய வம்சாவளித் தமிழ் சமூகம் நீண்டகாலப் போராட்டத்துக்குப் பின்பு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டுள்ளது. அதேபோல் தற்போது 'வீடற்றவர்களாக' வாழும் சமூகம் வீட்டுரிமை பெற்று வாழ்வதற்காகக் காணியைப் பெற்றுக் கொள்ளும் உரிமைகள் கொண்டிருப்பதால் அதற்கான ஒத்தாசைகளை வழங்கி ஆதரவளிப்பதற்கு மலையக அமைப்புகள் பேதங்களை மறந்து ஒருமுகமாகச் செயற்படவேண்டும்.

தொழிலாளிகளை விலைபேசிக் காட்டிக்கொடுப்பதற்கு முயற்சிப்பவர்கள் யார் என்பதை சகல தொழிலாளர்களும் புரிந்துகொள்ள வேண்டும். 'பெரிய சங்கம்', 'சிறிய சங்கம்', 'பழைய சங்கம்', 'அரச ஆதரவுள்ள சங்கம்' என்று கூறிக்கொண்டு இராணுவத்தினரையும் பொலிஸாரையும் தோட்டத்துக்கு அழைத்து வருவதற்குத் துணைபோகின்றவர்களுக்கு நமது எதிர்கால சந்ததியினர் மீது எள்ளளவும் அக்கறை கிடையாது. அடிப்படை வாழ்வியல் தேவைகளில் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு 'ஓர் அங்குல நிலமோ', சொந்த வீடோ' கிடையாது.

தேசிய உழைப்பின் முன்னோடிகளாகத் திகழும் தொழிலாளர் சமுதாயம் கடந்த 200 ஆண்டுகளாக லயன் வாழ்க்கையில் துன்பப்படுவதைச் சகல தமிழ் அரசியல்வாதிகளும், பொது நல அமைப்புகளும், சமூக நல விரும்பிகளும், தொழிலாளர்களினால் அரசியல் முகவரியும், தொழிற்சங்க சக்தியும் பெற்றுக்கொண்டவர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். - என்றார் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் வர்ணித்ததுபோலவே சிவபூமி அமைப்புகள் உருவாகின

## நல்லை ஆதீன குரு முதல்வர் கூறுகிறார்

**1990 ஆம் ஆண்டுகளுக்கு முன்னைய யாழ்ப்பாணத்து நிலைமையை மீண்டும் எம் கண்முன் கொண்டுவரத்தக்க வகையில் மண்டபத்தில் பல்வேறு படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.**

யாழ்ப்பாணம்,6

திருமூலர் இலங்கையை சிவபூமியெனக் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறே ஆறு. திருமுருகன் இன்று பல சிவபூமி அமைப்புக்களை இம் மண்ணில் உருவாக்கி வருவதையிட்டு நாம் அனைவரும் பெருமை அடைய வேண்டும் என்று நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்தார்.

கீரிமலை தீர்த்தக் கேணிக் கரையில் அமைக்கப்பட்ட சிவபூமி மண்டபத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

1990 ஆம் ஆண்டுக்கு முன்னைய யாழ்ப்பாணத்து நிலைமையை மீண்டும் எம் கண்முன் கொண்டுவரத்தக்க வகையில் இந்த மண்டபத்தில் பல்வேறு பழைய படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் பழைய தோற்றம், தந்தை செல்வாவின் தூபி, சங்கிலிய மன்னனின் அரண்மனைத் தோற்றம் என்று பல்வேறு புகைப்படங்களும் காணப்படுகின்றன.

இதேபோன்று எமக்கு கீரிமலை என்றதும் கண்ணில் தெரிவது அழகிய கடற்கரைச் சூழல், கடல் கேணியில் நீந்துபவர்கள், பிதிர்க் கடன்களை நிறைவேற்றுபவர்கள் என்று பல காட்சிகள் மனத்தின் முன் விரிந்து செல்லும்.

இதேபோன்று சிவபூமி என்று கூறினால் எம்முன் முதியோர் இல்லம், புற்று நோயாளர் விடுதி, மனவளர்ச்சி குன்றிய மாணவர்களின் பாடசாலை என பல சமூக சேவை அமைப்புக்களும் மனதில் தோன்றுகின்றன. இந்த வகையில் சைவ மக்களின் நன்மை கருதி சிவ பூமி மண்டபமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மடம் என்று கூறினால் உணவு வழங்கும் இடமாகவே பார்க்கின்றோம், பார்க்க முற்படுகின்றோம்.

மடம் என்று கூறும் போது பல்வேறு சமயத் தொண்டுகளும் மேற்கொள்ளப்படும் இடமாகக் காணப்படுகின்றன. இந்தவகையில் சிவ பூமி மடமும் கூட பல்வேறு சேவைகளை வழங்கும் மடமாகக் காணப்படுவது டன் சமய வாழ்வுக்கு வழி காட்டும் சேவையாற்றும் இடமாகவும் மிளிரும்.- என்றார். (ச-86)

# பசுக்கொலையை நிறுத்த வேண்டும்

**பசுக்கொலை செய்பவர்களுக்கு நீதிமன்றத்தில் கூடுதல் தண்டனை பெற வழிவகுக்க செய்யவேண்டும்**

யாழ்ப்பாணம்,பெப்.6

குடாநாட்டில் பசுக்கள் இறைச்சிக்காக கொல்லப்படுகின்ற அவலநிலை நீக்கப்பட வேண்டும். இந்துக்களால் இறைவனுக்கு சமனாக வணங்கப்படும் பசுக்களை இறைச்சிக்காக கொல்லப்படுவது என்பது சமூகத்தை கீழ் நிலைக்குக் கொண்டு செல்வதற்கு ஒப்பானது என்று வலிகாமம் மேற்கு சுழிபுரம் பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் தெரிவித்தார்.

''பசுக்கொலையும்- இன்றைய சமுதாயம் எதிர்கொள்ளும் பிரச்சினையும்'' எனும் தலைப்பில் அராலியில் இடம்பெற்ற அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைகளில் நல்லாட்சித் தத்துவம் இடம் பெறவேண்டும் என்று சட்டம் கூறுகின்றது.

ஆனால் ஒரு சில உள்ளூராட்சிச் சபைகளில் பசுக்கள் கொலை செய்யப்படுவது தொடர்பாக உள்ளூராட்சித் திணைக்களங்களுக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

பசுக்கொலை செய்பவர்களுக்கு நீதிமன்றத்தில் கூடுதல் தண்டனை பெறச் செய்யவேண்டும்.

இன்று ஊடகங்கள், இந்திய தொலைக்காட்சிகள் பசுக் கொலையால் ஏற்படும் பெரிய இடர் தொடர்பாகத் தெரிவிக்கின்றன.

இறைச்சிக்காக பசுக் கொலையை உடன் நிறுத் அனைவரும் முன்வரவேண்டும்.

ஆறறிவு மனிதனை விட 5 அறிவு படைத்த பசு மனிதனுக்கு பல ஆயிரம் வழிகளில் உதவுகிறது.

எனவே மூளை உள்ள மனிதன் உணர்வு ரீதியாகச் செயற்பட்டு இவ்வாறான பசுக்கொலைகளை இல்லாது ஒழித்து நல்ல சமுதாயத்தை அனைவரும் இணைந்து கட்டியெழுப்பப்பாடுபட வேண்டும்.- என்றார்.

(ச)



சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 87ஆவது பிறந்தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிவத்தமிழ் விருது பெற்றவர்களான கலாபூஷணம் ஏ.வி.ஆனந்தன், பொன்னையா செல்லப்பா, சிற்பி சரவணபவன், பண்டிதை சிவபாக்கியம், மூத்த புகைப்பட ஊடகவியலாளர் சங்கரகம்பர் கதிரவேலு ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,பெப்.6

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டம் அண்மையில் சங்க மண்டபத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்-வி.சுப்பிரமணியம், உபதலைவர்- சு.சாந்தகுமாரன் ஏனைய நிர்வாக உறுப்பினர்களாக க.ராமச்சந்திரன், திரிபோட் வில்லியம், ச.செல்வரத்தினம், ந.லோகலிங்கம், து.சுதர்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ச-13)

***

இளவாலை மாரீசன் கூடல் இளைஞர் கழகத்தின் நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

புதிய உறுப்பினர்களாக தலைவர் ஜெ.இளங்குமரன், செயலாளர் எஸ். மேரி அக்கினேஸ், பொருளாளராக பீ.மரீன் றொசாந்தியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச-16)

## போட்டியில் வெற்றி பெற்றோர்

தென்மராட்சி:பெப்.6

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கிடையே நடத்தப்பட்ட கோலப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வலயக்கல்வி அலுவலகத்தினால் .வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆசிரியர்களின் விவரம் வருமாறு:

முதலாம் இடம் - திருமதி வி. மகேந்திரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம் - திருமதி வீ.பாலதேவா (மிருசுவில் அ.த.க. பாடசாலை), மூன்றாம் இடம் - திருமதி ச. கோணேஸ்வரன் (கச்சாய் அ.த.க. பாடசாலை).

பாராட்டுப் பெற்றோர் - திருமதி ப.சுதாகரன் (விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்), செல்வி நா. கமலநந்தினி (மந்துவில் றோ. க. த.க. பாடசாலை), திருமதி த. தெய்வேந்திரன் (சாவகச்சேரி டிறிபேக்), செல்வி செ. ஜனனி (மீசாலை வீரசிங்கம் ம.வி.), திருமதி க. திருச்செல்வன் (உசன் இராமநாதன் ம.வி), திருமதி இ. அசோக் (கைதடி நவீல்ட் பாடசாலை), திருமதி சி. கிருஷ்ணமூர்த்தி ( கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), திருமதி வி. திருச் செல்வம் (சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்). (ச-9)

## நெல் அறுவடை இயந்திரம் சர்வதேச கண்காட்சிக்கு



யாழ்ப்பாணம், பெப்.6

ஈரானில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சர்வதேச நான்காவது புத்தாக்கக் கண்காட்சிக்கு யாழ்.பல்கலைக் கழக பௌதீகவியல் துறையின் பதவிநிலை தொழில் நுட்ப உத்தியோகத்தர் கனகலிங்கம் சோமசேகரம் தயார் செய்த பொருளைக் காட்சிப் படுத்துவதற்காகச் சென்றுள்ளார்.

நெற்கதிரிலிருந்து நெல்லை வேறாக்கும் இயந்திரத்தை கையால் இயக்கக்கூடியதான ஓர் இயந்திரமாகத் தயார் செய்துள்ளார்.

அத்துடன் இவர் ஏற்கனவே இலங்கை புத்தாக்க ஆணைக்குழுவினால் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட புத்தாக்கக் கண்காட்சியில் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச - 14)

# ரசிகர்களால் குழப்பம்; விளையாட்டில் பாதிப்பு

வலி.வடக்கு, பெப்.6

மைதானத்தில் நல்ல பார்வையாளர்களும், ரசிகர்களும் இருக்க வேண்டும். இது விளையாட்டை மேம்படுத்திச் செல்லும். இதனை விடுத்து குழப்பங்கள், பிரச்சினைகளை உருவாக்கும் ரசிகர்கள், பார்வையாளர்களினால் விளையாட்டின் தரமும், ஒழுங்கும் பாதிப்படையும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் தலைவரும் ஓய்வு பெற்ற ஆசிரியருமான கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தெரிவித்தார்.

இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்ட சங்கப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

உதைபந்தாட்டத்தை வளர்த்தெடுக்க வேண்டியது அனைவரினதும் கடமையும் பொறுப்புமாகும். போட்டிகள் பார்வையாளர்களின் பார்வையில் தங்கியுள்ளது.

விளையாட்டுக்களில் நிறை குறைகள் காணப்படலாம். இதற்காக மைதானத்தில் யாரும் குழப்பங்களை உண்டாக்கக்கூடாது. இத்தகைய குழப்பங்கள் பிரச்சினைகளுக்கு காரணமாக இருப்பவர்கள் ரசிகர்களும், ஆதரவாளர்களுமே. இத்தகைய செயற்பாடுகள் விளையாட்டைக் குழப்பும் நிகழ்வுகளாகவே காணப்படுகின்றன.

வீரர்களைப் பொறுத்த வரையில் விளையாட்டுக் களத்தில் இருக்கும்போது நல்ல வீரர்களாக இருக்க வேண்டும். மைதானத்துக்கு வெளியே நல்ல நண்பர்களாக இருக்க வேண்டும். இத்தகைய பழக்க வழக்கங்களைக் கொண்ட வீரர்கள் தேசிய மட்டம் வரை செல்லக் கூடிய வாய்ப்பும் சந்தர்ப்பங்களும் ஏற்பட வழிசமைக்கும்.

எமது வீரர்கள் தேசிய மட்டம் வரையான போட்டிகளில் கலந்து கொள்வதுடன், தேசிய அணியிலும் இடம் பெறக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. இதனை நாம் மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும் என்றார். (ச -86)

# தோல்விகளைக் கண்டு துவண்டுவிடக் கூடாது

## வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.6

மாணவர்கள் தோல்விகளைக் கண்டு துவண்டு விடக்கூடாது. முயற்சி எடுக்க வேண்டும். முயற்சி தான் வெற்றிக்கான திறவு கோல் என்று வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் மு.இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனது மாணவப் பருவத்தில் பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் தவறாது பங்குபற்றுவேன்.

ஆனால் ஒரு முறை தானும் வெற்றியீட்டியதில்லை. ஓட்டப்போட்டியில் இறுதியாகவே வருவேன். உயரம் பாய்தலில் கை, காலை முறிப்பேன் அல்லது ஏதோவொரு விதத்தில் காயப்படுவேன்.

அதற்காக ஒருமுறையேனும் போட்டியில் கலந்து கொள்ளாமல் நான் இருந்ததில்லை. இன்று நான் இந்தப் பதவியில் இருக்கின்றேன் என்றால் எனது விடா முயற்சிதான் காரணம். அதே போல் மாணவர்களாகிய நீங்களும் சகல போட்டிகளிலும் பங்குபற்ற வேண்டும்.

மாணவர்கள் பெற்றோருக்கு மதிப்பளிப்பதுபோல் ஆசிரியர்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும். ஆசிரியர்கள் 30,35 வருடங்களாக ஆசிரியர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கற்பித்து மாணவர்கள் பொறியியலாளர்கள், வைத்தியர்கள் மற்றும் உயர் பதவிகள் வகிப் போர்களாக உருவாக்குகிறார்கள்.

மாதா, பிதா, குரு இவர்கள் எமக்குத் தெய்வம் போன்றவர்கள். எமது எதிர்கால வழிகாட்டிகள். எனவே இவர்களை நாம் மதித்து நடக்க வேண்டும்- என்றார்.

(ச-16-86-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்முடன் அமெ. மோதினால் மோசமான விளைவுதான்

### ஈரான் மதத்தலைவர் எச்சரிக்கை



**ஈரான் மீது அமெரிக்கா போர் தொடுத்தால் பதிலடி கொடுக்கத் தயாராக இருக்கிறது அந்த நாடு.**

ஈரான் மீது அமெரிக்கா போர் தொடுத்தால் பதிலடி கொடுக்கத் தயார் என்று ஈரான் நாட்டின் மதத்தலைவர் அயதுல்லா அலி கமேனி எச்சரித்துள்ளார்.

ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது எதிர் வரும் ஏப்ரல், மே அல்லது ஜூன் மாதங்களில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தலாம் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனெட்டா தெரிவித்ததாக அமெரிக்காவில் இருந்து வெளியாகும் தி வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை தகவல் வெளியிட்டது.

இதற்குப் பதிலளித்த பனெட்டா, இதுபோன்ற தாக்குதல் நடக்கலாம் என்று இஸ்ரேல் மறைமுகமாகச் சுட்டிக் காட்டியுள்ளது.

அதுகுறித்த அமெரிக்காவின் கவலையைத் தான் நான் வெளி யிட்டுள்ளேன் - என்றார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஈரான் மக்கள் மத்தியில் உரையாற்றிய அந்த நாட்டின் மதத் தலைவர் அயதுல்லா அலி கமேனி, ஈரானை மிரட்டுவதோ, தாக்குவதோ அமெரிக்காவுக்கு அபாயமாகத் தான் விடியும்.

பொருளாதாரத் தடைகளால் ஈரானின் அணுசக்தி முன்னேற்றத்தைத் தடுக்க முடியாது. பொருளாதாரத் தடைகள் மற்றும் போர் ஆகிய மிரட்டல்களுக்கு பதிலடியாக நாமும் எங்கள் பாணியில் மிரட்டலை நடைமுறைப்படுத்த வேண்டி வரும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார். (வ)



பெல்ஜியம் தலைநகர் புருசல்சில் உள்ள நேடோ படையின் தலைமைச் செயலகத்தில் நடந்த கூட்டத்தில், பங்கேற்ற அமெரிக்க செயலர் ஹிலாரி கிளின்டனை உரையாற்றுவதற்காக அமெரிக்க பாதுகாப்புத்துறை செயலர் லியோன் பனேட்டா அழைத்தார்.

# புடினை எதிர்த்து பேரணி




### ரஷ்யாவில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் முறைகேடுகள்

ரஷ்யாவில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் முறைகேடுகள் நிகழ்ந்ததாக விளாடிமிர் புடினை எதிர்த்து நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

கடந்தாண்டு டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி ரஷ்யாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதில் தற்போது பிரதமர் விளாடிமிர் புடினின் ஆளும் ஐக்கிய ரஷ்ய கட்சி பல மோசடிகளைச் செய்து வெற்றி பெற்றதாகக் கூறி மக்களும், எதிர்க்கட்சிகளும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

டிசெம்பர் மாதம் மட்டும் புடினுக்கு எதிராக ஆயிரக் கணக்கானோர் திரண்டு பேரணிகள் நடத்தினர். இந்த நிலையில் மூன்றாவது முறையாக தலைநகர் மாஸ்கோவில் ஆயிரக் கணக்கானோர் புடினை எதிர்த்துக் கோஷம் எழுப்பியபடி பேரணி நடத்தினர்.

ஆதரவுப் பேரணியில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டிருக்கலாம் என்று ஊடகங்கள் தெரிவித்துள்ள நிலையில், 23 ஆயிரம் பேர் தான் வந்தனர் என்று மாஸ்கோ பொலிஸ் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

எதிர்ப்புப் பேரணியில் 90 ஆயிரம் பேர் கலந்து கொண்டதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் இந்த எண்ணிக்கை மிகைப்படுத்தப்பட்டது என்று ஊடகங்கள் தெரிவித்தன. (வ)

# வான்கூரில் நில நடுக்கம்

கனடாவின் பிரிட்டிஷ் கொலம் பியாவில் உள்ள வான்கூவர் தீவின் மேற்கு பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் அப்லெட்டில் இருந்து சுமார் 170 கிலோமீற்றர் தூரத்தில் 5.7, ரிக்டர் அளவில் ஏற்பட்டது.

சுனாமி ஏற்பட வாய்ப்பில்லை என்று கொலரோடோவில் உள்ள தேசிய நிலநடுக்க தகவல் மையம் தகவல் வெளியிட்டுள்ளது.

வான்கூவர் மற்றும் விக்டோரியா மாகாண பகுதிகளில் இந்த நில நடுக்கம் உணரப்பட்டதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இது குறித்த சேதவிரவம் வெளியாகவில்லை. (வ)

# கடாபியின் திருமண மோதிரம் ஏலத்தில்



லண்டன், பெப்.6

லிபிய அதிபர் கடாபியின் ரத்தம் படிந்த சட்டை, திருமண மோதிரத்துக்கு 10 கோடி ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவற்றை விற்க கடும் எதிர்ப்பும் ஏற்பட்டுள்ளது.

லிபியாவில் சர்வாதிகார ஆட்சி நடத்தியவர் அதிபர் கடாபி. மக்கள் புரட்சி ஏற்பட்ட பின் தலைமறைவானார். கடந்த ஒக்ரோபர் மாதம் சிர்தே பகுதியில் பதுங்கியிருந்த கடாபியை, புரட்சி படையினர் அடித்துக் கொன்றனர். அப்போது அவர் அணிந்திருந்த திருமண மோதிரம், ரத்தக் கறை படிந்த சட்டை ஆகியவற்றை லிபியாவைச் சேர்ந்த அகமது வர்பாலி என்பவர் கைப்பற்றி உள்ளார். இவற்றை தற்போது ஐரோப்பிய நாடுகளில் ஏலத்தில் விற்கவர்பாலி முடிவு செய்துள்ளார்.

சபியாவை கடாபி திருமணம்செய்த போது அணிந்த வெள்ளி மோதிரத்தில் 1970.09.10 என்று திகதி இடம்பெற்றுள்ளது. இந்த மோதிரத்தின் படம் இணையத் தளத்தில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. அதே போல் ரத்தக் கறை படிந்த சட்டையும் விற்பனைக்கு வந்துள்ளது என்று லண்டனில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. இதற்கு இணையத்தளத்தில் பலரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

கடாபியின் மோதிர மும் சட்டையும் வர்பாலிக்குச் சொந்தமானது அல்ல. அவற்றை அவர் விற்கக் கூடாது. ஏனெனில் அந்த பொருள்கள் லிபியாவுக்குச் சொந்தம் என்று பேஸ்புக்கில் பலரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

# எகிப்து கலவரம்: சாவு எண்ணிக்கை 80 ஆக உயர்வு

எகிப்தில் நடைபெற்ற பிரீமியர் லீக் கால்பந்தாட்ட போட்டியில் ஏற்பட்ட கலவரத்தில் 'உயிரிழந்தோர் எண்ணிக்கை 80 ஆக அதிகரித்துள்ளது.

எகிப்து நாட்டில் உள்ள சிட்டி ஆப் போர்ட் நகரில் உள்ளூர் கால்பந்து அணிகளான அல் அலி மற்றும் அல் மாஸ்ரி ஆகிய அணிகள் மோதின.

இரு அணிகளுக்கும் பலத்த ரசிகர்கள் ஆதரவு இருந்து வந்தது. இந்தநிலையில் சிட்டி ஒப் போர்ட் நகரில் மேற்கண்ட இரு அணிகளும் மோதும் போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

போட்டியைக் காண ஆவலுடன் ரசிகர்கள் மைதானத்தில் திரண்டிருந்தனர். இந்த நிலையில் போட்டி ஆரம்பமாவதற்கு கால தாமதம் ஏற்பட்டதாகவும், அதனையடுத்து ரசிகர்கள் ஒருவருக்கொருவர் தங்களது அணிகளை ஆதரித்தும் ரகளையில் ஈடுபட்டனர்.

# போர் ஒத்திகையை ஆரம்பித்தது ஈரான்

ஈரானின் அணு ஆயுதக் கொள்கைக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இந்த நிலையில் ஈரானின் அணு உலைகள் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் குண்டு வீச்சு அச்சுறுத்தல் இருந்தது. அதற்கு ஏற் றார் போல் அமெரிக்காவின் ஆப்ரகாம் லிங்கன் விமானம் தாங்கி போர்க்கப்பல் ஈரான் பகுதியில் நிலை நிறுத்தப்பட்டது.

இதற்கு மிரட்டல் விடுக்கும் வகையிலும், மேற்கத்திய நாடுகளுக்கு எண்ணை எடுத்து செல்வதைத் தடுக்கவும் ஈரான் போர் ஒத்திகை நடத்தி வருவதாகத் தெரிகிறது. தற்போது தெற்கு பகுதியில் நேற்று முன்தினம் மீண்டும் போர் ஒத்திகையை ஆரம்பித்தது. இந்த ஒத்திகை ஒருவாரம் நடைபெற உள்ளது. (வ)

# லண்டனில் பனிப்பொழிவு விமான சேவைகள் ரத்து

லண்டனில் நேற்று முன்தினம் மாலை ஆரம்பித்த கடும் பனிப் பொழிவால் நகரத்தின் பலபகுதிகள் ஸ்தம்பித்துள்ளது. வீதிகள் முழுவதும் பனியால் மூடப்பட் டுள்ளன. கடும் பனி கொட்டுவதால் லண்டன் ஹீத்ரூ விமான நிலையம் மற்றும் கட்விக் விமான நிலை யங்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளன.

திடீரென கடுமையாகத் தாக்கிய பனிக்கட்டிகளால் சுமார் 3 அங் குலத்துக்கு மேல் பனி படர்ந்துள் ளதாகவும் மற்றும் (- 5) முதல் (- 6) டிகிரி செல்சியஸ் வரையான கடும் குளிர் கால நிலை நிலவுவதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

நேற்று ஞாயிற்றுக் கிழமை பனிப் பொழிவு வீழ்ச்சியடையலாம் என்றும் வானிலை அவதானிப்பு நிலையம் தெரிவித்துள்ளது. இருப் பினும் அடுத்த வாரத்தில் மேலும் கால நிலை மோசமடையலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்தவார முற்பகுதியில் லண்டன் காலநிலை வரலாறுகாணாத அளவு (-12) டிகிரி செல்சியஸ் வரை செல்லலாம் என்றும் காலநிலை அவதானிப்பு நிலையம் தெரிவித்துள்ளது. (வ)



# சிரியாவில் தொடரும் கலவரம்; 350 பேர் சாவு



டமாஸ்கஸ், பெப்.6

சிரியாவில் ஆட்சிக்கு எதிராக நடக்கும் கலவரத்தை அடக்க நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 350 பேர் கொல்லப்பட்டனர்.

சிரியாவில் அதிபர் பஷர் அல்- ஆசாத் ஆட்சிக்கு எதிராக கடந்த 10 மாதங் களாக பொதுமக்கள் கலவரம் நடத்தி வருகின்றனர். இது வரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இதில் உயிரிழந் துள்ளனர். இன்னும் போராட்டம் முடிவுக்கு வரவில்லை. இந்த நிலையில் நேற்று முன்தினம் ஹோம்ஸ் நகரில் போராட்டக்காரர்கள் திரண்டனர்.

இதனால் அங்கு பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டது. அதிகளவான ராணுவத்தினரும் குவிக்கப்பட்டனர். டாங்கிகளும் அணிவகுத்து நின்றன. அப்போது அதிபர் ஆசாத்துக்கு எதிராக போராட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினார்கள். தொடர்ந்து [illegible] வர்கள் மீது ராணுவம் துப்பாக்கி சூடு நடத்தியது.

பீரங்கிகள் மூலம் குண்டுகள் வீசப் பட்டன. அதில் 4 பல மாடி கட்டடங்கள் இடிந்து தரை மட்டமாயின. இதனால் பொதுமக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். இந்தச் சம்பவத்தில் 217 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயம் அடைந்தனர். கட்டட இடிபாடுக ளுக்குள் இன்னும் ஏராளமானவர்கள் சிக்கித் தவிக்கின்றனர்.

இதனால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. சிரியா முழுவதும் ராணுவத்தினர் சுற்றி [illegible]னர். இதேவேளை இதனை அரச படுகொலை என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021-2280065
தொலைநகல்: 021-2280066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377,
021-2262395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021-2270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மானு சந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0755732271, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சஹாா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 0232223311

## மாற்றம் ஏதுமில்லா ஆட்சி

இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நாட்டின் 64ஆவது சுதந்திர தினத்தை அநுராதபுரத்தில் கொண்டாடி முடித்த கையோடு இன்று யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கிறார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நீச்சல் தடாகத்தை திறந்து வைப்பதும் சாவகச்சேரியில் நோயாளர் விடுதியைத் திறந்து வைப்பதும் அவரது நிகழ்ச்சிகள்

நீச்சல் தடாகத்தையும் நோயாளர் விடுதியையும் ஜனாதிபதியே வந்து திறந்து வைக்கிறார் என்பது கவனத்துக்குரியதும் சிறப்பானதும்தான். அபிவிருத்தி நடவடிக்கைகளில் வடக்கு கிழக்குக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்பட்டு வருவதாக அரசு கூறிவருகிறது. அதன் ஒரு பகுதியாக யாழ்ப்பாணத்தின் பாடசாலை ஒன்றில் நீச்சல் தடாகத்தையும் மருத்துவமனையில் நோயாளர் விடுதியையும் திறந்து வைப்பதும் மக்களுக்கு மகிழ்ச்சியைத்தான் தரவேண்டும்.

போரை முடித்து வைத்த பின்னர் நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதாக அரசு கூறிவருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் தெற்கில் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்பட்ட அத்தகைய திட்டங்கள் குறித்து அரசு பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

அம்பாந்தோட்டை துறைமுகம், கட்டுநாயக்கா விமான நிலைய விரிவாக்கம், தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, தாமரைத் தடாக கலாசார மண்டபம் போன்ற மிகப் பெரிய திட்டங்கள் அரசின் பெயர் சொல்லும்படியாகத் திறந்து வைக்கப்பட்டன. சுற்றுலாப் பயணிகளைக் கவரவும் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் இந்தத் திட்டங்கள் உதவும் என்று கூறும் அரசு, இது போன்ற வளர்ச்சியால் ஆசியாவின் அதிசயமாக இலங்கை மாறும் என்றும் எதிர்வுகூறுகிறது.

தெற்கில் நிறைவேற்றப்பட்ட இத்தகைய திட்டங்கள் உண்மையில் மிகப் பெரியவைதான். இவற்றால் மக்களுக்கு உடனடிப் பயன் எதுவும் இல்லை என்ற எதிர்க்கட்சிகளின் கண்டனங்களையும் தாண்டி, அவை பிரமாண்டமான திட்டங்கள் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதே. பெரும் நிதிச் செலவில் மேற்கொள்ளப்பட்ட துறைமுகம் மற்றும் விமான நிலைய விரிவாக்கம் போன்றன உடனடியாக இல்லாவிட்டாலும் மெல்ல மெல்ல இலங்கைக்கு வருவாயை ஈட்டிக் கொடுக்கவல்லவை. அதிவேகப் பாதை, ஒரு பகுதி மக்களுக்காவது போக்குவரத்தை வேகப்படுத்திக் கொடுத்திருக்கிறது.

கடந்த 3 வருடங்களில் இத்தகைய பெருந் திட்டங்களைத் தெற்கில் திறந்து வைத்த ஜனாதிபதியால் வடக்கில் அதே காலப் பகுதிக்குள் பெயர் சொல்லக்கூடிய வகையில் ஒரு நீச்சல் தடாகத்தையும் நோயாளர் விடுதியையும் திறந்து வைக்க முடிந்திருக்கிறது.

இங்கும் ஒரு விமான நிலையம் இருக்கிறது அதனை விரிவாக்கி சர்வதேச விமான நிலையம் ஆக்க வேண்டும் என்று நீண்ட நாள்களாகத் திட்டமிடப்படுகிறது. காங்கேசன் துறை புனரமைக்கப்படும் – அபிவிருத்தி செய்யப்படும் என்று கூறப்படுகிறது ஆனால், இன்னும் நடைபெறவில்லை. ரயில் பாதையையும், காங்கேசன் ஆலையையும் இந்தியர்கள் புனரமைப்பார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்துக்கான கலாசார மண்டபத்தையும் அவர்களே அமைக்கப் போகிறார்கள்.

விமான நிலைய விரிவாக்கம், புதிய துறைமுகம் அமைப்பு, புதிய கலாசார கட்டடம் என்பவற்றைத் தெற்கில் அமைக்க முடிந்த இலங்கை அரசால் அவற்றை ஏன் வடக்கில் அமைக்க முடியவில்லை? என்ற கேள்விக்கு மஹிந்த ராஜபக்ஷ இன்று பதிலளித்தால் நன்றாக இருக்கும். வடக்கில் அபிவிருத்தி என்பது நீச்சல்குளமும் நோயாளர் விடுதியும்தானா என்ற சந்தேகம் மக்களிடம் நிலவுகிறது.

ஒரு வீட்டுக்குள்ளாக இருந்தால் அரசின் இந்தகு போக்கை மாற்றாந்தாய் மனப்பான்மை என்பார்கள். காலம் காலமாக தெற்கு அரசுகள் இந்த மனப்பான்மையை கட்டி வளர்த்ததால்தான் 30 வருடங்களால் இலங்கை நாடு ஆயுத வன்முறையைச் சந்தித்தது. மஹிந்த ராஜபக்ஷ காலத்திலும் அதுவேதான் தொடரும் எனில் அவர் நாவில் தேன் தடவிப் பேசும் நல்லிணக்கமும் ஒற்றுமையும் எட்டாக்கனிகள்தான்.

# ஜெனிவா மாநாட்டில் வரவிருப்பது அரசை நிர்ப்பந்திக்கும் தீர்மானம்

## உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பெற அமெரிக்கா வகுக்கும் வியூகம்

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை 05.02.2012 வெளியிட்டிருந்த அரசியல் விமர்சனத்தின் ஒரு பகுதி

தொகுப்பு: கோகுலன்

கடந்த வாரம் அமெரிக்க அரசின் வெளியுறவுச் செயலாளர் ஹிலாரி கிளின்ரன் அம்மையார் இலங்கை அரசுக்கு இறுதி எச்சரிக்கையொன்றை விடுத்தார். அதன் சாரம்சம் என்னவென்றால் 2009 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற போரின் இறுதிக்கட்ட சம்பவங்கள் தொடர்பாகப் பொறுப்புக் கூற வேண்டும் அல்லது அடுத்து வரும் நாள்களில் ஜெனீவாவில் இடம்பெறப் போகும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் கொண்டு வரப்படவிருக்கும் தீர்மானத்துக்கு முகம்கொடுக்கவேண்டும் என்பதாகும்.

பாக்கு வெட்டியின் நடுவில் மாட்டிக் கொண்டுவிட்ட பாக்கின் நிலையில் இலங்கை அரசின் நிலைமை இப்போது காணப்படுகின்றது. இந்த விதமாக அமெரிக்காவின் ஆதரவுடன் கொண்டுவரப்படவிருக்கும் இத் தீர்மானத்திலிருந்து இலங்கை அரசினால் தப்பித்துக் கொள்ளவும் முடியாத, அதனை தேற்கடிக்கவும் முடியாத நிலை இப்போது தோன்றியிருக்கின்றது.

இதில் இன்னும் சிக்கல் என்னவென்றால் இலங்கைக்கு வரப் போகும் பொருளாதார பேரிடர்களின் போது, அமெரிக்காவின் உதவி பெரிதும் தேவைப்படுகின்ற நிலையில் இந்த சிக்கல் தோன்றியிருப்பது தான். இலங்கையின் 93 வீத கச்சா எண்ணெயை வழங்கி வரும் ஈரான் மீதான அமெரிக்கத் தடையிலிருந்து தமக்கு விலக்களிக்க அல்லது சவூதி அரேபியாவை இலங்கைக்கான எண்ணெய் ஏற்றுமதியை அதிகரிக்கும் படி வற்புறுத்தச் செய்யும் படி கேட்கும் நிலைக்கு அரசு கடந்த வாரம் தள்ளப்பட்டிருக்கிறது. ஈரான் மீதான பொருளாதாரத் தடை தொடர்பாக விவாதிப்பதற்காக இலங்கைக்கு வந்திருந்த அமெரிக்க திறைசேரியின் பிரதி உதவிச் செயலரிடம் இந்த கோரிக்கை வைக்கப்பட்டது. இதுவும் கூட கடந்த வாரம் ஈரான் இலங்கைக்கு தொடர்ந்து சுத்திகரிக்கப்படாத எண்ணெயை வழங்கத் தயாராக இருப்பதாக அறிவித்திருந்ததை ஏற்பதா? கைவிடுவதா? என்ற வகையில் இன்னமும் தீர்மானிக்கப்படாத நிலையிலாகும்.

இதேவேளை இலங்கைக்கு கடன் வசதிகளை நீடிக்கும் படியாக ஈரானிடம் கேட்டுக் கொள்வதற்காக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலை தெஹ்ரானுக்கு அனுப்பி வைப்பதற்கான முன் முயற்சியொன்று நடைபெறுகின்றது. தற்போது நான்கு மாத கடன் அடிப்படையில் ஈரான் கச்சா எண்ணெயை வழங்கி வருகின்றது. அத்துடன் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைக்கான விலையை முன் கூட்டியே ஈரானால் வழங்க முடியுமா என்பதை உறுதி செய்வதாக கப்ராலின் பயணம் இருக்கும்.

அவ்வாறு கப்ராலின் தெஹ்ரான் [illegible] அது சம்பாதித்துக் கொள்ளும்.

"இலங்கை அரசு எதிர்பார்ப்பது போல் அரசைக் கண்டிக்கும் வகையிலான தீர்மானமல்ல; அரசை நிர்ப்பந்திக்கும் வகையிலான தீர்மானமே நிறைவேற்றப்படவிருப்பதாகத் தெரிகிறது.

அத்துடன் வாஷிங்டனுடனான இலங்கையின் வர்த்தகத்தையும் மோசமாகப் பாதிக்கும். அமெரிக்காவின் ஈரான் மீதான பொருளாதாரத் தடையை இலங்கை மீறியதான குற்றச்சாட்டின் மீது இந்த நிலை ஏற்படும்.

இந்த சங்கடமான நிலைமை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளமைக்கு இன்று அனேகமாக இலங்கை வெளியுறவு அமைச்சின் செயற்பாடு இருப்பதுடன் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை ஆழமாக ஆராயப்பட்ட நிலையில் முன்னெடுக்கப்படாமையையுமே எடுத்துக்காட்டுகின்றது.

மனித உரிமைப் பேரவை மற்றும் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் இரண்டுமே வெவ்வேறு விடயங்கள் தான். ஆனால் அமெரிக்காவிலுள்ள தமிழர் குழுக்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒபாமா நிர்வாகத்திலுள்ள முக்கிய புள்ளிகளுக்கு இலங்கைக்கு எந்தவித சலுகையும் காட்ட வேண்டாம் என்று எழுதி வற்புறுத்துவதில் வெற்றிகண்டுள்ளார்கள். இந்த விடயத்தில் ஜனநாயகக் கட்சியின் முக்கிய புள்ளிகளையும் அவர்கள் தம் வசப்படுத்தியுள்ளார்கள். அமெரிக்காவில் இது தேர்தல் காலம் என்பதால் அங்குள்ள தமிழர் குழுக்களுக்கு தேர்தலில் நிற்கும் கட்சிகள் செவிசாய்க்காமல் இருக்கப் போவதில்லை.

கிளின்ரனின் செய்தி வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸிற்கு அனுப்பப்பட்டிருந்த ஒரு குறிப்பில் அடங்கியிருந்தது. ஜனவரி 27 ஆம் திகதி இலங்கையிலுள்ள பதில் அமெரிக்க தூதுவர் வெலரீஸ் எஸ். பவுலர் நேரில் அதனை அமைச்சர் பீரிஸிடம் வழங்கியிருந்தார். பதில் தருவதாகக் கூறியிருந்த போதிலும் அவ்வாறு செய்யாமலே பீரிஸ் தமது இரண்டாவது ஆபிரிக்க நாடுகளுக்கான பயணத்தை தொடங்கிவிட்டார். அதற்கு முன்னரே ஜனாதிபதியைச் சந்தித்து கிளின்ரனின் செய்தி பற்றி விளக்கமளித்திருந்தார். பீரிஸ்தான் வெளிநாடு சென்றுள்ளார் என்றால், அவரது பிரதி அமைச்சர் நியுமோல் பெரேராவும் இஸ்ரேலினால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஒரு விருந்துபசாரத்தில் கலந்து கொள்ள சென்றுவிட்டார். இந்தப் பயணத்துக்கான செலவுகள் யாவும் அவர்களாலேயே வழங்கப்படுகின்றன. முக்கியமான விடயங்கள் எங்கோ இருக்க இந்தப் பயணம் பிரதி அமைச்சருக்கு தேவைப்பட்டிருக்கிறது.

கிளின்ரன் கடிதம் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருந்ததாக நம்பகமாக அறிய வருகின்றது.

தேசிய நல்லிணக்கத்தை முன்னேற்றுவதற்காக முக்கியமான, சாத்தியமான பல பரிந்துரைகளை நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்திருப்பதைக் கடிதம் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. வடக்கு கிழக்கில் மக்கள் வாழ்வியலில் இருந்து ஆயுதப் படைகளை திரும்பப் பெற்றுக் கொள்ளல், ஆயுதக் குழுக்களைக் கட்டுப்படுத்துதல், சிவில் சமூக மற்றும் ஜனநாயக அமைப்புக்களைப் பலப்படுத்துதல், பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள், அவர்கள் காணாமல் போனமை தொடர்பாக புலனாய்வு செய்தல் போன்றவை.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் மீது இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கும் என்று அமெரிக்க அரசு எதிர்பார்த்திருந்துள்ளது. நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட போது இலங்கை அரசாங்கம் ஒரு செயல் திட்டத்தை அறிவிக்கும் என்றும் அமெரிக்கா எதிர்பார்த்திருந்துள்ளது.

ஆனால் விரிவானதொரு செயல்திட்டம் அறிவிக்கப்படாமை குறித்து அமெரிக்கா ஏமாற்றமடைந்துள்ளது.

எனவே தான் 2012 மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பாக தாக்கல் செய்யப்படவிருக்கும் அறிக்கையை அமெரிக்கா ஆதரிக்க தீர்மானித்திருக்கிறது. பொறுப்புக் கூறல் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவும், நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தவும், இதில் கோரப்படவிருக்கின்றது. அமெரிக்கா எதனை இலங்கை அரசு செய்ய வேண்டும் என்று விரும்புகிறது என்றால் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் வடக்கில் மாகாணசபை தேர்தல் போன்ற விடயங்களில் அரசு நகர்வு போக்கைக் காட்ட வேண்டும் என்பதாகும். இது இலங்கையில் நீடித்த அமைதி, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் போன்றவற்றை அடைவதற்கு தேவையென்று கருதப்படுகின்றது.

பெப்ரவரி 27 ஆம் திகதி முதல் மார்ச் 23 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாகக் கொண்டுவரப்படக் கூடிய தீர்மான முன் வடிவின் தன்மை, எவ்வாறு அமைந்திருக்கும் என்பது இனிமேல்த்தான் தெரிய வருவதாய் இருக்கும். இந்த விடயம் தொடர்பாக அமெரிக்காவும் பல உறுப்பு நாடுகளுடன் ராஜதந்திர மட்டத்தில் கலந்துரையாடலில் இறங்கியிருப்பதாகத் தெரிகின்றது. இலங்கை மீது போரின் இறுதிக்கட்டத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பாக பொறுப்புக் கூறும்படி கோருவதற்கான புலனாய்வுகளை மேற்கொள்ளக்கோரும் தீர்மானம் ஒன்று சபையில் நிறைவேற்றப்பட வேண்டுமானால் அதற்கு உறுப்பு நாடுகளின் பெரும்பான்மை ஆதரவு தேவைப்படும் என்று இலங்கை அதிகாரிகள் கருதியபோதிலும் இப்போது அமெரிக்கா மேற்கொண்டு வரும் ஆலோசனைகள் வேறு திசையில்

(IX ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் பேரால் நடந்த தில்லுமுல்லு

ரி.பி.அன்ரன்




இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் யாழ்ப்பாண வருகையையொட்டி வடக்கில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. கொழும்பில் இருந்து வந்த ஜனாதிபதியின் சிறப்புப் பாதுகாப்புப் படையினர் மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் நடக்கும் இடங்களை ஒரு வாரத்துக்கு முன்னரே பொறுப்பெடுத்துக் கொண்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

அதேபோன்று இலங்கை ஜனாதிபதி யாழ்ப்பாணம் வரும்போது அவரது மனம் மகிழும் வகையில் அவருக்கு 'கட்டவுட்' வைக்கவும் தீர்மானிக்கப்பட்டது. (யார் தீர்மானித்தார்கள் என்பது புரியாததாகவே இருக்கிறது).

ஜனாதிபதியின் வருகை திடீர் எனத் திட்டமிடப்பட்டதாலோ அல்லது சுதந்திரக் கட்சியின் அமைப்பாளரான அங்கஜனுக்கு 9ஆம் திகதி திருமணம் என்பதாலோ தெரியாது சுதந்திரக் கட்சியினர் இம்முறை இந்தக் 'கட்டவுட்' வைப்பதில் மும்முரம் காட்டியதாகத் தெரியவில்லை. கடந்த முறை மஹிந்த யாழ்ப்பாணம் வந்தபோது 'கட்டவுட்' வைப்பதில் ஆர்வம் காட்டிய அமைச்சர் டக்ளஸின் ஆதரவாளர்களும் இம்முறை அதில் ஆர்வம் காட்டவில்லை.

ஆனால், கடந்த வாரத்தில் யாழ்ப்பாணத்தில் மஹிந்த ராஜபக்ஷ பயணம் செய்யும் பாதைகளில் திடீரென 'கட்டவுட்'கள் முளைத்தன. வேறு எந்த அரசியல் பிரமுகரது படங்களையும் தாங்கியிராத இந்தக் 'கட்டவுட்'கள் ஆர்வத்தைத் தூண்டின. விசாரித்ததில் சில தனியார் நிறுவனங்களிடம் இலங்கை ஜனாதிபதிக்குக் 'கட்டவுட்' மற்றும் 'பானர்' வைப்பதற்காகப் பணம் திரட்டப்பட்டதாகத் தெரிய வந்தது. வேறு சில நிறுவனங்கள் 'கட்டவுட்' மற்றும் 'பானர்'களைத் தாமே செய்து வழங்கியுமிருந்தன.

ஆனால், திவிநெகும என்ற திட்டத்தின் கீழ் வைக்கப்பட்ட விளம்பர 'கட்டவுட்' பெரிதாக மூலையில் வெள்ளைத் தாமரைப் பூவுடன் காணப்பட்ட. இந்த 'கட்டவுட்' யாரால் வைக்கப்பட்டது என்ற விவரம் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

இது ஆவலை இன்னும் தூண்ட, கிளற ஆரம்பித்தோம். கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக சுமார் 30 லட்சம் ரூபா பணத்தில் மிகச் சாதாரணமாகத் தில்லுமுல்லு இடம்பெற்றமை தெரியவந்தது.

## கட்டவுட் தில்லுமுல்லு

வைக்கப்பட்டுள்ள 'கட்டவுட்'களில் இருவகையானவை கொழும்பில் உள்ள நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்பட்டு இங்கு கொண்டு வந்து பொருத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் செய்து பொருத்தப்பட்டால் ஏற்படக்கூடிய செலவிலும் பார்க்க 4 மடங்கு பணம் இதற்காகச் செலவிடப்பட்டுள்ளது என்பது எமது விசாரணைகளில் இருந்து தெரிய வந்தது.

6' X 8' அளவிலான, மஹிந்த ராஜபக்ஷவின் தனிப் படம் போட்டு "நீடூழி வாழ்க" என்று எழுதப்பட்ட 'கட்டவுட்' ஒன்றை யாழ்ப்பாணத்தில் செய்வதற்கு அதிகபட்சமாக 20,000 ரூபா செலவாகும் என 'உதயன்' எடுத்த கேள்வி கோரலில் இருந்து தெரிகிறது. ஆனால், கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட இந்த 'கட்டவுட்'களுக்கு அதைப் போல நான்கு மடங்குக்கு மேற்பட்ட பணம் செலவிடப்படுகிறது என்பதை எம்மால் ஆதாரத்துடன் நிரூபிக்க முடியும்.

## மோசடியின் அளவு

அதாவது ஒரு 'கட்டவுட்' செய்வதற்கு சுமார் 60,000 ரூபா மேலதிகமாகச் செலவிடப்படுகிறது.




இதுபோன்று 25 'கட்டவுட்'கள் செய்யப்பட்டுள்ளன. அதனடிப்படையில் 15 லட்சம் ரூபா நிதி மேலதிகமாகச் செலவிடப்படுகிறது.

உள்ளூரில் மிகக் குறைந்த செலவில் இத்தகைய வேறு 'கட்டவுட்'கள் செய்யப்பட்டுள்ள நிலையில் ஏன் இவ்வளவு அநியாயச் செலவில் கொழும்பு நிறுவனத்துக்கு அந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டது?

## மேலும் சில கட்டவுட்

இந்தக் கேள்விக்கு விடை காண்பதற்கு முன்னர்...

இந்தக் 'கட்டவுட்'களைச் செய்தது எஸ்.என்.கே. ஹோல்டிங்ஸ் என்ற கொழும்பிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றே.

இதே நிறுவனம் 10'X6' என்ற அளவிலான 'திவிநெகும' கட்டவுட்களையும் ஜனாதிபதி மஹிந்த மற்றும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரின் படங்களுடன் நகரில் நிறுவியுள்ளது.

இந்த அளவிலான கட்டவுட்களை யாழ்ப்பாணத்தில் செய்வதாயின் அதிகபட்சமாக 25,000 ரூபாவாகும் என உதயன் பெற்ற கேள்விக் கட்டளைகள் காட்டுகின்றன. ஆனால், அதே 'கட்டவுட்'களும் சுமார் மூன்றரை மடங்கு அதிக பணம் கொடுத்தே செய்யப்பட்டுள்ளன. இதன் அடிப்படையிலும் சுமார் 15 லட்சம் ரூபா மேலதிகமாகச் செலவிடப்பட்டுள்ளது.

## யார் கொடுத்த காசு

இந்த 'கட்டவுட்'களுக்கான ஒரு தொகுதி பணம் வடமாகாண விவசாய அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. விவசாய அமைச்சின் செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, 'நிவிநெகும' திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து அந்தத் திட்டம் தொடர்பான 'கட்டவுட்'கள் செய்யப்பட்டன என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்காக அவை செய்யப்படவில்லை என்றும் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த திட்டம் மற்றும் நிதிக் கொடுப்பனவுகள் குறித்து வடக்கு மாகாண பிரதம செயலருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, ஜனாதிபதியின் பயணம் பற்றிய ஏற்பாடுகள் மத்திய அரசைச் சேர்ந்தவை என்ற காரணத்தால் அது குறித்துத் தமக்கு ஒன்றும் தெரியாது என்று கூறினார்.

ஜனாதிபதியின் 'கட்டவுட்'கள் தொடர்பாக தனக்குத் தெரிந்தவரை மாகாண அமைச்சுக்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அவற்றுக்காக நிதிப் பரிமாறல்கள் செய்யவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

ஆளுநரின் செயலாளர் மற்றும் வடமாகாண திறைசேரிச் செயலர் ஆகியோரைத் தொடர்பு கொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள் சாத்தியப்படாததால் அவர்களின் கருத்துக்களை அறிய முடியவில்லை

## சூத்திரதாரி யார்?

அவரது இந்தப் பதில் ஆர்வத்தைத் இன்னும் தூண்டியதால் இந்த வியாபார ஒப்பந்தத்தின் பின்னணியில் என்ன நடந்தது என்பதை நாம் துருவினோம். கிடைத்த தகவல்கள் அதிர்ச்சி அளித்தன.

இந்தக் 'கட்டவுட்'களுக்கான பணத்தை வடமாகாண விவசாய அமைச்சின் ஊடாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அது தொடர்பான கேள்வி கோரல்களை அமைச்சு வெளியிட்டிருக்கவில்லை என்பதும் அமைச்சின் செயலருக்கு முகவரியிடப்பட்டு அந்தக் கேள்வி கோரல்கள் அனுப்பி வைக்கப்பட்டன என்றும் உதயனுக்கு உறுதியாகத் தெரியவந்தது.

இது பொது நிதிக் கொடுக்கல் வாங்கல்களுக்கான அரசின் விதிமுறைகளுக்கு மாறானது என்பதை மாவட்டத்திலுள்ள அரச உயர் அதிகாரிகள் உதயனுக்கு உறுதிப்படுத்தினார்கள்.

## எல்லாம் தில்லுமுல்லு

எஸ்.என்.கே. நிறுவனத்தை தொடர்பு கொண்டு இவ்வாறான 'கட்அவுட்'கள் செய்ய வேண்டியிருப்பதால் அவற்றுக்கான கேள்வி கோரல்கள் தேவை என்று கேட்டோம். முதலில் எம்முடன் நன்றாகவும் நட்பாகவும் பேசிய நிறுவனப் பிரதிநிதி, "நாங்கள்தான் வடக்கில் அதிகம் அரசின் வேலைகள் எல்லாம் செய்கிறோம். உங்களுக்கும் சிறப்பாகச் செய்து தரலாம். நீங்கள் வேறு இடங்களில் கேட்கத் தேவையில்லை நாங்களே மூன்று கேள்விகோரல்களை அனுப்பி வைக்கிறோம். எங்களிடம் அத்தகைய நிறுவனங்கள் இருக்கின்றன" என்றார்.

சரி எனக்கூறி எமது 'பக்ஸ்' இலக்கத்தைக் கொடுத்து அவற்றை அனுப்பி வைக்கும்படி நாம் கோரினோம். ஆனால், சிறிது நேரத்தில் தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்திய அவர் "நீங்கள் மீடியாவைச் சேர்ந்தவர்களா?" என்று கேட்டார்.

(IXஆம் பக்கம் பார்க்க)

**40 'கட்டவுட்'கள் செய்வதில் சுமார் 30 லட்சம் ரூபா கொழும்பிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அரச நிறுவனத்தால் தேவையற்ற விதத்தில் செலுத்தப்படுகிறது. அரசியல் செல்வாக்குகளால் திட்டமிடப்பட்டு செயப்படுத்தப்படும் இத்தகைய தில்லுமுல்லுகளால் மக்கள் பணம் வீணே கொட்டப்படுகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம், வ
# அருள்மிகு ஸ்ரீ அர
# தேர்த்திருவிழா சி



### விநாயகப் பெருமானின் அருள் பெறுவோமாக

யாழ்ப்பாணம் மணிக் கூட்டு வீதியில் வீற்றிருக்கும் அருள் மிகு விநாயகப் பெருமானுக்கு இன்று தேர் திருவிழா நடைபெற இருப்பதையிட்டு ஆசிவழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். எந்த காரியத்தை செய்யும் போதும் முதலில் விநாயகப் பெருமானை பூசித்து செய் வதே சைவமக்களது மரபு. விநாயகப் பெருமான் சைவமக்களின் முதல் முதற்கடவுளாகத் திகழ்கிறார். இப்படியான பெருமைமிக்க விநாயகப்பெருமான் வீதி வலம் வந்து அவர் மெய் அடியார்களது குறைகளை எல்லாம் போக்கி விடுவார். இந் நாளில் மக்கள் எல் லோரும் தேர் திருவிழாவில் பங்கு பற்றி விநாயகப் பெருமானின் அருளை பெறுவோமாக.

ஐ. கணேசலிங்கம், தலைவர்.

### மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பிரதேசத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ அரசடி விநாயகர் தேவஸ்தானம் முன்றாவது வருடமாக கொடியேற்றத் திருவிழாவை நடாத்தி இன்றய தினம் புதிய சித்திரத் தேரில் எழுந்தருளுவது சிறப்புக்குரியதே வண்ணர் பண்ணைப் பிரதேசத்தில் 1930 ஆம் ஆண்டில் மிகச்சிறியளவில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயம் 1942 களில் பொது நிர்வாக சபை ஊடாக வளர்ந்து வந்தது. தொடர்ந்து 1985 1988 ஆம் ஆண்டுகளில் கும்பாபிசேகம் நடைபெற்று இன்று கொடியேற்றத்திருவிழா வுடன் கூடிய மகேற்சவத்தைக் கொண்டாடுவது மிகவும் மகிழ்வுக்குரியதே அத்துடன் இன்றய தினம் புதிய சித்திரத்தேரில் பஞ்சமுக விநாயகப் பெருமான் எழுந்தருளி எல்லோருக்கும் அருள்பாலிக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.

திருமதி சுகுணரதி தெய்வேந்திரம்
பிரதேச செயலாளர் யாழ்ப்பாண


**சிறி நதியா**
**நகை மாளிகை**
01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:021-2222709
கிளை: 56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:021-2226744.

**Saranga Money Exchange**
157, Kasthuriyar Rd, Jaffna. 021 222 6972
**சிவா நகை மாடம்** கண்டி வீதி, சாவகச்சேரி. 021 4922398.
**சாரங்கா ஜுவல்லறி** 55, செட்டித்தெரு, கொழும்பு-11. 0112 434971.

**புதிய** கல்வி உலகின் புதி
**பொருளியல் க**
மணிக்கூட்டு வீதி, யாழ் நகர். (பெருமாள் கோயில் அருகில்)

**ARRUL GLOBAL EXPRESS**
INTERNATIONAL COURIER & CARGO SERVICE
- வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை (72 மணி நேரத்தில் ஒப்படைக்கப்படும்)
- உள்நாட்டு கடிதங்கள், பொதிகள் சேவை (24 மணி நேரத்தில் ஒப்படைக்கப்படும்)
- வெளிநாடுகளுக்கான பொதிகளை உங்கள் வீட்டிகே வந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

இல.1 பிறவுண்வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 6113.

**NEW SCIENCE HALL**
KANNATHDDY ROAD, JAFFNA.

**கலாலயா**
பயி
மணிக்கூட்டு வீதி, யாழ்

**ஹொட்டல் லிப்ரா**
174, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.

**ANUSH & NAREN DIESEL ENGINEERS**
அனுஷ் அன் நரேன் டீசல் என்ஜினியேஸ்
(Fuel Injection Pumps Parts & Service)
161, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். தெ.பே: 021 2228152

**Maniiyam Impex**
Dealers in Electrical & Electronic Goods
# 75(121A) Kasthuriyar Road, Jaffna,
Tel: 021 222 2819

**PAPPA WELDING WORKS**
**பாப்பா வெல்டிங் வேர்க்ஸ்**
நவீன தொழிநுட்ப கருவிகள் மூலம் சில்வர் வேலைகள் அனைத்தும் மற்றும் கேட்கிரில், ஆட்டோவிற்கான சகலவிதமான வேலைகளும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
021-2222588, 077-9749343.

**KO V**
Mu
192/1, Jaffna,

**Sivas Stores**
59, Clock Tower Road, Jaffna.
Tel: 021 222 4499.

**காந்தன் களஞ்சியம்**
498, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**சிறி மீனாட்சி நகை அகம்**
183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6109.

**செந்தா கபே அன் கூல்பார்**
**SENTHA CAFE & COOL BAR**
இல.196, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை மணிக்கூட்டு வீதி,
# அரசடி விநாயகர் தேவஸ்தானம்
# சிறப்புமலர் 06-02-2012



### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற முதல் வணக்கத்துக்கான விநாயகப் பெருமான் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் கோயில் கொண்டு எழுந்தருளி வழிபடும் அடியார்களின் துன்பம் நீக்கி இன்பம் தருவதால் அவருக்குப் புதிய சித்திரத்தேர் ஒன்று வடிவமைக்கப்பெற்று இன்று அதில் ஆரோகணிக்கும் திருவிழா நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். வினை தீர்க்கும் விநாயகருக்கு அழகான தேர் ஒன்று அமைத்திருக்கும் அடியார்களின் புண்ணிய கைங்கிரியம் பாராட்டுக்குரியது. மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிதென்பார்கள். அந்த வகையில் இந்த ஆலயத்தில் கொடியேறித் திருவிழா நடைபெறுவது திருவருட் செயலாகும்.

இன்று நிகழும் ரதோற்சவம் இனிதே நிறைவுற்று அடியார்கள் அல்லல் நீங்கி நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல கணநாதன் கருணை புரிய வேண்டுமென்று உளமாரப்பிராத்தித்து அருளாசிகள் வழங்குகின்றோம். நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து ஆசிநல்கி வாழத்துகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

உ
சிவமயம்

### மகோற்சவ குருவின் ஆசி

ஓங்கார நாயகனாகிய வண்ணை அரசடி விநா யகரின் ஆலய மகோற்சவம் ஆரம்பமாகி 3ஆவது வருட காலத்திலேயே புதிய சித் திரதேர் உருவாக்கப்பெற்று அத்தேரிலே எழுந்தருளி பக்தர்களுக்கு அருளினை வழங்கும் விநாயகப்பெருமான் சித்தி ரத்தேர் உருவாகுவதற்கு முன்னின்று உழைத் தவர்க ளுக்கும் அடியார்களுக்கும் சகல செல் வங்களும் வழங்கி நாடு செழிப்புற பிள்ளை யார் அருள்புரிய பிரார்த்திக்கின்றோம்.

சிவாச்சார்யாஜோதி
சிவ. ஜோதீந்திரக்குருக்கள்.



### இகபர சுகமருள்வாய் மணிக் கூட்டு வீதி விநாயகனே

விக்கினங்கள் தீர்த்தருளும் விநாயகப் பெருமானே மூசிக வாகனனே சித்திரத் தேரேறி வந்து பக்தர்களைக் காத்தருள் புரிவாய். பக்குவமாய் நாம் வாழ இன்று புதிய தேரினிலே ஆரோகணித்து பாவங்களையெல்லாம் வேரோடு களைந்து அழித்திடுவீர். நெக்குருகி நின்றே நாம் நித்தமும் வணங்கினோம் கணபதியே. நேசமும் பாசமும் காட்டி நல்வாழ்வு வாழ்ந்திடவே இக்கணமே தோன்றி இன்னல்கள் யாவும் அகற்றி இகபர சுகமருள்வாய் மணிக்கூட்டுவீதி விநாயகனே.

சிவநெறிக் கலாநிதி கலாபூசணம்
இராசையா ஸ்ரீதரன்.



### தெய்வ தரிசனத்தில் கண் குளிர்க

புதிய சித்திரத் தேரினிலே பஞ்ச முகத்தோடு பவனி வரும் வண்ணை அரசடி விநாயகரின் தெய்வீக தரிசனத்தை கண்குளிரப் பெற்று அவன் அருளால் கல்வியும் அறிவும் செல்வமும் நீண்ட நல் வாழ் வையும் பெற்று எல்லோரும் வாழ்க என்று ஆசி கூறி அந்த விநாயகனின் மலர்ப் பாதங்களை வணங்குகின்றேன்.

ஆலயப் பிரதமகுருக்கள்
சந்திரா ஸ்ரீபதி குருக்கள்



### சித்திரத் தேரேறி சிந்தனைகள் சிறப்புற நல்லாசி நல்கிடுவாய்

யாழ்ப்பாணம் வண்ணை மணிக்கூட்டு வீதி அருள்மிகு அரசடி விநாயகர் இன்று புதிய தேரிலே வலம் வருகிறார். தன்னை மதிக்காமல் முப்புரங்களை அழிப்பதற்காகத் தேரேறிச் சென்ற தன்னுடைய தந்தையின் தேரின் அச்சினை முறித்த பெருமான் தனக்கான ஒரு தேரிலே வலம் வரவுள்ளார்.

கோயிலுக்குள்ளிருந்து அருள்பாலிக்கும் இறைவன் ஆண்டுக்கொரு முறை கோயிலுக்கு வெளியே வந்து, தேரேறி வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் வழங்கும் காட்சி அருமையானதொன்று. கோயிலுக்குட் செல்லாதவர்களும் செல்லமுடியாதவர்களும் கோயிலின் வெளி வீதியிலே நின்றும், தூரத்தில் நின்றும் இறைவனை வணங்கி மகிழ வாய்ப்பளிப்பதாகத் தேர்த்திருவிழா அமைகின்றது. எண்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆலயத்தினுள்ளிருதே அருள்பாலித்து வந்த விநாயகப் பெருமான் இன்று தேரிலே ஆரோகணித்து எழுந்து வீதி வலம் வந்து கோயிலுக்குள் வராதவர்களுக்கும் அருள்பாலிக்கவுள்ளார்.

அரசடி விநாயகப் பெருமான் தேரேறி வந்து நம்முடைய மக்களின் துன்பங்களள், துயரங்களை யாவற்றையும் நீக்கி நாமெல்லோரும் கவலையில்லா வாழ்வுபெற பேரருள் புரிய வேண்டுமென அப்பெருமானின் திருவடிகளை வேண்டுகிறேன்.

பேராசிரியர் கலாநிதி. அ. சண்முகதாஸ்

### ஸ்தபதியின் ஆசிச் செய்தி

சித்திரதேர் வடிவமைப்புக்காண பணிகளில் எம்மை இணைக்கும் வாய்ப்பை அளித்த எல்லாம் வல்ல யாழ் மணிக்கூட்டு வீதி அரசடி விநாயகரின் பாதாரகமலத்தினை இறைஞ்சுகிறோம். அவரின் கிருபாகடாட்சத்தின் பொருட்டு ஆலய அமைப்புக்கு தகுந்த வண்ணம் புதிதாக எம்மால் சித்திரத் தேர் அழகுற அமைத்தமையிட்டு பூரிப்படைகின்றேன். இப் பணி மேலும் சிறக்க விநாயகப் பெருமானை வேண்டுவதோடு இந்த வாய்ப்பை எமக்கு மனமுவந்துதளித்த கோயில் பரிபாலனசபைத் தலைவர் கணேசலிங்கம் ஐயா அவர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.

விஸ்வப்பிரமஸ்ரீ ஸ்தபதி
கனகரத்தினம் முரளிதரன்.

உலகின் புதிய ஒளி...
...ல் கல்லூரி
...நகர். கலை வர்த்தகப் பிரிவுகள்

சுத்தத்தின் செல்வன் என்று மக்களால்
மகுடம் சூடப்பெற்ற சைவ உணவகம்
மலாயன் கபே
36, 38 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222373.

PC PARADISE
IIS COMPUTERS
PC Paradise
61, Clock Tower Road, Jaffna.
Tel. 021 - 2229579
H.P.0777-271220

...யா
பயிற்சியகம்
...தி, யாழ்ப்பாணம்.

பிரபா பார்மசி
(ஆரிய குளம் அருகில்)
315, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ரூபா பன்முக வர்த்தகம்
104, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2228330.

KOVINTHAPILLAI VIJAYAKUMAR
Music Instrument Repairing & Sale's Centre.
192/1, Navalar Road, Perumal Kovilady, Jaffna, T.P:021 4922316, Mob:0777 111136.

பகவான் மருந்தகம்
BAGAVAAN MEDICAL
No: 221, Navalar Road, Jaffna.

Aravinth Digital
DIGITAL VIDEO & PHOTO ALBUM MAKING, DIGITAL PRINTING, DVD WRITING
# 309, Navalar Road, Anaipanthy, Jaffna. Tel: 021 222 2190

சானுகா ஜுவல்லர்ஸ்.
200 G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கற்சுமி வெளியீடு
166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2227442.

SHARU BORING WORKS
சாரு போறிங் வேக்ஸ்
றிபோறிங் & றொட்பிற்றிங், லையின் போறிங் ஆகிய வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
No.194, Navalar Road, Jaffna. 077 1692121.

ஆரணி மில்ஸ்
246, 248, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6830.

Mangalya Tex
மாங்கல்யா ரெக்ஸ்
47, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சேமிப்பை அதிகரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பீர்கள். அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். தம்பதியர் இடையே அன்யோன்யம் கூடும். சந்தோஷமான அனுபவம் உண்டு.

**இடபம்:** தேவையற்ற செலவுகளைச்செய்ய நேரிடலாம். ஆரம்பித்த பணி ஒன்றில் தடை, தாமதங்கள் ஏற்படலாம். உங்களின் யோசனைகளுக்கு, குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் ஆதரவு அதிகரிக்கும். மனக்குழப்பங்கள் உண்டாகலாம். சிலரைக் கேலி பேசி, அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். சிலருடன் வாக்குவாதங்களில் ஈடுபடலாம்.

**மிதுனம்:** குடும்ப உறுப்பினர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கணிசமான பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் உங்களை உதாசீனம் செய்தாலும், நீங்கள் அவர்களிடம் அன்போடு நடந்து கொள்வீர்கள். வீண் பிடிவாதங்களைத் தவிர்க்க வேண்டிய நாள். நாளைச் சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்க நேரிடலாம்.

**கடகம்:** மற்றவர்களுக்காக பிணை, உத்தரவாதம் கொடுக்க வேண்டாம். பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். மதிப்பு, கௌரவத்திற்கு பாதிப்பு வரும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். விவசாயிகள் கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள். முக்கிய செய்தி கேட்கலாம்.

**சிங்கம்:** தடைபட்ட காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும் நாள். வீட்டில் வசதி வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். பணவரவுகளை எதிர்பார்த்து சில செலவுகளை செய்வீர்கள். கைவிட்டுப்போனதாக நினைத்த ஒன்று மீண்டும் கிடைக்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். பிள்ளைகள் மீதான பாசம் அதிகரிக்கும்.

**கன்னி:** எதிர்ப்புகள், போட்டிகள் குறைந்து ஏற்றம் பெறும் நாள். வீண் பழிகள் அகன்று மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். தடைப்பட்ட காரியம் ஒன்று, விரைவில் நடைபெறும் வாய்ப்புகள் உருவாகும். தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வரலாம். உறவினர்கள் உதவிகரமாக இருப் பர். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம்.

**துலாம்:** உங்களின் பிரச்சினை ஒன்றை, நண்பர்களிடம் சொல்லி ஆலோசனை கேட்கலாம். உறவினர்கள் வழியில் சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம். ஒரு வேலையைச் செய்யத் திட்டமிட்டு, மற்றவர்களின் குறுக்கீட்டால், மற்றொரு வேலையைச் செய்யலாம். பயணங்களால் பலன் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பரிகாசப் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டிய நாள். மறதியால் தண்டச் செலவுகளை எதிர்கொள்ளலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களைச் சந்திக்கலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவர் மீதுள்ள கோபத்தை, சிலர் உங்களின் மீது காட்டலாம். சில பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கியும், அதில் திருப்தி இல்லாமல் போகலாம்.

**தனுசு:** குடும்பத்தேவைகள் பூர்த்தியாகும் . குழந்தைகள் தொடர்பான நல்ல செய்திகளைக் கேட்கலாம். பெண்கள் வழியில் கிடைக்கும் உதவியால் பெருமை அடைவீர்கள். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். பேராசைகளைத் தவிர்க்க வேண்டும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

**மகரம்:** அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். மற்றவர்கள் கடினமாக நினைக்கும் வேலைகளை நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். திட்டமிட்ட வேலை ஒன்று முடியாமல் போனாலும், திட்டமிடாத வேலை ஒன்று முடியலாம். உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டுக்கு வரலாம். உங்களின் கடந்த கால அனுபவம் பற்றி, மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள்.

**கும்பம்:** குடும்பத்தினருக்காக சில பொருள்கள் வாங்கலாம். திடீர் மாற்றங்களைச் சந்திக்கலாம். சிலர் உங்களின் தலையில் பொறுப்புகளைச் சுமத்தி விட்டு தப்பித்துக் கொள்ளலாம். மற்றவர்கள் புகழ்ந்து பேச வேண்டும் என்பதற்காகவே, சில வேலைகளைச் செய்வீர்கள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் பங்கேற்கலாம்.

**மீனம்:** உறவினர்கள் வழியில் சந்தோஷம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். இரண்டு நாள்களுக்கு முன் செய்ய மறந்த வேலை ஒன்றை, இன்று வெற்றிகரமாகச் செய்வீர்கள். பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவிகள் கிடைக்கலாம். மற்றவர்கள் மத்தியில் உங்களின் புத்திசாலித்தனத்தைக் காட்ட முற்படுவீர்கள்.

**நாளை**

தை 24 செவ்வாய்க்கிழமை 07.02.2012
திதி: பூரணை பி.இ. 04.17 வரை
நட்சத்திரம்: பூசம் பி.ப. 02.12 வரை
சுபநேரம்: 11.05 - 12.35 வரை,
ராகு காலம்: 03.35- 05.05 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 4 | | | 9 |
| | | 9 | | | 3 | | 7 | |
| | | 3 | 5 | | 1 | | 2 | 6 |
| | | | | 8 | 9 | | 1 | |
| | 3 | 8 | 4 | | 2 | 7 | 6 | |
| | 1 | | 6 | 5 | | | | |
| 1 | 4 | | 9 | | 5 | 3 | | |
| | 8 | | 1 | | | 9 | | |
| 5 | | | 7 | | | | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 7 | 9 | 3 | 4 | 1 | 6 | 8 |
| 9 | 3 | 4 | 1 | 6 | 8 | 7 | 5 | 2 |
| 8 | 1 | 6 | 2 | 5 | 7 | 9 | 3 | 4 |
| 5 | 4 | 3 | 8 | 2 | 9 | 6 | 7 | 1 |
| 6 | 7 | 8 | 4 | 1 | 3 | 5 | 2 | 9 |
| 1 | 2 | 9 | 5 | 7 | 6 | 4 | 8 | 3 |
| 7 | 8 | 1 | 3 | 4 | 5 | 2 | 9 | 6 |
| 3 | 6 | 2 | 7 | 9 | 1 | 8 | 4 | 5 |
| 4 | 9 | 5 | 6 | 8 | 2 | 3 | 1 | 7 |

## திருட முற்பட்டவர் மக்களிடம் பிடிபட்டார்

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ்.நகரின் புறநகர்ப் பகுதியில் பட்டப்பகலில் வீடு ஒன்றுக்குள் புகுந்து வீட்டுக்காரரை மிரட்டி பணம் கறக்க முயன்ற திருடன் ஒருவரை மக்கள் மடக்கிப் பிடித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகாமையில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த ஒருவர் வீட்டிலுள்ளோரைப் பயமுறுத்தி பணத்தை திருட முயற்சித்தார். அப்போது வீட்டிலுள்ளவர்கள் சத்தமிட்டதும் அந்தத் திருடன் சாதுரியமாக தப்பி ஓட முயற்சித்த சமயம் மக்களிடம் வசமாக மாட்டிக்கொண்டார்.

பின்னர் அந்தத் திருடனை மக்கள் நையப்புடைத்து அவரை புகைப்படம் எடுத்துவிட்டு விடுவித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ-17)

## காப்பெற் வீதிகள்

தென்மராட்சி.பெப்.6

ஜனாதிபதியின் வருகையையிட்டு சாவகச்சேரி நகர்ப் பகுதி வீதிகள் சில காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டு வருகிறன.

குன்றும் குழியுமாக காணப்பட்ட ஏ-9 வீதி நகர்ப் பகுதியில் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை காப்பெற் வீதியாக மாற்றப்பட்டு வருகிறது. (வ-9)

* * *

கொழும்புத்துறை. பெப்.6

சுண்டுக்குளி அச்சுக்கூட வீதியை காப்பெற் வீதியாக புனரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பெரிய மற்றும் நடுத்தர வீதிகளை காப்பெற் வீதிகளாக அமைக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த வகையில் பல நடுத்தர வீதிகள் யாழ்நகரப் பகுதியில் காப்பெற் வீதிகளாக மாற்றப்படவுள்ளதாக அதிகாரியொருவர் தெரிவித்தார். (வ-135)




தென்மராட்சி,பெப்.6

சாவகச்சேரி மண்டுவில் இலஞ்சாரணியம் கண்ணகை அம்மன் ஆலய சங்காபிஷேகம் இன்று நடைபெறும். சிவஸ்ரீ க. கிருபானந்தக் குருக்கள் தலைமையில் சங்காபிஷேகக் கிரியைகள் இடம்பெறும். (ம-9)

* * *

யாழ்ப்பாணம், பெப்.6

கீரிமலை ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் பாலஸ்தான கும்பாபிஷேகம் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

இதன் ஆரம்பக் கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை வருடாந்த பெருந்திருவிழா அபிஷேகம் ஆரம்பமாகும்.

ஆலயத்தின் வழிபாடுகளை பிரதமகுருக்கள் விஷ்வஸ்ரீ ந.உமாபதிஸ்வரக் குருக்கள் நிகழ்த்துவார். (ம--14)

* * *

யாழ்ப்பாணம், பெப்.6

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் இலட்சார்ச்சனை ஆரம்ப நிகழ்வுகள் கடந்த 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

நாளை செவ்வாய்க்கிழமை தைப்பூசத் திருநாள் இலட்சார்ச்சனை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. காலை நிகழ்வுகள் அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12.45 மணிவரை பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

இதில் திருப்பள்ளி எழுச்சி, சந்தி பூசை, ஸ்நானாபிஷேகம், காலைச் சந்திப் பூசை, இலட்சார்ச்சனை, மகேஸ்வர பூசை என்பன இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து மாலை நிகழ்வுகள் பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகி இரவு 9 மணிவரை பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இதில் ஸ்நபனாபிஷேகம், சாயரட்சைப்பூசை, இலட்சார்ச்சினை பூர்த்தி, சண்முகர் புறப்பாடு, திருமஞ்சத் தேர்ப்பவனி, திருவருட் பிரசாதம், 2 ஆம் காலப் பூசை, அர்த்த சாமப் பூசை என்பன இடம்பெறும்.

திருமஞ்சத் தேர்ப்பவனி மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14)

* * *

வடமராட்சி, பெப்.6

பருத்தித்துறை, தும்பளை லூர்து மாதா கோயில் வருடாந்த திருவிழா கடந்த 2 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தற்போது நவநாள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கருணை வழிபாடும் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை யாழ். மாவட்டக் குரு முதல்வர் அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுத்தலும் இடம்பெறும். தொடர்ந்து திருச் சொரூப பவனி இடம்பெறும் என பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு ஜோன் மவுலிஸ் அடிகளார் தெரிவித்தார்.

வெளியூர்களிலிருந்து வரும் பக்தர்களின் வசதி கருதி அவர்கள் [illegible] தங்கிச்செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம-8)



இலங்கைத் தேசிய பார்வையற்றோர் சம்மேளன வட மாகாணக் கிளை பார்வையற்றோரின் சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் நோக்குடன் தர்மலிங்கம் ஞாபகார்த்தமாக அவரது மனைவி திருமதி கமலாம்பிகை அங்கத்தவர் ஒருவருக்கு தையல் இயந்திரத்தை வழங்கினார்.

## பெரும்குடி மக்களின் வீதியாக மாறும் கந்தப்பசேகரம் வீதி

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி சத்திரச் சந்திக்கு அண்மையில் உள்ள கந்தப்பசேகரம் வீதி, பெரும் குடி மக்கள் வீதியாகி விட்டதாக அந்தப் பகுதியில் உள்ள உணவு நிலையங்களின் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் இரவு நேரங்களில் பெரும்பாலான குடிமக்கள் சினேக பூர்வ மது அருந்தல் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு போதையில் மிதக்கின்றனர் இதனால் இந்த வீதியால் போக்கு வரத்துச் செய்யும் சாதாரண மக்கள் மற்றும் சைக்கிளில் பயணிப்போர் பெரும் சிர மங்களை எதிர் கொள்கின் றனர்.

சில சமயங்களில் சினேக பூர்வம் குறித்து குதர்க்கபேச்சுக்களில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவங்களை பொலிஸார் கண்டும் காணாதது செல்வதாகவும் இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறாதவாறு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (வ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ஓரளவு மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# இலங்கையில் சுதந்திர தினம் ஜேர்மனியில் கண்டன ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப்.6

இலங்கை அரசின் சுதந்திர தினத்தைக் கண்டித்து அந்த அரசின் பொய்ப்பிரசாரத்தை முறியடித்து ஜேர்மனியில் இரு நகரங்களில் நேற்று முன்தினம் கவனயீர்ப்பு நிகழ்வுகள் இடம்பெற்றதாக ஊடகங்கள் தகவல் வெளியிட்டன.

இலங்கை சுதந்திரம் பெற்ற அன்றைய தினத்திலிருந்து தமிழினம் சுதந்திரத்தை இழந்து நிற்கின்றது. 64ஆவது சுதந்திர தினத்தை இலங்கை கொண்டாடுகின்ற போதும் ஈழத்தமிழர்கள் இன்றும் மரணப் போராட்டத்தில் நிற்கின்றனர் என்று ஜேர்மனியில் இலங்கைத் தூதரகம் மற்றும் துணைத் தூதரகம் அமைந்திருக்கும் நகரங்களில் அந்தநாட்டு தமிழர்கள் கவனயீர்ப்பு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இதே வேளை, பெர்லின் நகரத்தில் கவனயீர்ப்பு நிகழ்வை முறியடிக்க இலங்கைத் தூதரகம் தனது அரவணைப்பில் திட்டமிட்டு சில சிங்களவர்களை ஒழுங்கு செய்து எமக்கெதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர் என்றும் ஜேர்மன்வாழ் தமிழர்கள் தெரிவித்துள்ளனர்.

சிங்களவர்கள் தமது தூதரகத்தின் முன்னாலே தாமே நின்று 'நல்லிணக்கத்தை ஏற்படுத்து, பிரிவினையைத் தூண்டாதே' எனும் பதாகைகள் தாங்கியவாறு ஆர்ப்பாட்டம் செய்தது, தமக்குத் தாமே கண்டனம் செய்வதாக ஜேர்மன் மக்களால் கருதியதாக ஊடகங்கள் தகவல் வெளியிட்டன.

எனினும் ஜேர்மான் வாழ் தமிழர்கள் இரு நகரங்களிலும் குறைவான எண்ணிக்கையில் கூடியிருந்தாலும் உணர்வு ரீதியாக பல மணி நேரங்கள் பலத்த குளிரிலும் பனி மழையிலும் தமது கண்டனத்தை முன்னெடுத்தனர். இலங்கைத் தூதரகம் தமது கொண்டாட்டத்துக்கு பல ஜேர்மனிய அரச அதிகாரிகளுக்கு அழைப்புதல் அனுப்பியிருந்தாலும், அவர்கள் அங்கு சமுகம் அளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜேர்மன் ஈழத்தமிழர் மக்கள் அவையால் முற்கூட்டியே பல அரசியல் கட்சிகளுக்கும், வெளிவிவகார அமைச்சுக்கும் ஊடகங்களுக்கும் இது விடயமாக கடிதங்கள் அனுப்பப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் கவனயீர்ப்பு நிகழ்விலும் ஜேர்மனிய மக்களுக்கு துண்டுப் பிரசுரங்களும் இலங்கையில் கொலைக்களம் காணொளி ஜேர்மன் மொழியிலும் வழங்கப்பட்டன. (வ)

## லண்டனிலும் கவனயீர்ப்பு நிகழ்வு

இலங்கையில் தமிழர் உரிமை பறிக்கப்பட்ட நாளான நேற்று முன்தினம் லண்டனில் கடுமையான கால நிலைக்குள்ளும் தமிழர்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றையும் துண்டுப் பிரசுர விநியோகத்தையும் செய்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை லண்டனில் உள்ள சில பகுதிகளில் உள்ள நிலக்கீழ் ரயில் நிலையங்களுக்கு முன்பாகவும், வீதிகளிலும் நின்று இலங்கையில் நடைபெறும் தமிழின அழிப்பு மற்றும் மனித உரிமை மீறல்கள் போன்ற விடயங்களை எடுத்து விளக்கும் துண்டுப் பிரசுரங்களை வழங்கினர்.

## மைதானம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.6

ஜனாதிபதியின் வருகையை அடுத்து யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தையும் புனரமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

மைதானத்தின் சேதமடைந்த சுற்று மதில்களைப் புனரமைக்கும் பணிகள் துரித கதியில் இடம்பெறுகின்றன.

அதனை விட மைதானத்தின் உள்ளகப் பகுதியும் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது. (வ-17)

## ஒலிம்பியாட் தெரிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.6

தரம் -6 மாணவர்களுக்கான மாகாண மட்ட கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் பயிற்சி நெறிக்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு யாழ்ப்பாண வலய பாடசாலைகளில் 2011 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 179 புள்ளியையும் அதற்கு மேற்பட்ட புள்ளிகளையும் பெற்றுக்கொண்ட மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர். இவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் தரம் -5 இல் கல்வி கற்ற பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ-14)

## குத்தகை அடிப்படையில் காணி வழங்கும் தீர்மானம் நிராகரிப்பு

சண்டிலிப்பாய், பெப்.6

நவாலி அட்டகிரி கந்தசுவாமி கோயிலுக்குச் சொந்தமான காணியை காணியில்லாதவர்களுக்குக் குத்தகை அடிப்படையில் பகிர்ந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலி.தென் மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் கே.நடராஜாவால் முன்மொழியப்பட்ட தீர்மானம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

நவாலி வடக்கு ஜே-134 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள அட்டகிரி கந்தசுவாமி கோயிலுக்குச் சொந்தமான சுமார் 33 பரப்புக் காணியில் ஏற்கனவே 5 குடும்பங்கள் குத்தகை அடிப்படையில் வீடுகட்டி வாழ்ந்து வருகின்றனர். இந்தக் காணியை காணியில்லாமலிருக்கும் மேலும் 15 குடும்பங்களுக்குக் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினரான கே.நடராஜா சபைத் தலைவருக்கு அனுப்பி வைத்த தீர்மானத்தில் குறிப்பிட்டிருந்தார்.

தலைவர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நடராஜா வால் முன்மொழியப்பட்ட தீர்மானம் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது. இதுபற்றி சபையில் விரிவாக ஆராயப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி ஆலயம் தொடர்பாக நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனால் காணியைக் குத்தகைக்கு வழங்க முடியாது என்று சபை உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி தீர்மானம் நிராகரிக்கப்பட்டது. (வ)

# பாடசாலைகளில் உளவளசேவை விஸ்தரிக்க வேண்டியது அவசியம்

### சுகாதாரத் திணைக்களத்தினர் சுட்டிக் காட்டு

தென்மராட்சி,பெப்.6

பாடசாலைகளில் உளவள சேவையை விஸ்தரிக்க வேண்டிய அவசியதேவை அண்மைக் காலமாக எழுந்து வருகின்றது.

ஒவ்வொரு பாடசாலையிலும் உளநலப் பிரிவுகளை ஆரம்பித்து மாணவர்களுக்கு உரிய பயிற்சியையும் அறிவுரையையும் வழங்கி மாணவர்களின் எதிர்கால வாழ்வுக்கு வழிவகுக்க அதிபர்கள் முன்வரவேண்டும்.

இவ்வாறு கல்விச் சமுகத்தினருக்கு சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்தவாரம் ஒரு மாணவி தனக்கு ஏற்பட்ட பாதிப்பைத் தனது ஆசிரியை மூலம் வெளிக் கொணர்ந்ததை அடுத்து இவ்வாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாணவரும் பாதிப்புக்களைத் தவிர்க்க அவர்களுக்கு போதிக்கப்படும் உளநலம் தொடர்பான அறிவுரைகள் நிச்சயம் கைகொடுக்கும்.

இவ்வாறான பயிற்சிகளால் ஒவ்வொரு மாணவரும் தம்மைப் பாதுக்கும் முயற்சியில் ஈடுபடத் தூண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (ம-9)

## நகர சங்கீர்த்தனம்

யாழ். சத்திய சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் நகர சங்கீர்த்தனம் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்பாகவுள்ள நிலையத்தில் இருந்து ஆரம்பமாகும் இந்த நிகழ்வு இராமநாதன் வீதி, குமாரசாமி வீதி, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, ஆத்தி சூடி வீதி ஊடாக மீண்டும் காலை 6.30 மணியளவில் நிலையத்தை வந்தடையும்.

நிலையத்தில் காலை 8.45 மணிக்கு கொடியேற்றம் ஆரம்பமாகி ஓம்காரம், வேதபாராயணம், காயத்திரிமந்திரம், பஜனை போன்ற போஜா தின பகல் நிகழ்வுகளாக இடம்பெற்று பிற்பகல் 12.30 மணிக்கு நாராயண சேவையுடன் நிகழ்வுகள் நிறைவடையவுள்ளன. இதில் சிறப்பு நிகழ்வாக சிங்கப் பூரில் பெற்ற சாயி அனுபவங்கள் எனும் தலைப்பில் விசேட சொற் பொழிவு இடம்பெறவுள்ளது. (ம-14)

## கடந்த மாதம் மட்டும் குடாவில் 86 திருட்டுக்கள்

யாழ்ப்பாணம், பெப்.6

குடாநாட்டில் கடந்த மாதம் 86 திருட்டுச் சம்ப வங்கள் தொடர்பாக முறைப் பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்துள்ளார்.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பால் குடா நாட்டு மக்கள் அச்சத்தில் தமது நாள்களைக் கழிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த திருட்டுச் சம்ப வங்கள் அதிகமாக வீடுகளை உடைத்துதிருடப்பட்டதுடன், ஆயுத முனையில் அச்சுறுத்தித் திருடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பொது மக்களின் பெறுமதியான நகைகள், பணம் என்பன பறித் தெடுக்கப்பட்டுள் ளன.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதால் பொதுமக்களின் [illegible] பாதிப்படைந்துள்ளது [illegible] யாத நிலைமைக்கும் தள்ளப்பட்டுள்ளார்கள்.(ந - 14)

## பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், பெப்.6

சமுர்த்தி வாழ்வாதார உதவித்திட்டத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சமுர்த்தி உதவி பெறும் பயனாளிகள் 15 பேருக்கு விவசாய கடற்றொழில் உபகரணங்களும் திவிநெகும வேலைத் திட்டத்தில் வீட்டுத் தோட்டப் போட்டியில் வெற்றி பெற்ற பத்துப் பேருக்கு பரிசில்கள், சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன், விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், நெடுந்தீவு கடற்படை அதிகாரி ஹகேந்திர ஏக்கநாயக்க, பிரதேச சபைத் தலைவர் தானியஸ் நெக்சியன், ப.நோ.கூ.சங்கத் தலைவர் அ.செ.அரிய நாயகம் ஆகியோர் இவற்றை வழங்கினர். (ம - 7)

## இந்து ஆலயங்கள் அனைத்திலும் நிர்வாகம் தெரிய அறிவுறுத்து

தென்மராட்சி, பெப்.6

தென்மராட்சிப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து இந்து ஆலயங்களிலும் பொதுக்கூட்டம் மூலம் நிர்வாக சபையைத் தெரிவு செய்யுமாறு பிரதேச செயலக இந்து சமய கலாசார அலுவல்கள் பிரிவினர் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்படும் நிர்வாக சபையினரின் விவரங்களை எதிர்வரும் மார்ச் முதலாம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் கையளிக்குமாறும் அறிவித்துள்ளனர்.

ஆலய யாப்பு விதிகளுக்கு அமைய புனரமைப்புச் செய்யப்படாத ஆலயங்கள் பொதுக் கூட்டத்தைக் கூட்டி புதிய நிர்வாக சபையினரைத் தெரிவு செய்யுமாறும் கேட்டுள்ளனர்.

குறித்த காலப்பகுதிக்குள் உரிய விவரங்கள் சமர்ப்பிக்காத ஆலயங்களுக்கு எதிர்காலத்தில் நிதி உதவிகள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் அவை இயங்காமல் உள்ளதாகக் கருதி ஏற்கனவே வழங்கப்பட்ட பதிவு இயக்கமும் இரத்துச் செய்யப்படுமெனவும் கூறப்பட்டுள்ளது. (ம-9)

## உடுவில் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு தீவிரம்

யாழ்ப்பாணம், பெப்.6

ஏழாலைப் பிரதேசத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதால் உடுவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பொது சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோர் இணைந்து வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த மாதம் தீவிரப் படுத்தப்பட்ட விழிப்புணர்வுச் செயற்பாடுகளின் போது இனங்காணப்பட்ட டெங்கு நோய்த் தாக்கத்தை உண்டுபண்ணக் கூடிய சூழலை வைத்திருந்த வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சுகாதாரப் பிரிவினரின் இந்த தீவிர நடவடிக்கைகளால் வெற்றுக் காணிகள் மற்றும் பொது இடங்கள் என்பன துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. (ந-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயன்பு




இடுப்பு நோகுதம்மா என்று
இயல்பாய்ச்
சொன்னபோதும்,
துடித்துப் பதறித்
தொடுக்கிறாள்,
தொடர் கேள்விக்
கணைகளை!

வலிகளைத் தரம்பிரித்துச்
சொல்லி,
வந்த வலி எந்த வலி
என்கிறாள்;
பொய்யோ
மெய்யோவென்று அறிய
பெருஞ்சீரகக் கஷாயம்
தந்து,
பெரிதொரு ஆராய்ச்சி
செய்கிறாள்!
மெய்யென்றறிந்த
பின்னோ....
செய்வதறியாது
கைபிசைந்து நிற்கிறாள்!

விண்ணென்று தெறிக்கும்
வேதனையை,
விளக்கிச் சொல்ல இயலாது,
அம்மா, அம்மாவென
அரற்றும் என்னை,
ஆதரவாய்த் தழுவிக்
கொள்கிறாள்!

கூந்தல் அலசவும்
அதுநாள்வரை
குளியலறைக்குள்
அனுமதித்திராத அவளை,
கூடவே இருக்கச் சொல்லி,
கரம் பற்றிக் கொண்டபோது,
காணச் சகியாமல்
கண்ணீரை உகுக்கிறாள்!

அன்றொருநாள்
அவளுற்றதும்
இதே துயரம்
என்றறிந்தபோதும்,
இன்றெனக்குற்ற வலி
பொறுக்காது,
முந்தானையால்
முகம்பொத்திக்
குலுங்குகிறாள்!
சுகமாய்ப் பிரசவிக்க
வேண்டுமென்று,
குலதெய்வத்தை
வேண்டுகிறாள்;
போதாதென்று கூடவே
அழைக்கிறாள், அவள்
பார்த்தேயிராத பல
தெய்வங்களை!

அப்பாவின் செல்லமென்று
இருந்தவள்,
அம்மாவின்
பெண்ணானேன்,
அழகிய என் தேவதை
அவதரித்தக் கணம்
முதலாய்!

என்னிலும் பன்மடங்கு
தவித்து,
வேதனையில் வியர்த்து
நின்ற
என் அம்மாவின்
ஆர்ப்பாட்டம் கண்டு
பரிகசிப்பது போல்
சின்ன இதழ் கோணி,
கன்னத்தில் குழி விழ,
புன்னகைக்கும்
மென்பூவைக்
கையிலேந்தி,
என்ன பாடு
படுத்திவிட்டாயடி,
என் பெண்ணை? என்று
செல்லமாய்க் கடிகிறாள்!

என்னவோ புரிந்ததுபோல்
அழுகைக்கு ஆயத்தமாய்
உதடு பிதுக்கும் மகளின்
துன்பம்
காணப் பொறுக்காமல்
முகம் திருப்பிக்
கொள்கிறேன், நான்!

**திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்**
**"திலகம்",**
**உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .**

# தோற்கும் ஆண்களைப் பெண்கள் வெறுக்கின்றனர்

இன்று படித்த, வேலைக்குப் போகிற, உலகம் தெரிந்த பெண்கள் தங்கள் கணவரை A - Z தன் கைக்குள்ளாகவே வைத்திருக்க நினைப்பதும், அவர்களது லேசான கனவுகளைக்கூட கையகப்படுத்தும். அவனது ஒவ்வொரு அசைவையும் தாங்கள் அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் முயற்சி எடுப்பதும் அவர்கள் வாழ்வின் அமைதியை அடியோடு குலைத்து விடும்.



இதைவிட இன்னொரு சிக்கல். இன்றைய கல்வியறிவு மிக்க பெண்கள் தங்கள் கணவனை விடவும் தாங்கள் அறிவிலும் திறனிலும் மேம்பட்டவர்கள் என்பதை நிரூபிக்க ஒவ்வொரு கணமும் போராடுகிறார்கள். இந்தப் போராட்டத்தில் தனக்குத் தோல்வி ஏற்பட்டுவிட்டால் தன்னைப் பிடிக்காமல் போய்விடுகிறது. ஜெயித்துவிட்டால் கொண்டாட்டமா என்றால் அதுவும் இல்லை. காரணம் தோற்றுப் போன ஆண்மகனை அவர்களுக்கு பிடிக்காமல் போய்விடுகிறது.

தோல்வியடைந்துவிட்ட ஆண்மகனை அவர்கள் வெறுக்கத் தொடங்குவதால் வாழ்வு மேலும் மேலும் நரகமாகிறது. கணவனைப் போட்டியாளனாகக் கருதும் மனோபாவம் நமது பழைய தலைமுறைப் பெண்களுக்கு ஒரு போதும் ஏற்பட்டதே இல்லை. இதைவிட ஆச்சரியம் அவர்கள் தங்கள் கணவனிடம் தோற்றுப் போவதற்கு எப்போதுமே தயாராக இருந்தார்கள்.

ஆனால் ஓர் ஆச்சரியம். சீனப் பேரறிஞர் லாவோட்ஸ் சொன்னதுபோல் தோற்பதற்குத் தயாராக இருப்பவர்களை யாராலும் வெல்லவே முடியாது என்ற பொன்மொழிக்கேற்ப பெண்கள் கணவன்மார்களால் வெல்லப்பட முடியாதவர்களாகவும் இருந்தார்கள்.

நித்தியா

# ஆண்களைப் புரிந்து கொள்ளும் முயற்சி வாழ்வின் அமைதியைக் குலைத்துவிடும்

கி.மு 246 முதல் 210 வரை ஆட்சியில் இருந்த முதல் சீனப் பேரரசர் - ஹி-ஹுவாங்-லீ என்பவருடைய மனைவியரின் எண்ணிக்கை பதின் மூன்றாயிரத்து நூற்று நாற்பது. நம்ப முடிகின்றதா? அவர்களில் சிலர் மூலம் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை இரண்டாயிரத்து எண்ணூறு. அவரது அரண்மனையில் ஏறத்தாழ பத்தாயிரம் அறைகள் இருந்தன. இருபத்து ஏழு ஆண்டுகளில் அவர் எந்தப் படுக்கை அறையிலும் இரண்டாவது முறை படுத்ததே இல்லை.



கி.பி 1605 முதல் 1627வரை ஆட்சி புரிந்த 4 ஆவது மொகலாயப் பேரரசர் ஜஹாங்கீர் மணம் புரிந்து கொண்ட அரச குலப் பெண்களின் எண்ணிக்கை ஐயாயிரம். மற்ற இனப் பெண்கள் 1000.

கி.பி 1592 முதல் 1614 வரை ஜெய்ப்பூரை ஆண்ட அரசர் மான்சிங்கின் மனைவியர் எண்ணிக்கை 1500. அவருக்கு 4000 குழந்தைகள். அரண்மனை அரண்மனை மாதிரியா இருந்திருக்கும். ஏதோ மாட்டுக் கொட்டில் போல, பசுக்களின் பண்ணை போல, பெண்களின் பண்ணையல்லவா அது. இப்படிப் பெண்களைப் பயன்படுத்திக் கொள்ள இந்த ஆண்களுக்கு மனம் எப்படி வந்தது? தங்கள் மனைவியரை வெறும் தற்காலிகத் துணையாக நினைத்தார்களே ஒழிய நிரந்தர இணையாகவே நினைக்கவில்லை. ஒரு மாடப்புறாவுக்கு இருக்கும் பண்பாடு கூட மாடமாளிகையின் மாமன்னர்களுக்கு இல்லாமல் போய்விட்டதே!

எண்ணிக்கையில் இவர்களைவிடக் குறைவான மனைவியரைப் பெற்றாலும் எண்ணத்தில் இவர்களைப் போலவே வாழ்ந்து மடிந்த ஆண்கள் எத்தனை பேர் தெரியுமா? ஏகப் பட்டபேர்... இவர்கள் மனைவியரின் மனம் என்ன பாடுபட்டிருக்கும். எவ்வளவு துடிதுடித்து போயிருக்கும். யோசித்துப் பாருங்கள். இவர்கள் மனைவிமார்களுக்கு நிம்மதி இருக்க முடியாது.

இந்தக் கொடுமையால்தான் இந்தியப் பெண்கள் பலர் தங்கள் நிம்மதி கருதி ஆணைப் புரிந்து கொள்ளும் எந்த முயற்சியிலும் இறங்கியதே இல்லை.

அதாவது கணவனைப் புரிந்து கொள்ளும் தீவிரம்... எங்கு கொண்டு போய்விடும் தெரியுமா? அளவுக்கு மீறி கணவனது சுதந்திரத்தில் தலை நுழைக்கும் பெண்கள் கண்டிப்பாக ஓர் ஆபத்தைச் சந்திக்க வேண்டும். என்ன தெரியுமா அது?

நீங்கள் கணவனை விரட்ட, விரட்ட ஓயாது நச்சரிக்க நச்சரிக்க ஆறுதல் தேடி அவன் வேறிடத்தில் சரணடையும் விபரீதம் ஏற்பட்டுவிடும்.

எங்கே அன்பும் அரவணைப்பும் கிடைக்கிறதோ, நிம்மதியும் சுதந்திரமும் கிடைக்கிறதோ அங்கு அடைக்கலமாகும் விபரீதம் ஆணிடம் உண்டு. அதன் பிறகு கணவனை நச்சரிக்கும் பெண்கள் மொத்தமாகவே தங்கள் கணவனை இழக்க வேண்டிவரும்.

■ நித்தியா

# பலதரப்பட்ட பணிகளிலும் கைதேர்ந்தவர்கள் பெண்கள்

இயற்கையின் உடலாகவே தாம் மாறி இயற்கையின் அடிப் படைக் கூறுகளான நீர் நிலைகள் வானம் மேகம் சூரியன் நிலம் மரங்கள் ஒன்றுக்கொன்று பரிமாறிக்கொள்ளும் உரையாடல்களைத் துல்லியமாகக் கவனித்து அவற்றிற்கேற்ப நிலத்தில் விதைத்து உணவு உற்பத்தி செய்து வந்தனர். அது மட்டுமன்றி இயற்கையின் நிலையில்லாத தன்மையைநசுர்ந்துணர்ந்து எதிர்காலத்திற்குத் தேவைப்படும் உணவைச் சேகரித்து வைப்பதிலும் அவற்றைப் பக்குவப் படுத்தி வைப்பதிலும் உணவைப் பேணுவதிலும் என ஒரு மரம் எப்படி ஒரு சூரியன் உதயமானதுமே பச்சையம் தயாரிக்க இயங்குகிறதோ அதே போல பெண்களும் சூரியன் சென்ற பின்னும் உணவு தயாரிப்பதில் முழுமூச்சாய் ஈடுபட்டனர்.



இன்றும் வேளாண்மை என்னும் உணவுப் பயிர் வளர்க்கும் அறிவில் பெண்களுக்கு நிகரானவர்கள் இல்லை. மண் பார்த்து அதன் தன்மை சொல்லும் திறனிலிருந்து என்ன மாதிரியான விதையை எந்த மண்ணில் பயிர் செய்யலாம், என்ன வகையான பருவம் தேவைப்படும், எப்படிக் கண்ணும் கருத்துமாகப் பராமரிக்க வேண்டும் என்று தொடர்ந்து கவனமுன்றி விதை பயிராகவோ செடியாகவோ மரமாகவோ மாறி மனிதனின் வயிற்றுக்குத் தேவையான உணவாக மாறும்வரை அயராது உழைக்கும் பெண்களிடம் மானுடத்தின் உடலைப் பேணும் உணவு குறித்த கடமை இருக்கிறது.

மண் - விதை - கால்நடைகள் - பருவம் - சுற்றுச் சூழல் - மனிதன் என்று இருந்த சுழற்சியின் கண்ணிகளை அறுத்துத் துண்டித்ததில் ஆணாதிக்கக் கோட்பாடுகள் கடந்த நூற்றாண்டில் தீவிரமாக செயல்பட்டிருக்கின்றன.

இதன் ஒவ்வொரு கண்ணியையும் தனித்தனியாகப் பெண்கள் தம் ஊக்கத்தையும் உணர்வையும் அளித்து உருவாக்கிய உணவு உற்பத்தி முறைகளையெல்லாம் இயந்திரங்களும் இரசாயன உரங்களும் களம் இறக்கப்பட்டன.

பெண்கள் வீட்டிற்குஅனுப்பப்பட்டனர். இயற்கையுடன் ஆடியும் பாடியும் பேசியும் பயிர் வளர்த்து உணவு தயாரித்த பெண்கள் வீட்டோடு முடக்கப்பட்ட நிலையில், வீட்டில் உணவு சமைத்து வழங்கும் இயந்திரங்களாக மாற்றப் பட்டனர்.

■ குட்டிரேவதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியரசு கைது



விடுதலைப் புலிகளுக்கு பொருள்கள் கடத்திய வழக்கில், விசாரணைக்கு முன்னிலை அளிக்கவில்லை.

விடுதலைப்புலிகளுக்கு பொருள்கள் கடத்திய வழக்கில், விசாரணைக்கு முன்னிலையாகததால், விடுதலை சிறுத்தைகள் கட்சி செய்தித் தொடர்பாளர் வன்னியரசு சென்னையில் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார்.

கடந்த 2007 ஆம் ஆண்டு சென்னை விமான நிலையம் அருகே, விடுதலைப் புலிகளுக்கு படகு உள்ளிட்ட தளபாடப் பொருள்கள் கடத்தியதாக 2 பேரை கியூ பிரிவு பொலிஸார் மடக்கிப் பிடித்து கைது செய்தனர். பொலிஸார் அவர்களிடம் நடத்திய விசாரணையில், தங்களுக்கு வன்னியரசு என்பவர் தளபாடப்பொருள்கள் அளித்ததாகத் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து, வன்னியரசைப் பொலிஸார் கைது செய்தனர். பின்னர், பிணையில் அவர் வெளியே வந்தார். 2009 ஆம் ஆண்டு இந்த வழக்குத் தொடர்பாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, வன்னியரசு விசாரணைக்கு அழைக்கப்பட்டார். ஆனால், விசாரணைக்கு அவர் ஒத்துழைக்கவில்லை என்று தெரிவிக்கப்படு கின்றது.

அதன் பின்னர், 2010 ஆம் ஆண்டு பிணையில் வெளிவர முடியாதபடி பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

ஆனால், அந்த நேரத்தில் வன்னியரசு, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செய் தித் தொடர்பாளராக இருந்து வந்தார். பொலிஸார் அவரைக் கைது செய்யவில்லை.

இந்த நிலையில், கடந்த மாதம் வன்னியரசு மீது புதிதாக பிடியாணை ஒன்று பிறப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் அமைந்த கரையில் வைத்து, கியூ பிரிவுப் பொலிஸார் வன்னியரசைக் கைது செய்தனர்.

அதன்பின்னர், சைதாப்பேட்டை 23 ஆவது மஜிஸ்திரேட்டு நீதிமன்றத்தல் வன்னியரசு முன்னிலைப் படுத்தப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டார். (வ)

## இந்தியா எல்லையில் ரூ.115 கோடி ஹெரோயின் பறிமுதல்

அமிர்தசரஸ், பெப்.6

இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் 23கிலோ ஹெரோயின் பறிமுதல் செய்யப் பட்டது. இதன் மதிப்பு ரூ.115 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இந்தியா-பாகிஸ்தாக் எல்லையான பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் பகுதியில் எல்லைப் பாதுகாப்புப்படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தனர். நேற்று அதிகாலை கோஹா எல்லைப் பகுதியில் 10 கிலோ ஹெரோயினும், பெர்ரோஸ்பூர் எல்லைப்பகுதியில் 13 கிலோ ஹெரோயினும் பறிமுதல் செய்யப்பட்டது. இவற்றின் மதிப்பு சர்வதேச சந்தையில் ரூ. 115 கோடி என்று தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து எல்லைப் பாதுகாப்புப் படை பொலிஸ் அதிகாரி ஜெனரல் சஞ்சீவ்பனோட் தெரிவித்ததாவது:

அமிர்தசரஸ் எல்லையில், சந்தேகப்ப டும்படியான செயல்கள் நடப்பதாக ரகசியத் தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்துதான் கோஹா எல்லையில், சுமார் 12 அடி நீளமும், 5 இன்ஞ் விட்டமும் கொண்ட பைப் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. - என்றார். (வ)

# ஆபத்திலிருந்து தப்பினார் மத்திய அமைச்சர் சிதம்பரம்



2ஜி அலைக்கற்றை ஊழல் வழக்கில் மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தைச் சேர்க்கக் கோரி சுப்ரமணிய சுவாமி தாக்கல் செய்த மனுவை பாட்டியாலா நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

2ஜி அலைக்கற்றை ஊழல் வழக்கில் மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தைச் சேர்க்கக் கோரி சுப்ரமணிய சுவாமி தாக்கல் செய்த மனுவை பாட்டியாலா நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் நிதி அமைச்சராக இருந்தபோது 2ஜி ஸ்பெக்ட்ரத்துக்கான அலைக்கற்றைகளை ஒதுக்கீடு செய்ததில் நாட்டுக்கு மிகப் பெரிய நட்டம் ஏற்பட்டது.

இந்த விவகாரத்தில் அப்போதைய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசா கைது செய்யப்பட்டு திகார் சிறையில் தண்டனை அனுபவித்து வருகிறார்.

ஆனால் நிதி அமைச்சகத்துக்குத் தெரியாமல் முறைகேடு நடந்திருக்காது என்று எதிர்க்கட்சிகள் பா.சிதம்பரத்தின் மீது குற்றம் சாட்டி, அவரை பதவி விலக வற்புறுத்தி வந்தன. மேலும் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி ப.சிதம்பரத்துக்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்தநிலையில் இந்த வழக்கு மீதான விசாரணை நீதிபதி ஓ.பி.சைனி முன்னிலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அப்போது 2ஜி ஊழல் வழக்கில் ப.சிதம்பரத்தைச் சேர்ப்பதற்கு எந்த வித முகாந்திரமும் இல்லை என்று கூறி தீர்ப்பு வழங்கினார்.

எனவே சுப்பிரமணியன் சுவாமியின் மனுவை நிராகரிப்புச் செய்வதாக நீதிபதி ஓ.பி.சைனி தெரிவித்தார்.

இதையடுத்து ப.சிதம்பரத்துக்கு ஏற்பட்டிருந்த ஆபத்து தற்காலிகமாக விலகியுள்ளதாக மத்திய வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (வ)

## அண்ட்ரிக்ஸ் – தேவாஸ் ஒப்பந்தம் இஸ்ரோ குழுவும் முறைப்பாடு

சென்னை, பெப்.6

இஸ்ரோவின் வர்த்தக நிறுவ னமான அண்ட்ரிக்ஸ் மற்றும் தேவாஸ் இடையேயான எஸ் பேண்ட் ஒதுக்கீடு ஒப்பந்தம் முறைகேடானது என்று பி.கே. சதுர்வேதி தலைமையிலான இஸ்ரோ குழுவின் அறிக்கையிலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவின் ஆண்ட் ரிக்ஸ் நிறுவனம் தமக்கு உரிய எஸ் பாண்ட் அலைக்கற்றையை மிகக் குறைந்த விலைக்கு தேவாஸ் நிறுவனத் துக்கு விற்பனை செய்தது. இதன் மூலம் மத்திய அரசுக்கு ரூ 2 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டது என்பது மத்திய தணிக்கைக் குழுவின் முறைப்பாடு.

இதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு ஊழல் கண்காணிப்பு முன்னாள் ஆணையர் சின்ஹா தலைமையில் ஒரு குழுவை பிரதமர் அமைத்திருந்தார். ஆண்ட்ரிக்ஸ்- தேவாஸ் ஒப்பந்தம் முறைகேடானது என்று சின்ஹா குழு தெரிவித்திருந்தது.

இதனால் இஸ்ரோவின் முன்னாள் தலைவரான மாதவன் நாயர் உட்பட 4 விஞ்ஞானிகள் அரசுப் பதவி வகிக்கத் தடை விதித்து மத்திய அரசு உத்தரவிட்டிருந்தது. மாதவன் நாயரும் பாட்னா ஐ.ஐ.டி. தலைவர் பொறுப்பிலிருந்து ராஜினாமா செய்தார். இந்தநிலையில் இஸ்ரோ அமைப்பும் பி.கே. சதுர்வேதி தலைமையில் விசாரணைக் குழுவை அமைத்திருந்தது. (வ)




புதுடில்லியில், தொழில் நிறுவனங்களின் அதிகாரிகளை சந்தித்து மத்திய நிதிய மைச்சர் பிரணாப் முகர்ஜி, பட்ஜெட் குறித்து கலந்து ஆலோசனை செய்தார்.

## மேன்முறையீட்டுக்கு தயாராகும் சுவாமி

2ஜி வழக்கில் மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தையும் சேர்க்கக் கோரி சுப்ரமணிய சுவாமி தாக்கல் செய்த மனுவை சி.பி.ஐ. நீதிமன்றம் நிராகரித் துள்ள நிலையில், இந்தத்தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கருத்து தெரிவிக்கையில்:

சி.பி.ஐ. நீதிமன்ற தீர்ப்பு எனக்கு ஆச்சரியம் அளிக்கிறது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து டில்லி உயர்நீதிமன்றத்தில் நான் மேன் முறையீடு செய்வேன். சி.பி.ஐ. நீதிமன்ற தீர்ப்பால் நான் ஏமாற்றம் அடையவில்லை. மேன்முறையீட்டில் தீர்ப்பு மாறும் என்று உறுதியாக நம்புகிறேன்' - என்றார். (வ)

# புற்றுநோயால் பாதிக்கப்படும் இந்தியப் பெண்கள்

கருக்குழாயைத் தாக்கும் புற்றுநோய் பாதிப்பால் இந்திய நாட்டில் 7 நிமிடங்களுக்கு ஒரு பெண் உயிரிழப்பதாகப் புள்ளிவிவரம் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி மையம் சார்பில் குளோபோகேன் 2008 என்ற புள்ளிவிவர அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புற்றுநோய் பாதிக்கும் இந்திய பெண்கள் பற்றிய விவரங்கள் அதிர்ச்சியை தந்துள்ளன. கடந்த 2008 ஆம் ஆண்டில் 72 ஆயிரத்து 825 பெண்கள் கருக்குழாய் புற்றுநோய்க்குள்ளாகி உயிரிழந்தனர். மார்பகப் புற்றுநோயால் இறந்த பெண்கள் எண்ணிக்கை 53 ஆயிரத்து 592 ஆகும்.

நாடு முழுவதும் பரவலாக இது நடந்தாலும் மெட்ரோ நகரங்களில் வசிக்கும் பெண்கள்தான் அதிகமாக புற்றுநோயால் உயிரிழந்தமை கூடுதல் தகவலாகும்.

கிராமங்களில் வசிக்கும் பெண்களின் சுகாதார அக்கறையின்மை குறிப்பாக கருக்குழாய் புற்றுநோய்த் தாக்கத்துக்கு காரணமாகிறது.

மாநகரப் பெண்களிடையே தாமதிக் கப்படும் குழந்தைப்பேறு, குறைந்த கால தாய்ப்பால் ஊட்டுதல், உடல் பருமன் ஆகிய காரணங்களால் மார்பக புற்றுநோய் ஆபத்து அதிகம் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# கூடங்குளத்துக்கு தமிழக அரசால் புதிய நிபுணர் குழு

மக்களது அச்சங்கள் தீர்க்கப்படும் வரை கூடங்குளம் அணுமின் நிலைய கட்டுமானப் பணிகள் நடைபெற அனுமதிக் கப்படக்கூடாது என்றார் 'ஜெ'



கூடங்குளம் அணு மின் நிலையம் குறித்த மக்களின் அச்சங்களை தீர ஆராய்வதற்கு நிபுணர் குழுவொன்று அமைக்கப்படும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா சட்டமன்றத்தில் அறிவித்துள்ளார்.

மேலும் அந்தக் குழுவின் அறிக்கையை ஒட்டியே அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரி விக்கும் தீர்மானத்தின் மீதான விவாத்துக்குப் பதிலளிக்கும் போதே ஜெயலலிதா இந்தப் புதிய குழு பற்றி அறிவித்திருக்கிறார்.

முதலில் அணுமின் நிலையம் அவசியம் என்று கூறிய அவர், பின்னர் மக்கள் கடுமையாக எதிர்க்கும் சூழலில் மக்களது அச்சங்கள் தீர்க்கப் படும் வரை கூடங்குளம் அணுமின் நிலைய கட்டுமானப் பணிகள் நடைபெற அனுமதிக் கப்படக்கூடாது என்று குறிப்பிட்டார்.

கூடங்குளம் அணுமின் நிலையத்தை எதிர்க்கும் மக்களுக்காக மத்திய அரசு நிபுணர் குழுவொன்றை நியமித்தது. அதனைத் தொடர்ந்து ஜெயலலிதாவும் குழு ஒன்றை அமைத்தார். அந்தக் குழுவில் அணுமின் நிலையத்தைக் கடுமையாக எதிர்ப்பவர்களும் இடம்பெற்றிருக்கின்றனர். இரு குழுக்களுக்கு மிடையே நடந்த பேச்சுகளில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

அணுமின் நிலையத்தால் ஆபத்து எதுவுமே இல்லை என்று மத்திய அரசுக்குழு வலியுறுத்தியது. ஆனால் அதன் தகவல்கள் நம்பகத்தன்மை அற்றவை என்று எதிர்ப்பாளர்கள் வாதிட்டனர். இனி இந்த இரு குழுக்களும் கூடி விவாதிக்கப் போவ தில்லை என்ற சூழல் உருவாயிருக்கும் நிலையில் முதல்வரின் அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.(வ)

## வெளிநாட்டு நாணயங்கள் வைத்திருந்தவர் கைது

சென்னை, பெப்.6

சென்னை விமான நிலையத்தில் வெளிநாட்டு நாணயங்களை வைத்திருந் ததாக ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சென்னை விமான நிலையத்தில் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் நடத்திய சோதனையில் பயணி ஒருவர் அமெரிக்க டொலர்கள், யூரோ டொலர்கள் வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அதனை பறிமுதல் ஆய்வு செய்தபோது ரூ.6.5 லட்சம் மதிப்பிலான வெளிநாட்டு நாணயங்கள் இருந்துள் ளமை தெரியவந்தது.

இது தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் பெங்களூரைச் சேர்ந்த அயூப் என்பதும் ஹாங்காங் செல்வதற்காக வந்தவர் என்றும், விசாரணையில் தெரியவந்தது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகத்தூய்மை

" எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும். அதுதான் சிறந்தது என்றார் ஒருத்தர். " நான் அப்படித்தான் இருக்கிறேன், தினமும் இரண்டு வேளை சவர்க்காரம் இட்டுக் குளிக்கிறேன்" என்றார் இன்னொருத்தர். "உடம்பு மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது; மனமும் சுத்தமாக இருக்க வேண்டும்" என்றார் மற்றவர்.

"மனதைச் சுத்தப்படுத்துவதற்கு என்ன சவர்க்காரம் போடலாம்?" என்று கேட்டார் இவர். "ஆன்மிகம் என்ற சவர்க்காரம்தான் அதற்குப் பொருத்தம்" என்றார் அவர். ஆன்மாவை மேம்படுத்துகின்ற முயற்சிதான் ஆன்மிகம் அந்த முயற்சியை எப்படிச் செய்வது?

மனதுக்குள்ளே குந்தியிருக்கின்ற வேண்டத்தகாத விருந்தாளிகளையெல்லாம் வெளியேற்ற வேண்டும். அப்படிப்பட்ட வேண்டத்தகாத விருந்தாளிகளில் முக்கியமான ஒருத்தர் பொறாமை இவர் எமது மனதுக்குள் இருக்கின்ற வரைக்கும் நாம் நிம்மதியாக இருக்க முடியாது.

ஒரு குருநாதர் இருந்தார். அவரிடம் இரண்டு சீடர்கள் இருந்தார்கள். இரண்டுபேரும் ஆரம்பத்தில் நன்றாகத்தான் பழகிக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் என்னவோ தெரியவில்லை கொஞ்ச நாளில் இரண்டு பேரில் ஒருத்தனின் மனதுக்குள் பொறாமை என்கின்ற விருந்தாளி வந்து உட்கார்ந்து விட்டான்.

அந்தச் சீடனும் அவனுக்கு இடம் கொடுத்துவிட்டான். குருவிடம் வந்து தான் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்று அவனுக்கு ஓர் ஆசை எற்பட்டுவிட்டது. என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

ஒருநாள் விடியற்பொழுதில் எழுந்து நேராகக் குருவின் இருப்பிடத்துக்குப் போனான். அங்கு குருவிடம் என்னைப் பாருங்கள். நான் சீக்கிரமாக எழுந்து குளித்து முடித்துவிட்டு உங்களை வணங்குவதற்காக வந்து நிற்கிறேன். ஆனால் அவன் இன்னும் கண் முழிக்கவில்லை. இன்னமும் தூங்கிக்கொண்டே இருக்கிறான்" என்றான்.

குருநாதர் நிமிர்ந்து பார்த்தார் " அப்படியா? அப்படியென்றால் நீயும் நன்றாகத் தூங்கு என்றார் மிகுந்த பொறுமையுடன். என்ன இது? நான் எவ்வளவு தீவிரமாக ஒரு விடயத்தைக் கூறுகிறேன். அதற்கு எனது குருநாதர் மிகவும் பொறுமையாக இப்படிக் கூறுகிறாரே என்று நினைத்தான். ஆச்சரியமாகக் குருநாதரைப் பார்த்தான். குருநாதர், ஆமாம்; நீயும் தூங்கிக் கொண்டு இருந்தால் அடுத்தவனைப் பற்றிக் குறை சொல்வதற்கு இங்கே வந்திருக்க மாட்டாய். அதனால்தான் அப்படிச் சொன்னேன் என்றார்.

சீடன் யோசிக்க ஆரம்பித்தான். அர்த்தம் புரிந்துவிட்டது. உடனே பொறாமையை மனதிலிருந்து தூங்கியெறிந்து விட்டான். மனமும் சுத்தமாகிவிட்டது.

மனதுக்குள்ளே விரட்ட வேண்டிய இன்னொரு விருந்தாளி கோபம். சினம் தன்னையே கொன்றுவிடும் என்கிறார் வள்ளுவர். கோபத்துக்கு மனதில் இடம் கொடுக்கக் கூடாது. அவ்வாறு இடம் கொடுக்காத பெரியவர்களும் உள்ளனர்.

குருநானக் என்று ஒருத்தர் இருந்தார். அவர் ஒரு சமயம் கோதாவரி நதியில் போய்க் குளித்துவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்தார். வரும் வழியில் ஒரு மரத்துக்கு மேல் இருந்த ஒருத்தன் அவர் மேல் துப்பி விட்டான். உடனே அவர் திரும்பிப் போய் மறுபடியும் குளித்துவிட்டு வந்தார். அவனும் மறுபடியும் துப்பி விடுகிறான். அவர் கோபமே அடையவில்லை. ஒன்றும் பேசாது மறுபடியும் போய்க் குளித்துவிட்டு வருகிறார்.

இப்படிப் பல தடவைகள் நடந்து கொண்டே இருந்தன. ஒரு கட்டத்தில் மரத்தின் மேல் இருந்த ஆள் தோற்றுப் போய் அவர் காலில் வந்து வீழ்ந்து " அது எப்படி? நீங்கள் கோபப்படாமல் இருந்தீர்கள் ? என்று கேட்டான். அதற்கு அந்தப் பெரியவர் கூறுகிறார்.

" நான் கோபப்பட்டிருந்தால் என் மனம் அசுத்தமாகியிருக்கும். உடம்பு அசுத்தமானால் குளித்து சுத்தப்படுத்திக் கொள்ளலாம். மனதை அப்படி சுத்தப்படுத்த முடியாது? என்றார். கூடிய அளவுக்கு மனம் அசுத்தமாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது தமது கடமை என்றார்.

மனதை அசுத்தப்படுத்தும் இன்னொரு விடயம் சுயநலம்.


ஒரு சுயநலவாதி ஆற்றில் வீழ்ந்து சுழியில் மாட்டிவிட்டார். இன்னொரு சுயநலவாதி கரையில் இருந்து இதைப் பார்த்து விட்டான். ஒரு கயிற்றைத் தூக்கிப் போட்டு அதைப் பிடித்துக் கரையில் இருந்து இழுத்து அவரைக் காப்பாற்றினார். அவர் கரையில் ஏறியவுடனே இவரைப் பார்த்து, " என்னைக் காப்பாற்றியதற்கு உங்களுக்கு 50 சதம் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.



ஆனால் என்னிடம் ஒரு ரூபாயாக இருக்கிறது" என்றார். உடனே காப்பாற்றியவர் இவரைப் பார்த்து அப்படியென்றால் நீங்கள் இன்னொரு தடவை தண்ணீரில் வீழ்ந்து விடுங்கள். நான் காப்பாற்றி விடுகிறேன். ஒரு ரூபாவாகக் கொடுக்கலாம் என்றார். இப்படிப் பட்டவர்கள் எத்தனை தடவை தண்ணீரில் வீழ்ந்தாலும் மனது சுத்தமாகப் போவதில்லை.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# அண்டி வந்தோரை ஆதரிக்கும் யாழ். அடைக்கல அன்னை



யேசுதாஸ்

இறை நம்பிக்கையையும் மனித விழுமியக் கோட்பாடுகளையும் மக்களுக்குள் விதைத்து அன்புமிக்க சமுதாயத்தை உருவாக்கும் விளை நிலங்களாக ஆலயங்கள் திகழ்கின்றன. மனம் போன போக்கில் எப்படியும் வாழலாம் என்றில்லாது இப்படித்தான் வாழ வேண்டும் என்ற சீரிய போதனைகளால் நற்பாதைக்கு இட்டுச் செல்லும் கடிவாளங்களாக ஆன்மிகத்தை வளர்க்கும் புனித இடங்களாக ஆலயங்கள் விளங்குகின்றன.

யாழ்ப்பாணத்தில் பல கத்தோலிக்க ஆலயங்கள் இருந்தாலும் யாழ்.நகரப் பகுதியில் உள்ள பழம்பெரும் ஆலயமாக யாழ். அடைக்கல அன்னை ஆலயம் (O.L.R.) பல நூற்றாண்டுகளாக மக்களின் இறை விசுவாசத்தை உறுதியுடன் வளர்த்து வருகின்றது. யாழ். நகருக்கு அண்மையில் ஆஸ்பத்திரி வீதிக்கும், 3 ஆம் குறுக்குத் தெருவுக்கும், வேம்படி வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் கத்தோலிக்க மரபுச் சின்னங்களின் ஓர் அடையாளமாக சிறந்த கட்டடக்கலை அம்சங்களுடன் அழகுற கம்பீரமுடன் காட்சி தருகிறது இந்த ஆலயம்.

போர்த்துக்கீசர் காலத்துடன் தொடர்புடைய வரலாற்றைக் கொண்ட அடைக்கல அன்னை ஆலயம் மண் கோயிலாக உருவாகி பின் ஒல்லாந்தரின் மத ஒடுக்கு முறையின்போது மறைந்திருந்து பின் கற்கோயிலாக அமைந்து தற்போது பெரும் விசாலம் கொண்ட ஆலயமாக மிளிர்கிறது.

போர்த்துக்கீசர் காலத்துடன் தொடர்புடைய வரலாற்றைக் கொண்ட அடைக்கல அன்னை ஆலயம் மண் கோயிலாக உருவாகி பின் ஒல்லாந்தரின் மத ஒடுக்கு முறையின்போது மறைந்திருந்து பின் கற்கோயிலாக அமைந்து தற்போது பெரும் விசாலம் கொண்ட ஆலயமாக மிளிர்கிறது.

இறைமகன் இயேசுவின் அன்னையான தூய மரியாளுக்கு பல்வேறு நாமங்களிலும், அன்னை மரியாள் காட்சிகள் கொடுத்த இடங்களைக் குறித்தும், பல கருத்து விளக்கங்களுடன் கூடிய பெயர்களிலும் ஆலயங்கள் பரவலாக எழுப்பப்பட்டுள்ளன. லூர்து மாதா, வேளாங்கண்ணி மாதா, கார்மேல்மாதா, மருதமடு மாதா, பரலோக மாதா, காணிக்கை மாதா, சதா சகாய மாதா, சென்மஇராய்க்கினி மாதா, லங்கா மாதா, செபமாலை மாதா, கதிரை மாதா, பற்றிமா மாதா, கப்பலேந்தி மாதா எனப் பல பெயர்களில் போற்றிப்புகழ்ந்து வணங்கப்பட்டாலும் அனைத்து நாமங்களும் புனித மரியாளையே குறித்து நிற்கின்றன.

இவ்வாறாக துன்ப துயரங்களால் பீடிக்கப்பட்டோர், கைவிடப்பட்டோர் போன்ற நம்பி வழிபடும் அனைத்து அடியவர்களுக்கும் அடைக்கலமும் பாதுகாப்பும் கொடுத்து அரைவணைக்கும் தாயாக விளங்குவதைக் குறிக்கும் வகையில் அடைக்கல அன்னை என்னும் பெயருடன் இப்பதியிலே அன்னை மரியாள் வீற்றிருந்து அருள் பொழிந்து வருகிறாள்.

இற்றைக்கு 400 ஆண்டுகளுக்கு முன் இயேசு கிறிஸ்துவின் திருமறையை அறிந்து விசுவாசத்துடன் ஏற்றுக்கொண்ட கத்தோலிக்கர் அவரது திருத்தாயாரைப் போற்றி வணங்கத் தவறவில்லை. தமது விசுவாசத்தின் காப்பரணான புனித மரியாளுக்கு தத்தமது கிராமங்களில் சிறு ஓலைக் குடில் ஆலயங்கள் அமைத்து வழிபட்டு வந்தனர். இவ்விதமாக ஆரம்பிக்கப்பட்ட கோயில்களை அண்டியே போர்த்துக்கீசரின் கோட்டைச் சுவர்களும் நிர்வாக மையங்களும் நிறுவப்பட்டன.

வளர்ந்து வந்த திருமறைக்கு அடுத்து ஆட்சியைக் கைப்பற்றிய ஒல்லாந்தரின் செயற்பாடு எதிரானதாக அமைந்தது. தமது மதமான 'கல்வின்' மதத்தைப் பரப்புவதிலும் கத்தோலிக்[illegible] இருந்தனர். தமது [illegible] மறுத்தோரை சிறையிட்டு சித்திரவதை புரிந்து அடக்கி ஒடுக்குவதிலும் கத்தோலிக்க ஆலயங்களை இல்லாதொழிப்பதிலும் ஈடுபட்டனர். அச்சமடைந்த மக்கள் மறைவாக தமது மறை அனுட்டானங்களை நடத்தி வந்தனர். முத்திப் பேறுபெற்ற யோசப்வாஸ் அடிகளாரதும் அவரது ஒரட்டோரியன் (தியான சம்பிரதாய) சபைக் குருக்களதும் அரும்பணியால் கத்தோலிக்க சமயம் அழிவிலிருந்து காப்பாற்றப் பட்டதோடு உயிர்த்துடிப்புடன் பரவவும் தொடங்கியது.

ஒல்லாந்தர் கடைப்பிடித்த மதத் தடைச் சட்டங்கள் கடுமையானதாக இருந்த போதும் அவர்களது ஒன்றரை நூற்றாண்டு கால ஆட்சியில் (1658-1796) கடைசி ஐம்பது வருட ஆட்சியின் போது யாழ்ப்பாணம் உட்பட அவர்களது ஆட்சி பிரதேசங்களில் கத்தோலிக்க சமயம் உறுதியுடன் பகிரங்கமாகக் கடைப்பிடிக்கப் பட்டு வழிபாடுகளும் நிறைவேற்றப்பட்டு வந்தன. ஆயுதம் தரித்த ஒல்லாந்தரால் கத்தோலிக்கர் தேவதாயார் மீது கொண்டிருந்த அசையாத பக்தியை அழிக்க முடியவில்லை. நகரின் சுற்றுப் புறங்களில் மண்சுவர்களும், ஓலைகளால் வேய்ந்த கூரையும் கொண்ட ஆலயங்கள் அமைக்கப்பட்டன.

இக்காலத்தில் அரைமைல் சுற்றளவைக் கொண்டிருந்த யாழ்.நகரில் எழுப்பப்பட்ட முதல் மூன்று சிறு ஆலயங்களும் தேவதாயாரின் பெயரைக் கொண்டிருந்தன. இவை கொஞ்சேஞ்சி மாதா, புதுமை மாதா, அடைக்கல மாதா என்பனவாகும். ஒல்லாந்தரின் வேதகலாபனையை அடுத்து உருவான ஆலயங்களில் இதுவுமொன்றாகும்.

யாழ்ப்பாண வரலாற்றுடன் தொடர்புடைய ஆரம்பகால ஆலயம் தற்போதைய ஆலயத்தின் தெற்குப்பக்கமாக அமைந்துள்ள கல்வாரிக் கெபி இருக்கும் பகுதியில் இருந்ததாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

ஓலையால் அமைக்கப்பட்டிருந்த சிற்றாலயத்தை கற்கோயிலாக அமைக்கும் பணி இப்பகுதியில் மறைப்பணி புரிந்த அருட்திரு லொபோ அடிகளாரினால் 1783 - 1802 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதாக பாரம்பரியம் கூறுகிறது. இந்தப் பணி 1828 இல் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டுமென எண்ணப்படுகிறது. ஏனெனில் 1923 இல் இவ் ஆலயத்திலிருந்து அகற்றப்பட்ட பீடப் பின்திரையில் 1828 ஆம் ஆண்டு காணப்பட்டதாக கூறப்படுகிறது.

இப்பழைய கற்கோயிலின் பீடப்பகுதியில் பிதாலொபோவின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. இவரது வாழ்வும், பணியும் முன்னுதாரணமாக காணப்பட்டமையால் மக்கள் இவரைப் புனிதராகக் கருதி மடுமாதாவின் மண்ணைப் போல் இவரது கல்லறையிலிருந்தும் எடுத்துச் செல்லும் மண்ணை தீராத நோய்களுக்குப் பரிகாரமாக பயன்படுத்தி வந்துள்ளனர்.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆம் திருத்தச் சட்டம் பிரச்சினைக்குத் தீர்வாகாது

## ‘திவயின’ தகவல்

அனைவரும் ஒன்றிணைந்து வாழக் கூடிய நல்லாட்சியை ஏற்படுத்துவதே முக்கியமானது. நாட்டை பிளவுபடுத்தி தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது.

கொழும்பு,பெப்.6

13 ஆம் திருத்தச் சட்டமோ அல்லது அதனைக் கடந்த சட்டமோ வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக அமையாது என்று புத்திஜீவிகளும், மதத் தலைவர்களும் தெரிவித்துள்ளதாக சிங்கள நாளிதழான திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் சம உரிமைகளுடன் வாழக் கூடிய நல்லாட்சியை நிறுவுவதன் மூலம் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

13 ஆம் திருத்தச் சட்டமோ அல்லது அதனைக் கடந்த தீர்வுத் திட்டமோ வடக்கு, கிழக்கு வாழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது என்று ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பெல்லன்வில விமலரதனதேரர் தெரிவித்தார்.

வெளிநாட்டு சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து இவ்வாறான தீர்மானங்களை எடுக்க வேண்டிய அவசியமில்லை என்று அவர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றல், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார். பல வந்தமாகத் திணிக்கப்படும் தீர்வுத் திட்டங்களில் எந் தத் தரப்பினரும் நன்மை அடையப் போவதில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ், முஸ்லிம் மக்கள் இரண்டாம் நிலை நபர்களாகவே கருதப்படக் கூடாது எனவும், அவர்களும் சிங்களவர்களைப் போன்று நடத்தப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, புதிதாக சட்டங்களை உருவாக்கியோ அல்லது இருக்கும் சட்டங்களை நடைமுறைப்படுத்தியோ வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியாது என்று சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். எல். குணசேகர தெரிவித்தார்.

அனைவரும் ஒன்றிணைந்து வாழக் கூடிய நல்லாட்சியை ஏற்படுத் துவதே முக்கியமானது. நாட்டை பிளவுபடுத்தி தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

# நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும்



காலணித்துவ ஆட்சிக் காலத்தில் நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலை நாட்டப்பட்டன. தற்போது நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளன என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு,பெப்.6

13 ஆம் திருத்தச் சட்ட மூலத்துக்கு முன்னதாக நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டிருந்தால் 13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை நடைமுறைப் படுத்துவது சிரமமாகாது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசு ஜனநாயகத்தை நிலைநாட்டத் தவறினால், மக்கள் போராட்டத்தின் மூலம் நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலணித்துவ ஆட்சிக் காலத்தில் நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலை நாட்டப் பட்டன.

தற்போது நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளன என்று அவர் தெரிவித்தார்.

ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்கு நாட்டின் அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## துப்பாக்கிச் சூட்டில் மூவர் படுகாயம்

கொழும்பு,பெப்.5

மாவத்தகம - மயிலகஸ் வெவ பிரதேசத்தில் நபரொருவர், மூவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த மூவர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை அடுத்து பிரதேச மக்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவரின் வானை தீமிட்டு எரித்ததுடன் அவருடைய வீட்டை தீமிட்டு எரிக்க எடுத்த முயற்சி பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. (ச)



கொழும்பு சுதந்திர சதுக்கத்திலுள்ள இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் உருவச்சிலைக்கு கொழும்பு நகர முதல்வர் ஏ.ஜே.எம். முஸம்மில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

# கட்சிக் கூட்டம் அவசியமற்றது

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

கொழும்பு,பெப்.6

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை அரசு அழைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை தீர்வு விடயம் தொடர்பில் ஆராய அனைத்துக்கட்சி கூட்டம் ஒன்றை அழைக்கப் போவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஏற்கனவே அமைச்சர் திஸ்ஸ விதாரணவின் தலைமையிலான அனைத்துக்கட்சிக் குழு இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் தீர்வு ஒன்றை முன்வைத்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

எனவே இனப்பிரச்சினைத் தீர்வில் ஜனாதிபதிக்கு அக்கறையிருந்தால், அவர் அமைச்சர் திஸ்ஸ விதாரணவின் இறுதியறிக்கையை மையமாகக் கொண்டு தீர்வு ஒன்றைக் காணமுடியும் என்று அவர் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு பங்கேற்க விருப்பமில்லையென்றால், அதனைவிட்டு குழுவின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# சிகிச்சைக்கு மஹிந்த சிங்கப்பூர் பயணம்

கொழும்பு,பெப்.6

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிகிச்சைக்காக சிங்கப்பூர் செல்லவுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சிங்கப்பூரில் உள்ள, மவுண்ட் எலிசபெத்’ மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பு ஜனாதிபதி ஆலோசகர் சஜின் வாஸ் குணவர்தனவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியுடன் செல்லும் குழுவினருக்கு தங்குமிட வசதிகளை செய்யும் பொறுப்பை இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸுக்கு நெருக்கமான கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி சிகிச்சைக்காக அமெரிக்கா செல்லவே திட்டமிட்டிருந்த போதிலும் அங்குள்ள சிக்கல்களைக் கருத்தில் கொண்டே சிங்கப்பூர் செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ச)

## கஞ்சா விற்ற இருவர் கைது

கொழும்பு,பெப்.6

தெஹிவளை - பெல்லந்தர பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த இரண்டு சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை தெஹிவளை பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 4 கிலோ கிராம் கஞ்சாவும் அதனை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட வாகனம் ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஓப்பநாயக்க மற்றும் அவிசாவளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த நபர்கள் கல்கிஸை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## விபத்தில் இருவர் சாவு

கெக்கிராவ - மரதன்கடவல, ஹபரண வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியின் மீது முச்சக்கரவண்டி மோதி ஏற்பட்ட விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்தில் காயமடைந்த மேலும் இருவர் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணிக்கு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் ஓட்டோ சாரதி [illegible] நபர் ஆகியோர் உயிரிழந்துள்ளனர். (ச)

# பிரிட்டன் செல்லவிருந்த விமானசேவை இரத்து

கொழும்பு,பெப்.6

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நேற்று ஞாயிற்றுக் கிழமை பிரிட்டன் நோக்கி பயணிக்கவிருந்த விமானம் தனது பயணத்தை இரத்து செய்துள்ளது.

பிரிட்டன், ஹீத்ரோ விமான நிலையத்தில் நிலவும் அதிக பனிமூட்டம் காரணமாகவே விமானப் பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விமான சேவை இன்று திங்கட்கிழமை இடம் பெறும் என்று தெரிவிக்கப் படுகின்றது.

இந்த விமானத்தில் பயணிக்கவிருக்கும் பயணிகள் 1979 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி மேலதிக தகவல்களை அறிந்துகொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கண்காட்சியை பார்க்க திரண்டனர் மக்கள்

கொழும்பு,பெப்.6

அநுராதபுரம் மாவட்டத்தின் தந்திரிமலையிலுள்ள ஓயமடுவ கிராமத்தில் நடைபெற்றுவரும் ‘தேசத்திற்கு மகுடம்’ கண்காட்சியை அதிக மக்கள் பார்வையிட்டு [illegible] தேசியக் கண்காட்சி ஓயமடுவ கிராமத்திலுள்ள 600 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தக் கண்காட்சி எதிர் வரும் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. ‘தேசத்திற்கு மகுடம்’ கண்காட்சியில் அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (ச)

## இதயமற்றவர்களே சுதந்திரத்தை அனுபவிப்பு

கொழும்பு,பெப்.6

இதயமற்றவர்கள் சுதந்திரத்தை அனுபவித்து வருவதாக முன்னாள் இராணுவத் தளபதியின் மனைவி அனோமா பொன்சேகா தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்து நாட்டுக்கு இரண்டாவது தடவையாக சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையில் சரத் பொன்சேகா முன்னணி வகித்தார். பயங்கரவாதத்தை இல்லாதொழித்த சரத் பொன்சேகா இன்று சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று அவர் தெரிவித்தார்.

இதயம் இருக்கின்ற அனைவருக்கும் இந்த வேதனை புரியும். இதயமற்றவர்கள் சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மப்பும் மழையும் வந்தும் இந்தியா தப்பவில்லை



ஐயோ எப்பிடி போட்டாலும் அடிக்கிறாங்களே, கடவுளே என்னைக் காப்பாத்து
பிரவீண் குமார்

கொமென்வெல்த் ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் புதுமுக வீரர்களுடன் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணியிடம், நடப்புச் சம்பியனான இந்திய அணி மரண அடி வாங்கியது. அறிமுக ஆட்டத்திலேயே ஆஸ்திரேலிய வீரர் மத்தியூ வேட் இந்தியாவுக்கு வேட்டு வைத்தார். கடந்த 'ரி-20' ஆட்டத்தில் அசத்தலான களத்தடுப்பால்தான் வென்றதாக இந்திய அணித்தலைவர் டோனி தெரிவித்த மறுகணமே இந்திய அணி தனது வழமையான களத்தடுப்பை நேற்றுக் காட்டியது. பல சந்தர்பங்களை கோட்டை விட்டு இந்திய அணி இறுதியில் 65 ஓட்டங்களால் ஆஸ்திரேலிய அணியின் தோல்வியடைந்தது.

கொமென்வெல்த் தொடரின் முதலாவது ஆட்டம் இந்திய, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையே மெல்போர்னில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. ஆஸ்திரேலிய அணியில் டானியல் கிறிஸ்ரெய்ன், மத்தியூ வேட் அறிமுக வீரர்களாக களமிறங்கினர். லீ காயம் காரணமாக இணைத்துக் கொள்ளப்படவில்லை. இந்திய அணியில் சேவாக், சகீர்கான் இணைக்கப்படவில்லை.

ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக மத்தியூ வேட், டேவிட் வோர்னர் களமிறங்கினர். இந்திய அணியின் பந்து வீச்சை சமாளித்து ஓட்டங்கள் குவிப்பதற்கு இந்த ஜோடி தடுமாறியது. மிகமெதுவாக ஓட்டங்கள் பெறப்பட்டது. 5 பந்து பரிமாற்றங்களில் 15 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வோர்னர் 6 ஓட்டங்களுடன் வினய்குமாரின் பந்து வீச்சில் 'போல்டானார்''. தொடர்ந்து நுழைந்த பொன்டிங் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து அணித்தலைவர் கிளார்க் களமிறங்கினார்.

முதலாவது 'பவர்பிளே' முடிந்ததும் வேட் தனது அதிரடியைத் தொடக்கினார். இருப்பினும் 11 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் ஆஸ்திரேலிய அணி 2 இலக்குகளை இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் தடைப்பட்டது. மீண்டும் ஆரம்பிக்கப்படும் போது தலா 32 பந்து பரிமாற்றங்களாக ஆட்டம் மாற்றப்பட்டது.

மழையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்தில் கிளார்க் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் வேட் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்க அவருடன் இணைந்தார் மைக் ஹஸி. 90 பந்துகளில் ஆஸி. முதலாவது 50 ஓட்டங்களை எட்டியது.



டோனி நீ பின்னாடி நிக்கத் தேவையில்லை. ஒரு பந்தும் உன் கைக்கு வராம அடிச்சு அனுப்பிடுவேன்
இந்தியாவுக்கு வேட்டு வைத்த மத்தியூ வேட்

வேட், மைக் ஹஸி இணைந்து ஓட்ட வேட்டையைத் தொடங்கினர். இந்தியாவின் சுழற்பந்து வீச்சுக்களை லாவகமாக தட்டிவிட்டு இரண்டு, மூன்று ஓட்டங்கள் என்று ஓடிக் குவித்தனர். சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய வேட் 55 பந்துகளில் தனது முதலாவது அரைச்சதத்தை அடித்தார்.

இவர்களது சிறப்பான இணைப்பாட்டத்தினால் ஆஸ்திரேலியாவின் ஓட்டவேகம் எகிறியது. இந்தியாவின் களத்தடுப்பு பலவீனமாக இருந்ததால் இந்த ஜோடி 32 பந்துகளில் 50 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தது. 50 பந்துகளில் 73 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிர்ந்த நிலையில் வேட் 69 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 67 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து டேவிட் ஹஸி களமிறங்கினார்.

ஹஸி சகோதரர்களும் வேகமாகவே ஓட்டங்களைச் சேர்த்தனர். அணி 26.1 பந்து பரிமாற்றங்களில் 154 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 5 ஆவது இலக்காக மைக் ஹஸியை இழந்தது. மைக் ஹஸி 32 பந்துகளில் 45 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து அறிமுக வீரர் டானியல் கிறிஸ்ரெய்ன் களமிறங்கினார். இவர் நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் டேவிட் ஹஸி இந்தியாவுக்கு எமனாகி போட்டுத் தாக்கினார். ஹஸியின் தாக்குதலில் இந்திய அணி மிகவும் நொந்து போனது. 28 பந்துகளில் தனது 7 ஆவது அரைச் சதத்தை டேவிட் ஹஸி விளாசினார்.


ஆட்டத்தின் இறுதிப் பந்து பரிமாற்றத்தை வீச ராகுல் சர்மா அழைக்கப்பட்டார். முதலிரண்டு பந்துகளில் இரு ஓட்டங்களை மாத்திரமே வழங்கினார். மழை காரணமாக ஆட்டம் 32 பந்து பரிமாற்றங்களாக குறைக்கப்பட்டதால் இரண்டு பந்து வீச்சாளர்கள் 7, மூன்று பந்து வீச்சாளர்கள் 6 பந்து பரிமாற்றம் மட்டுமே வீச முடியும். இருப்பினும் வினய் குமார்', பிரவீண் குமார் தலா 7 பந்து பரிமாற்றங்கள் வீசிய பின்பும் ராகுல் சர்மா 7 ஆவது பந்து பரிமாற்றத்தை வீச அழைக்கப்பட்டதால் இரண்டு பந்துகளுடன் நிறுத்தப்பட்டார். அதன் பின்பு எஞ்சிய 4 பந்துகளையும் ரவீந்திர ஜடேஜா வீச டேவிட் ஹஸி இரண்டு ஆறு ஓட்டங்கள் விளாச இறுதிப் பத்து பரிமாற்றங்களும் இந்திய அணி 94 ஓட்டங்களை ஆஸிக்கு தாரை வார்த்தது.

டேவிட் ஹஸி 30 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள், 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 61 ஓட்டங்களையும், கிறிஸ்ரெய்ன் 17 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர். பந்து வீச்சில் வினய்க் குமார் 21 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்கு எட்டமுடியாத இலக்கை விரட் கம்பீர், சச்சின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். சச்சின் 2, கம்பீர் 5 ஓட்டங்களுடன் ஸ்ரக் பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர். அதன் பின்பு இணைந்த ஹோக்லி, ரோகித் சர்மா ஜோடி வேகமாக ஓட்டங்களைச் சேர்த்தது. ஆஸ்திரேலிய அணிக்கு சிறிது நேரம் நெருக்கடி கொடுத்து 47 பந்துகளில் 51 ஓட்டங்களை மூன்றாவது இலக்குக்காக இந்த ஜோடி பகிர்ந்த நிலையில், ஆஸியின் பந்து வீச்சு மாற்றத்தில் ஹோக்லி வீழ்ந்தார். ஹோக்லி 31 ஓட்டங்களுடன் மக்கே பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அதே பந்து பரிமாற்றத்தில் ரோகித் சர்மாவும் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து [illegible] 4 ஓட்டங்களுடன் வெளியேற இந்திய அணி 14.2 பந்து பரிமாற்றங்களில் 77 ஓட்டங்களுக்கு 5 ஆவது இலக்கை இழந்தது. அதன் பின்னர் டோனி, ஜடேஜா இணைந்து சிறிது நேரம் இந்தியாவை தூக்கி நிறுத்த முயற்சித்தது. 37 ஓட்டங்கள் மட்டும் இணைப்பாட்டமாகப் பகிர்ந்த நிலையில் ஜடேஜா 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அஸ்வின் 5, ராகுல் சர்மா 1, டோனி 29, பிரவீண் குமார் 15 ஓட்டங்களையும் வினய்க் குமார் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இறுதியில் இந்திய அணி 29.4 பந்து பரிமாற்றங்களில் 151 ஓட்டங்களுடன் சுருண்டது. பந்து வீச்சில் மக்கே 20 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை கைப்பற்றினார். ஆட்டநாயகனாக இந்தியாவுக்கு வேட்டு வைத்த வேட் தெரிவானார். (5)



'அண்ணன் என்னடா? தம்பி என்னடா? அவசரமாக ஓடுடா?
ஹஸி சகோதரர்கள் வேகமாக ஓட்டங்கள் சேர்க்கையில்

## யுவராஜுக்கு புற்று நோய்

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங்கிற்கு புற்றுநோய் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஒக்டோபர் மாதத்தில் யுவராஜ் சிங்கின் நுரையீரலில் கட்டி இருப்பதாக கண்டறியப்பட்டது. இந்த நிலையில் அண்மையில் அமெரிக்கா சென்று இந்தக் கட்டியை அகற்றுவது தொடர்பில் சிகிச்சை பெற்றார் யுவராஜ். அங்கு பெறப்பட்ட அறிக்கைகளின் படியே யுவராஜுக்கு புற்றுநோய் இருப்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

யுவராஜ் சிங்கிற்கு சிகிச்சையளித்து வரும் வைத்தியர் ஜதின் சௌத்தரி இது தொடர்பில் குறிப்பிடுகையில்:

யுவராஜிற்கு புற்றுநோய் இருப்பது உண்மைதான். ஆனால் இது 100 வீதம் குணப்படுத்தக்கூடிய புற்றுநோய் என்பது ஆறுதலான விடயம். ஆகையினால் இந்த விடயம் தொடர்பில் பயப்படத் தேவையில்லை. முறைப்படி சிகிச்சை பெற்றால் மே மாதத்திலிருந்து மீண்டும் புத்துணர்வுடன் யுவராஜினால் இந்திய கிரிக்கெட் அணியில் விளையாட முடியும். இது ஓர் அபுர்வமான புற்றுநோய் கட்டி. இதனை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்துவிட்டதால் இலகுவில் குணப்படுத்திவிடலாம்.

நுரையீரலின் மேற் பகுதியில் - இதயத்திற்கு கீழாக இந்த புற்று நோய் கட்டி காணப்படுகிறது. இதனால் அறுவைச் சிகிச்சை செய்வது ஆபத்தை ஏற்படுத்தலாம். ஆகையினால் 'கீமோ தெரபி' எனப்படும் மருத்துவ சிகிச்சை மூலம் இந்தக் கட்டியை கரைக்க முடியும். இந்தப் புற்று நோய் கட்டியினை 100 சதவீதம்' அகற்றிவிட முடியும். அந்த சிகிச்சையினை யுவராஜ் சிங் - மார்ச் மாதத்தில் மேற்கொள்வது தொடர்பில் ஆராயப்படுகிறது. அப்படி அது சாத்தியப்படுமானால் ஏப்ரல் இறுதியில் யுவராஜ் குணமடைந்துவிடுவார். மே மாதத்திலிருந்து பழைய பலத்துடன் யுவராஜினால் விளையாட முடியும் - என்று தெரிவித்தார். (5)

## உடைந்தது 11 வருட அனுசரணை

இந்திய அணியின் 11 ஆண்டு கால அனுசரணையாளராக இருந்த சகாரா நிறுவனம், ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளது. இது இந்திய கிரிக்கெட் சபைக்கு (பி.சி.சி.ஐ.,) அடியாக விழுந்துள்ளது. இந்திய கிரிக்கெட் அணியின் நீண்ட நாள் அனுசரணையாளராக சகாரா இருந்தது. அண்மையில்தான் இதன் ஒப்பந்தம் 2013, டிசம்பர் வரை புதுப்பிக்கப்பட்டது. இதன்படி இந்திய அணி பங்கேற்கும் டெஸ்ட் ஆட்டம் ஒன்றுக்கு, ரூ.3.34 கோடி வரை பி.சி.சி.ஐ.,க்கு சகாரா வழங்கியது. நான்காவது ஐ.பி.எல். தொடரில் புனே வாரியர்ஸ் அணியை ரூ. 1702 கோடிக்கு சகாரா வாங்கி இருந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் ஐந்தாவது தொடருக்கான ஏலம் நடக்க இருந்த சில மணி நேரத்துக்கும் முன்னர், இந்திய கிரிக்கெட் அணியின் அனுசரணை மற்றும் ஐ.பி.எல்., ஏலத்தில் இருந்து விலகுவதாக சகாரா அறிவித்தது.

இந்த நிறுவனம் வெளியிட்ட அறிக்கை:

2008 இல் தொடங்கிய முதல் தொடரிலேயே நாங்கள் வெளியேற முயன்றோம். அவர்கள் மறுத்தனர். கடந்த ஐ.பி.எல் தொடரில் 94 ஆட்டங்கள் என்றனர். 74 ஆட்டங்கள் தான் நடத்தினர். வெளிநாட்டு வீரர்கள் சேர்ப்பது, வீரர்களை தக்கவைப்பது என்று , புதிய விதிகளை சேர்த்து எங்களிடம் ஒரு தலைப்பட்சமாக நடந்தனர்.

யுவராஜ் பிரச்னை:

புனே அணியின் தலைவர் யுவராஜ் சிங். இவர் சிகிச்சைக்காக வெளிநாடு செல்வதால், இவருக்குப் பதில் வேறு வீரரை மாற்றிக்கொள்ள பி.சி.சி.ஐ.,யிடம் அனுமதி கேட்டோம். அவர்கள் ஏற்கவில்லை. இந்த அடிப்படையில் தான் கடந்த ஆண்டு கெய்ல், பெங்களுர் அணிக்காக வாங்கப்பட்டார்.

மும்பை அணி வீரர்கள் காயம் காரணமாக, கடந்த ஆண்டு ஐந்து வெளிநாட்டு வீரர்களை களத்தில் இறக்க சம்மதித்தனர். எங்களுக்கு மட்டும் அனுமதி மறுக்கின்றனர். பல்வேறு விதிகளை காரணம் காட்டி, எங்களது கோரிக்கைகளை பி.சி.சி.ஐ., ஏற்க மறுக்கிறது. கிரிக்கெட், பணம் படைத்தவர்களின் விளையாட்டாக மாறிவிட்டது. இவர்கள் நினைத்ததை சாதிக்க கிரிக்கெட் துணை புரிகிறது. இதனால் 11 ஆண்டு கிரிக்கெட் பயணத்தை முழு மனதோடும், கனத்த இதயத்துடனும் முடித்துக் கொள்ள முடிவு செய்துள்ளோம். இது உணர்ச்சி வசப்பட்ட நிலையில் எடுத்த முடிவு தான். அதேநேரம் பல்வேறு சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, இப்படி செய்ய வேண்டியதாயிற்று.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டு இருந்தது.

எல்லோரும் ஒன்று தான்

சகாரா விலகல் குறித்து பி.சி.சி.ஐ., செயலர் சஞ்சய் ஜக்தலே கூறுகையில், யுவராஜ் மாற்றம் தொடர்பாக, விதிகளில் மாற்றம் செய்ய சில நாட்களாகவே எங்களை சகாரா நிறுவனத்தினர் தொடர்பு கொண்டனர். அதேநேரம், விதிகள் அனைவருக்கும் பொது[illegible] உரிமையாளர்களுடனும் பி.சி.சி.ஐ., நல்ல உறவு வைத்துள்ளது. மீ[illegible] புதிய வீரர்களை எடுத்துக்கொள்ள வாய்ப்புள்ளது. இதுகுறித்து அவர்களை தொடர்பு கொள்வோம், என்றார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேச போட்டிகளில் வெற்றியீட்டியோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப்.6

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட், எல்லே, பூப்பந்து போட்டிகளில் வெற்றியீட்டிய விளையாட்டுக்கழகங்களின் பெயர் விவரங்கள் வருமாறு.

**கிரிக்கெட்- ஆண்கள்**

இரணைப்பாலை சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் (முதலாமிடம்), விசுவமடு தோழர்கள் விளையாட்டுக்கழகம் (இரண்டாமிடம்)

**எல்லே- ஆண்கள்**

இரணப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் (முதலாமிடம்),கோம்பாவில் புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வர விளையாட்டுக்கழகம் (இரண்டாம் இடம்)

**எல்லே- பெண்கள்**

கோம்பாவில் விக்கினேஸ்வர விளையாட்டுக் கழகம் (முதலாமிடம்),

இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் (இரண்டாமிடம்)

**பூப்பந்தாட்டம்-ஆண்கள்**

இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் (முதலாமிடம்),கோம்பாவில் விக்கினேஸ்வர விளையாட்டுக்கழகம் (இரண்டாமிடம்)


**பூப்பந்தாட்டம்-பெண்கள்**

கோம்பாவில் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் (முதலாமிடம்).

## பல்கலை அணியை எதிர்க்கிறது அரியாலை

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் அமரர் டாக்டர் ஜே.பி.சி. பிலிப்ஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 11 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4.15 மணிக்கு பாசையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகஅணி மோதவுள்ளது. (ம-23)



நெடுங்கேணி பிரதேசத்துக்கு உட்பட்ட ஒலுமடு அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்தவாரம் அதிபர் கு.விமலேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. முதலாமிடம் பெற்ற செங்கதிர் இல்லத்திற்கு வவுனியா வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி பராசக்தி வெற்றிக் கிண்ணம் வழங்குகின்றார். (த-435)

## செவ்வாய் மோதும் அணிகள்

யாழ்ப்பாணம், பெப்.6

கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து ''விக்ரம், ராஜன், கங்கு'' ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் நாளை செவ்வாய்க் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

காலை 8.30 மணி- ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ். பல்கலைக்கழகம்.

பிற்பகல் ஒரு மணி- கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டுக் கழகம் எதிர் அரியாலை விளையாட்டுக் கழகம். (ம-23)

# இந்த வருட சம்பியனை வென்றது குருமன்காடு

வவுனியா, பெப்.6

வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் குருமன்காடு கலைமகள் விளையாட்டுக்கழகம் இவ்வருட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

போட்டியின் இறுதியாட்டம் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கோயில் குளம் றொக்கெட் விளையாட்டுக் கழகமும் குருமன்காடு கலைமகள் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

மூன்று நேர் செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் பலத்த போட்டியின் மத்தியில் 25:20, 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் குருமன்காடு கலைமகள் விளையாட்டுக்கழகம், றொக்கெட் விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டு இந்த வருடத்துக்கான மாவட்ட மட்டப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, பெண்களுக்கான போட்டியில் கிடாச்சூரி கண்ணகி விளையாட்டுக்கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-400)

# சம்பியன் வென்றது பூவரசங்குளம்

வவுனியா, பெப்.6

வவுனியா தெற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான எல்லே சுற்றுப் போட்டியின் சம்பியனாக பூவரசங்குளம் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியுள்ளது.

இந்தப் போட்டியின் இறுதியாட்டம் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது. இதில் வவுனியா பூவரசங்குளம் விளையாட்டுக்கழகம், வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழம் என்பன மோதின.

அணிக்கு 30 பந்துகளைக் கொண்ட இந்த எல்லேச் சுற்றுப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. இதற்கமைய முதலில் விளையாடிய பூவரசங்குளம் அணி 30 பந்துகளில் ஒரு ஓட்டத்தை மட்டுமே பெற்றுக் கொண்டது.

இரண்டு ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற அடிப்படையில் இரண்டாவதாக விளையாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஒரு ஓட்டத்தை மட்டுமே பெற்றுக் கொண்டது.

இரு அணிகளும் தலா ஒரு ஓட்டத்தைப் பெற்றதால் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு மேலும் தலா 10 பந்து இரு அணியினருக்கும் வழங்கப்பட்ட போதும் இரு அணி வீரர்களும் மேலதிக ஓட்டங்கள் எதனையும் பெறவில்லை.

இதனை அடுத்து நாணயச் சுழற்சி மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. இதில் பூவரசங்குளம் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-400)

# வலயச் சம்பியனாக மானிப்பாய் இந்து

வலி.வடக்கு பெப்.6

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான உதை பந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி பலத்த போராட்டத்தின் மத்தியில் வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய 5ஆவது நிமிடத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரன் வைராஸ் ஒரு கோலைப் பெற்றுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து போட்டி மிகவும் விறுவிறுப்பான போட்டியாக இரு அணிகளும் மோதிக்கொண்டன.

இந்த நிலையில் முதல் பாதி ஆட்டம் நிறைவு பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் மிகவும் அத்தியாவசியமானதாக காணப்பட்ட நிலையில் இரு அணிகளும் களம் இறங்கிய நேரம் முதல் முடிவடையும் வரை கடுமையாக மோதிக்கொண்டன.

இரு அணிகளும் கோல்கள் பெற எடுத்த முயற்சிகள் பலனளிக்காத நிலையில் இரண்டாம் பாதி ஆட்டத்தில் கோல்கள் பெறாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 1:0 என்ற கோல்க் கணக்கில் வயாவிளான் மத்தியமகா வித்தியாலயத்தை வெற்றி பெற்று வலிகாமம் வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (86)

## அகில இலங்கை கபடிப் பயிற்சிக்குத் யாழ். மாணவர் தெரிவு

வடமராட்சி,பெப்.6

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற கபடிப் போட்டிப் பயிற்சிக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து இரு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய மாணவன் மகாலிங்கம் கௌதமன் (வயது - 17), இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவன் சகாயநாதன் டெனிக்ஷன் (வயது -18) ஆகியோரே தெரிவு செய்யப்பட்டவர்களாவர். (86)

# மரதன் ஓட்ட வெற்றியாளர்


வவுனியா,பெப்.6

வவுனியா நெடுங்குளம் கலைமகள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் ஓர் அங்கமாக இடம்பெற்ற மரதனோட்டப் போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்ற வீரவீராங்கனைகள் விவரம் வருமாறு.

**ஆண்கள் பிரிவில்** எல்.சுவேந்திரன்,ரி.தருசாந் ஆகியோரும்-

**பெண்கள் பிரிவில்** ஆர்.கிருசாந்தினி,ரி.கிருசாந்தினி, மற்றும் ரி.டிசாளினி ஆகியோரும் முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்றனர்.

வித்தியாலய முன்றிலில் இருந்து ஆரம்பமாகி பம்பைமடுச் சந்திவரை சென்று மீண்டும் வித்தியாலய முன்றிலில் நிறைவு பெற்ற இந்த மரதனோட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம-400)



ஆனைக்கோட்டை உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அதிபர் பொ.[illegible] தலைமையில் இடம்பெற்றது. பாடசாலை மாணவர்களின் உடற்பயிற்சி மற்றும் விநோத [illegible] (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்டச் சுற்றில் வென்றது ஸ்கலப்

யாழ்ப்பாணம், பெப்.6

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இறுதியாட்டத்தில் ஆண்கள், பெண்கள் பிரிவில் ஸ்கலப் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை பாண்டியன்குளம் இளம் கதிர் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் முதலில் இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஸ்கலப் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இருதயநாதர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

**ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததால் ஆட்டம் சமநிலையில்** முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் ஸ்கலப் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் ஸ்கலப் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளம் கதிர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

ஆட்டநேர முடிவில் இரண்டு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் ஸ்கலப் விளையாட்டுக்கழக பெண்கள் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி சின்னம்மா



ஏழாலை வடக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சின்னம்மா நேற்று (05.02.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, தம்பிஐயா, தார்மலிங்கம், வீரசிங்கம், அருளம்பலம் மற்றும் அன்னம் (சீனியம்மா கனடா), பாக்கியம் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2012) திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஏழாலை வடக்கு, ஏழாலை.
குமாரசாமி- பாக்கியம்
அன்னம் (சீனியம்மா)

## கணபதிப்பிள்ளை புவனேஸ்வரி (J.L.S)



நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை புவனேஸ்வரி நேற்று (05.02.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு செல்லம்மா தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் (J.L.S) அன்பு மனைவியும், சிவசங்கர் (லண்டன்), விமலசங்கர் (லண்டன்), சிவசங்கரி, குருதாஸ், குமரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், கலைச்செல்வி (லண்டன்), மதிவதனி (லண்டன்), சத்தியசீலன் (ஆசிரியர், யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), தனுஷா (பிரான்ஸ்), மைதிலி (லண்டன்) ஆகியோரின் மாமியும், துஷாரா, அபிஷன் (லண்டன்), சௌமியா (லண்டன்), அபியுதன், நிலுக்ஷி, சங்கீதனன் (லண்டன்), சந்தியா (லண்டன்), ஹரிஸ்மா, ஹரிஸ்மி (லண்டன்), நிவேதிகா, அவந்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2012) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன் கந்தையா வீதி, நெல்லியடி, கரவெட்டி.
தகவல்: குடும்பத்தினர்.

## தம்பிராஜா தியாகராஜா



மலேசியா போனியாவைப் பிறப்பிடமாகவும் ஆலங்குளாய் சண்டிலிப்பாய், தெல்லிப்பழை வீமன்காமம் ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் தற்போது லண்டன் Liverpool ஐ வதிவிடமாகவும் கொண்ட தம்பிராஜா தியாகராஜா கடந்த (03.02.2012) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா - செல்லம்மா தம்பதியின் அன்பு மகனும் சர்வேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி (V.T.K), விமலாதேவி மற்றும் மகேஸ்வரி, புஸ்பலீலாவதி, தார்மலிங்கம், யோகராஜா, ஜெயதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அமித்தா, சுபாஜினி, சிவாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரகாஷ், கிரிதரன், அரூரன் ஆகியோரின்அன்பு மாமனும் அபிலக்ஷன், நிலக்ஷி, நிரோஜன், தனுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

அந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
பிரகாஷ்- பிரித்தானியா.
தொலைபேசி:- +0441516389576
செல்லிடப் பேசி:- +447949039347
ரஞ்சன்- பிரித்தானியா.
செல்லிடபேசி:- +447884364097
தகவல் குடும்பத்தினர்.

# அநாகரிகமாக நடக்கும் உயர் நிலை மாணவர்

வவுனியா, பெப்.6

போக்குவரத்தில் ஈடு படும் உயர்கல்வி கற்கும் மாணவர்கள் பஸ்களில் அநாகரிகமான முறையில் நடந்து கொள்வதாக ஏனைய பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மன்னார் - வவுனியா வீதியினூடாகப் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களிலேயே இத்தகைய அநாகரிகமான செயல்கள் இடம்பெற்று வருகின்றன.

தற்போது வவுனியா பம்பை மடுப்பகுதியில் இயங்கி வரும் உயர் கல்வி நிறுவனமொன்றில் தமது விரிவுரைகளை நிறைவு செய்தபின்னர் வீடு திரும்பும் மாணவ, மாணவிகளே இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றனர்.

இவர்களுக்கெனத் தனியாக இலவச பஸ்சேவை இடம்பெற்று வருகின்ற போதும் இவர்கள் அதில் பயணம் செய்யாது பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான மற்றும் தனியார் பஸ்களில் பயணத்தைத் தொடர்கின்றனர். இவர்களில் பலர் தம்மை மறந்து அநாகரி கமாக நடந்து கொள்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் மூவினங்களைச் சேர்ந்த மாணவர்களும் பயணம் செய்வது குறிப்பிடத்தக்கது. இவர்கள் மற்றவர் மதிய நேரங்களில் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறு கின்றன. இந்த பஸ்களில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் செல்கின்றனர்.

களுக்கு வழிகாட்டிகளாக இருப்பதைவிட்டு இவ்வாறு நடந்து கொள்வதனை எண்ணிப் பயணிகள் முகம் சுளிக்கின்றனர்.

குறிப்பாக மதிய நேரங்களில் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இந்தப் பஸ்களில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பல தரப்பட்ட பிரிவினரும் பயணம் செய்வது குறிப்பிடத் தக்கது.

இந்த உயர்கல்வி நிறுவனம் முன்னர் வவுனியா உள்வட்ட வீதியில் இயங்கி வந்தது. அண்மையிலேயே பம்பைமடுப் பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (க-400)

# தங்குமிட வசதிக்கு மல்லாவியில் கோரிக்கை

மல்லாவி, பெப்.6

மல்லாவி மத்திய கல்லூரியில் தங்குமிட வசதிகளை ஏற்படுத்துமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மல்லாவிப் பிரதேசத்திலே உயர்தர பாடசாலையாக விளங்கும் இந்தப் பாடசாலைக்கு, பௌதீக வளங்கள் ஓரளவுக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தமது இருப்பிடங்களில் இருந்து பாடசாலைக்கு வருவதில் பல இடர்பாடுகளைச் சந் தித்து வருகின்றனர்.

இந்தப் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களில் 90 வீதமானோர் வெளிமாவட் டங்களைச் சேர்ந்தவர்கள். இதனால் இவர்களது போக்கு வரத்துக்கு நீண்ட நேரம் எடுக் கின்றது. இதன் காரணமாக இவர்கள் நேரம் பிந்தியே பாடசாலைக்குச் சமுகமளிக் கின்றனர்.

அத்துடன் முழங்காவில், கல்விளான், தென்னியன்குளம், விநாயக்புரம், துணுக்காய், பாண்டியன்குளம், நொச்சிக்குளம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மாண வர்கள் நீண்ட தாமதத்தின் பின்னரே பாடசாலைக்குச் சமுகம் தருகின்றனர்.

எண்ணூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலை யில் 80 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தாய் அல்லது தந்தையை இழந்துள்ளதுடன், 14 மாணவர்கள் தாய் தந்தை இருவரையும் இழந் தவர்களாகவும், 7 மாணவர்கள் அங்கவீனர்களாகவும் காணப்படுகின்றனர்.

ஆசிரியர்களும், மாணவர்களும் இவ்வாறு எதிர் கொள்ளும் போக்குவரத்துத் தாமதத்தால் பாட நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய முடியாதநிலை காணப்படுகின்றது. ஆகவே பாடசாலையில் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத் தால் இந்த நிலை மாறுமெனப் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (க-14)

# 70 ஆயிரம் ரூபா தண்டம்

கிளிநொச்சி, பெப்.6

கிளிநொச்சியில் கசிப்பு விற்பனையாளர்கள் இரு வருக்கு 70 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, சாந்தபுரம், தர்மபுரம் ஆகிய இடங்களில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் சுமார் 34 போத்தல் கோடாவை தனது உடமைகளுடன் வைத்திருந்த ஒருவரைக் கடந்த 31 ஆம் திகதி கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து அடுத்த நாள் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் முன் னிலையில் முன்னிலைப் படுத்தியிருந்தனர். இந்த நபருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 30 ஆம் திகதி கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் 500 மில்லி லீற்றர் கசிப்பைத் தனது உடமைகளுடன் வைத்திருந்த குற்றச் சாட் டில் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவருக்குப் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக் கப்பட் டுள்ளது. (க-6)

# கலந்துரையாடல்

துணுக்காய், பெப்.6

கரைச்சிப் பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி த.கனகராஜ் கருத்துரைகளை வழங்கினார்.

சிறுவர்கள் எதிர்நோக்கும் மனித உரிமைப் பிரச்சினைகள் இந்தக் கலந் துரையாடல் மூலம் இனங் காணப்பட்டன. இவற்றைக் களைவது தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டதாகக் கூறப்படுகின் றது. (க-121)

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1935 | 2012 |
| 04 | 02 |
| 24 | 01 |

## அமரர் கந்தப்பு கதிரவேலு

எங்கள் பாடசாலை ஆசிரியர்
பி.கிருஷ்ணகுமாரின் அன்பு மாமனாரின்
மறைவுத்துயரில் நாமும் கலந்து கொள்கின்றோம்.
அவரின் ஆத்மா சாந்தியடைய பரம் பொருளை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலை சமூகம்
யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியக்குருக்கள் - சுவாமிநாதன் (சுக்கர்)

இணுவில் கிழக்கு, சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியக் குருக்கள் - சுவாமிநாதன் நேற்று (05.02.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியக்குருக்கள் மற்றும் செம்பொற்சோதி தம்பதியின் சிரேஷ்ட புத்திரனும் மனோன்மணி, நளாயினி, சிவமுத்துக்குமர குருக்கள், வைத்தியநாதன் குருக்கள் ஆகியோரின் சகோதரரும் விநாயகமூர்த்தி குருக்கள் ( P.V.M. குருக்கள், மானிப்பாய்), சற்குருநாதன், சிவஜினி, அமுதினி ஆகியோரின் மைத்துனரும் ஆதித்தியன், அரூரன் ஆகியோரின் பெரிய தகப்பனும் கஜானந்தன், மதிமுகன், வாமதேசன், வினோஜா, வித்தியா, யோகினி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2012) திங்கட்கிழமை மு.பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

அந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி, இணுவில், கிழக்கு.
தகவல் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய செய்தியுடன் அமெ. உயர் மட்ட தூதுவர்கள் மூவர்

»1

யில் கடுந்தொனியிலான முக்கிய செய்தியுடன் மூன்று உயர்மட்டத் தூதுவர்களைக் கொழும்புக்கு அனுப்பிவைக்கிறது.

பொதுமக்கள் பாது காப்பு, ஜனநாயகம், மனித உரிமைகள் விவகாரங்களுக்கான கீழ்நிலைச் செயலர் மேரி ஒரேரோ, மற்றும் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக் ஆகியோர் எதிர்வரும் 12 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளனர்.

இவர்கள் ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணி அரசின் தலைவர்களுக்கு ஜெனிவாத் தீர்மானத்துடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து விளக்கமளிக்கவுள் ளனர்.

ஆனால், இத்தகைய நகர்வை எந்தவொரு அர சும் தடுக்கக்கூடும் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள தீர்மானம் தொடர்பாக அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்டன் இலங்கை வெளிவிவகார அமைச்சருக்குத் தெரியப்படுத்தியுள்ள அதேசமயம், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை வோஷிங்டனுக்கு வருமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை ஏற்று, அமெரிக்கா சென்று இலங்கையின் நிலைப்பாட்டை விளக்கிக் கூறுமாறு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸை ஜனாதிபதி மஹிந்த பணித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, இன்று கொழும்பு வரத் திட்டமிட்டுள்ள போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் அமெரிக்க ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவர் ஸ்டீபன் ராப் - பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முக்கிய பேச்சுகளை நடத்தவுள்ளார்.

எதிர்வரும் 11 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் அவர், இலங்கை அரசினது பல்வேறு அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.(ஒ-சி)

## அமெரிக்க அதிகாரிகள் படையெடுப்பு கதிகலங்கிப் போய் அரசு வாயடைப்பு

»1

கல்கிஸை மாநகரசபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

அமெரிக்க இராஜதந்திரிகள் இலங்கைக்குத் தொடர் விஜயங்களை மேற்கொள்வது குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைப் பிரச்சினைகள் இன்று சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளன. போர்க் காலத்தில் அரசுக்குத் தாலாட்டுப்பாடிய அமெரிக்கா, தற்போது அபாயச்சங்கு ஊதுகின்றது. அமெரிக்காவுக்கு நிர்வாணக் காட்சியளித்த அரசு, தற்போது கற்பு பறிபோய்விடும் என அஞ்சுகின்றது. நிர்வாணக் காட்சியை மறைப்பதற்கு அரசு வெள்ளைத் துணியொன்றைப் போர்த்துக்கொள்வதே சிறந்ததாக அமையும்.

ஜெனிவாவில் கழுத்துக்குக் கயிறு வரப்போகின்றது என்பதை உணர்ந்துள்ள அரசு, அமெரிக்காவுக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களை அடக்கிவைத்துள்ளது.

மேற்குலகத்திற்கு எதிராக உண்ணாவிரத நாடகத்தை அரங்கேற்றும் தேசப்பற்றாளர்களான - அமைச்சர்கள் சம்பிக்க, விமல் ஆகியோர் திடீரென ஊமையானது ஏன்? தற்போது நாடகத்தை அரங்கேற்றி எதிர்ப்பை வெளியிடலாம் அல்லவா?

உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீட்டை அனுமதிக்க முடியாது தான். இருந்தாலும், அரசின் செயற்பாடுகளே இவை அனைத்திற்கும் காரணமாகும்.

தமிழர் பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வொன்றை வழங்காது, நாட்டை இராணுவமயப்படுத்தும் நோக்கில் அரசு செயற்படுமானால், சர்வதேசத்தின் தலையீட்டை எவராலும் தடுக்க முடியாது - என்றார். (ஒ-சி)

## சர்வ கட்சிக் கூட்டத்துக்கான திகதி அறிவிப்பு மிக விரைவில்

»1

பேச்சுகள் தொடருமா? அதன் நிலைமை என்ன ? - என்பவை பற்றிக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பேச்சுகள் குறித்து அமைச்சரவை எடுத்த முடிவில் அரசு உறுதியாக உள்ளது. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குப் பெயர்களைத் தரும்வரை கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதில்லை என்ற அமைச்சரவைத் தீர்மானத்தை எம்மால் மீற முடியாது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு பெயர்களைத் தருவதில் கூட்டமைப்பு தொடர்ந்து இழுத்தடிப்பைச் செய்து வருகிறது. பெயர்களைத் தருவதற்கான எந்த அக்கறையும் அவர்களிடத்தில் இல்லையென்றே எமக்குப்படுகிறது.

எனவே, தீர்வு முயற்சியை தொடர்ந்து முன்னெடுக்க ஜனாதிபதி அறிவித்தபடி சர்வகட்சிகள் விரைவில் கூடும். அதற்கான திகதி அறிவிப்பும் வெளிவரும். கூட்டமைப்பு சாதகமான பதிலை வழங்காமல் காலத்தை இழுத்தடிப்பதால் அவர்களுக்காகக் காத்துக்கொண்டிருப்பதில் எந்தவித அர்த்தமில்லை - என்றார் சஜின் வாஸ். (ஒ-சி)

## சர்வதேச அழுத்தங்களுக்குப் பணிந்து மீள் பரிசீலனை க்குத் தயாராகிறது அரசு

»1

ஆணைக்குழுவின் அறிக்கையை ஜெனிவா மாநாட்டில் சமர்ப்பிக்கப் போவதில்லை என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் திட்டவட்டமாக அறிவித்திருந்தார்.

அத்துடன், சர்வதேசத்தின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் அறிக்கை அல்ல நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை எனச் சுட்டிக் காட்டிய அவர், உள்நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே அது தயாரிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அதேவேளை, மனித உரிமை விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் தூதுவர் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும், அமைச்சர் பீரிஸின் பாணியிலேயே கருத்து வெளியிட்டார். அத்துடன், நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டால் பதிலளிப்போம் எனக் கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசின் இந்த அதிரடித் தீர்மானத்தால் கடும் கோபமடைந்த சர்வதேச சமூகம், அறிக்கையை சமர்ப்பித்தேயாகவேண்டும் என்ற தொனியில் இலங்கைக்கு இராஜதந்திர மட்டத்தில் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது.

இந்நிலையிலேயே நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை விவகாரம் தொடர்பில் தான் எடுத்த முடிவை மீள்பரிசீலனை செய்வதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது என நம்பகரமாக அறியமுடிகின்றது.

கடந்த செப்டெம்பர் மாதம் நடைபெற்ற 18ஆவது மனித உரிமைகள் கூட்டத் தொடரின்போது நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை என்ற 'துடுப்பை'ப் பயன்படுத்தியே அரசு தப்பித்துக் கொண்டது. அத்துடன், பொறுப்புக்கூறும் கடப்பாடுகளுக்கு மேலும் கால அவகாசத்தைக் கோரியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## சர்வதேச சமூகத்தின் தலையீட்டுக்கு வழியமைத்துக் கொடுக்கிறது அரசு

»1

யிடும்போதே ஜே.வி.பியின் பிரசாரச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் 'உதயனு'க்குக் கூறியவை வருமாறு:-

''தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வழிமுறை 13 பிளஸ் என்கிறார்கள்; செனட்சபை என்கிறார்கள்; சர்வகட்சிக்குழு என்கிறார்கள்; தற்போது மீண்டும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு என்கிறார்கள். அரச தரப்பின் இந்தக் கூற்றுகளுள் எதனை நம்புவது? இவையெல்லாம் காலத்தை இழுத்தடிப்பதற்கு அரசு அரங்கேற்றும் போலி நாடகங்களாகும். எனவே, அரசின் இந்தப் போலியான வலையில் ஜே.வி.பி. சிக்காது. இறுதிவரை நாம் எமது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்போம்.

அரசு முதலில் தனது தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டும். அதனைவிடுத்து முரண்பட்ட கருத்துகளைக் கூறுவதில் பயன் இல்லை.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு அடிப்படைத் தேவைகளைக்கூட அரசு முழுமையாகப் பூர்த்திசெய்து கொடுக்கவில்லை. இந்நிலையில், எப்படி அடுத்த கட்டம் குறித்துச் சிந்திப்பது? வடக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி, அங்கு வாழும் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் கட்டிக்காப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகவுள்ளது.

அதேவேளை, சர்வதேச அழுத்தங்களுக்கு எதிராகக் குரல்கொடுக்கும் அரசுதான் சர்வதேசத் தலையீட்டுக்கு வழியமைத்துக் கொடுத்துள்ளது.

மனித உரிமைகளை மீறிச் செயற்படுகின்றமை, ஊடக அடக்குமுறை உட்பட அரசின் விரோதமான செயற்பாடுகள் காரணமாகவே அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுகின்றன. அரசு இவற்றைச் செய்யாதிருந்தால் வெளித்தலையீடுகள் ஏற்பட்டிருக்கமாட்டா'' - எனக் கூறினார் விஜித ஹேரத் எம்.பி. (ஒ-சி)

## யாழ். வரும் ஜனாதிபதிக்கு பாதுகாப்பு தமிழ்ப் பொலிஸாருக்கு இடமில்லை

»1

பொலிஸார் பாதுகாப்புப் பணிக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரே இந்த முடிவை எடுத்திருக்கின்றனர் என்று யாழ்.பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவரால் தமிழ்ப் பொலிஸாருக்குக் கூறப்பட்டுள்ளது.

தமிழ்ப் பொலிஸார் வீதி ஒழுங்குகள் மற்றும் வீதியில் ஜனாதிபதியின் போக்குவரத்துக்கான ஒழுங்குகள் போன்றவற்றைக் கவனிக்கும் படி பணிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் பாதுகாப்பு விடயம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு அழைப்பு விடுத்துவிட்டுத் தமிழ்ப் பொலிஸாரை, ஜனாதிபதி பிரவேசிக்கும் இடங்களுக்குச் செல்ல முடியாது என்று அறிவிப்பது அவர்களை அவமதிப்பது போன்றது மட்டுமன்றி - தமிழ்ப் பொலிஸாரை அதிருப்தியடையவும் செய்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## இந்தோனேஷியாவில் 2 இலங்கையர் கைது

»1

இலங்கையைச் சேர்ந்த கே.பி. என்னும் முதற்பெயரை உடைய ஒருவர் கடந்த ஜனவரி 29ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார் என்றும் அப்போது இவர் 64 மில்லியன் ரூப்பியா பணத்தையும் 25 போலி தன்னியக்கப் பணப்பரிமாற்று அட்டைகளையும் உத்தியோகபூர்வ புகலிடம் கோருவோருக்கான அடையாள அட்டையையும் வைத்திருந்தார் என்றும் பொலிஸார் கூறினர்.

இதேவேளை, இலங்கையைச் சேர்ந்த எம்.கே. என்னும் முதற்பெயரை உடைய ஒருவர் மறுநாள் கைது செய்யப்பட்டார் என்றும் இவர் இந்தோனேஷியாவின் போலி அடையாள அட்டையை வைத்திருந்தார் என்றும் பொலிஸார் கூறினர்.

## ஜனாதிபதி இன்று திறக்கும் சாவகச்சேரி ஆஸ்பத்திரி கட்டடங்கள் பின்லாந்து, ஜரிஸ் நாடுகள் கட்டியவை

»1

கள் அமைப்பதற்கான முழு நிதியுதவியையும் பின்லாந்து அரசின் றெட் குறொஸும் (சர்வதேச செஞ்சிலுவை சங்கம்), ஐரிஸ் அரசும் வழங்கியிருந்தன.

இவை மூன்று மாதங்களுக்கு முன்னர் வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டபோது, குறித்த கட்டடங்களில் நினைவுக் கற்கள் செதுக்கப்பட்டிருந்தன. இவற்றை நேற்றையதினம் இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து அகற்றியதுடன் அங்கு மஹிந்த ராஜபக்ஷ, சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் சந்திரசிறி ஆகியோரின் புகைப்படங்கள் தாங்கிய கட் அவுட்டினை குறித்த நினைவுக் கற்கள் அகற்றப்பட்ட இடத்தில் பதித்துள்ளனர்.

இதனை விட மூன்று வருடங்களுக்கு முன்னர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நிர்வாக அலுவலகக் கட்டடம், வெளிநோயாளர் பிரிவு என்பன நிக்கொட் நிதியில் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டிருந்தன. இந்தக் கட்டடம் நிக்கொட் நிதியில் அமைக்கப்பட்டது என்பதைக் குறிக்கும் வகையில் நினைவுக்கல் செதுக்கப்பட்டிருந்தது. அதனையும் அகற்றி 'வடக்கின் வசந்தம்' வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது என்பதை குறிக்கும் பித்தளையிலான நினைவுக்கல் வைக்கப்பட்டுள்ளது.

இவற்றை விட சாவகச்சேரி வைத்தியசாலைக்கு 2 மில்லியன் ரூபா செலவில் இரத்தப் பரிசோதனை செய்யக் கூடிய இயந்திரம் ஒன்று கடந்த மாதம் கொண்டுவரப்பட்டது. குறித்த இயந்திரம் இன்று திறந்து வைக்கப்படும் கட்டடத்தினுள் வைப்பதற்காகவே கொண்டுவரப்பட்ட போதும், ஜனாதிபதி குறித்த கட்டடத்தை திறந்து வைக்காததனால் மேற்படி இயந்திரம் திரும்பவும் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு விட்டது.

மேலும் நேற்றையதினம் வெளிநோயாளர் பிரிவில் மக்கள் மருந்துக்குச் சென்றபோது பனடோல் முடிந்துவிட்டதாகவும் அவற்றை வெளியில் வாங்குமாறும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் சாவகச்சேரி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்படும் உடல்களை மறுநாள் எலிகள் தின்றிருப்பதுடன் எந்தவித வசதியுமின்றியே அது இயங்கிவருகின்றது. பழுதடைந்த கட்டடத்திலேயே சமையல் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

மஹிந்தவின் வருகையையொட்டி குறித்த சமையல் கூடம் வர்ணப் பூச்சுக்களால் அலங்கரிக்கப்பட்ட போதும் அந்தக் கட்டடம் திருத்தப்படவில்லை. மஹிந்த ராஜபக்ஷவின் வருகையை முன்னிட்டு வடமாகாண சுகாதார அமைச்சினால் 40 லட்சம் ரூபா நிதி வர்ணப் பூச்சுக்களுக்கும் அலங்காரத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் வைத்தியசாலையில் மருந்துகள் இல்லாத நிலையில் இவ்வாறு ஜனாதிபதியின் வருகைக்கு மக்களின் வரிப்பணம் வாரி இறைக்கப்படுவது தொடர்பில் பலரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (5)

## நகுலேஸ்வரம் கும்பாபிஷேகத்தில் மஹிந்த

»1

பாபிஷேகம் நடைபெறவுள்ளது. இதற்கென கேரளாவில் இருந்து இசைக்கலைஞர்களும் வரவழைக்கப்பட்டுள்ளனர். நேற்றே குடாநாட்டைச் சேர்ந்தவர்களை விடத் தென்பகுதியிலிருந்து ஏராளமானவர்கள் அங்கு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவில் எதற்கும் தயார் என்ற அரசின் அறிவிப்பு நகைப்புக்குரியது

## ஐக்கிய சோஷலிஸக் கட்சி தாக்கு

கொழும்பு, பெப்.6

உள்நாட்டிலுள்ள சவால்களுக்கே முகம் கொடுக்க முடியாமல் தள்ளாடும் அரசு, அதுவும் ஜெனிவாத் தொடரில் எழும் எந்தவொரு சவால்களுக்கும் முகம்கொடுக்கத் தயார் என அறிவித்திருப்பது நகைப்புக்குரிய விடயமாகும்.

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தொரு அரசியல் தீர்வை அரசு உடன் வழங்குமானால், ஜெனிவாத் தொடர் மட்டுமல்ல, எந்தவொரு மாநாட்டிலும் கலந்துகொண்டு துணிகரமாகப் பேசலாம். அரசியல் தீர்வு என்ற பூட்டினூடாகவே சர்வதேசத்தின் வாயை அடைக்கமுடியும் என்பதை அரசு புரிந்துகொள்ளவேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய சோஷலிஸக் கட்சி தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடர் குறித்துக் கருத்து வெளியிடும் போதே ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''உள்வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்குத் தகுதியற்றவன், அயல்வீட்டுப் பிரச்சினைகளைப்பற்றிப் பேசுவது போல்தான் அரசின் செயற்பாடுகள் உள்ளன.

உள்நாட்டில் அரசுக்குப் பல்வேறு சவால்கள் உள்ளன. இவற்றுக்கு முகம்கொடுக்க முடியாமல் பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசும் அரசு, ஜெனிவாத் தொடரின்போதான சவால்களைப்பற்றிப் பேசுகின்றது.

உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கே முகம் கொடுக்க முடியாமல் தத்தளிக்கும் அரசு, ஜெனிவாத் தொடரின்போது பிரச்சினைகளை எவ்வாறு கையாளப்போகின்றது? உள்நாட்டு மக்களுக்குத் தனது வீரத்தைக் காண்பிப்பதற்கே அரசு அங்கும் இங்கும் பெருமைகூறி சூளுரைத்து வருகின்றது.

தமிழ் மக்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய தானதொரு அரசியல் தீர்வை அரசு வழங்க வேண்டும் என்பதுதான் சர்வதேசத்தின் எதிர்பார்ப்பாகும். இதனை அரசு உடன் செய்யுமானால் சர்வதேசம் இலங்கை விவகாரத்தில் தலையிடாது. அரசும் ஜெனிவாத் தொடர் மட்டுமல்ல, எந்தவொரு தொடரிலும் துணிகரமாகக் கலந்துகொண்டு பதிலளிக்கலாம்.

அரசு இவ்வாறு செய்யாமல் ஜெனிவாத் தொடரைப்பற்றிப் பேசுவது மடமைத்தனமான செயலாகும். உள்வீட்டுப் பிரச்சினைகளை உரியமுறையில் தீர்த்தால் வெளித்தலையீடுகள் வராது என்பதை இனியாவது அரசு புரிந்துகொள்ளவேண்டும்'' - என்றார்.(ஒ-சி)

## வான் பகுதி மாசுபடுவதை தடுக்க துரித நடவடிக்கை

வான் பகுதியை மாசுபடுத்தும் நடவடிக்கையை தவிர்ப்பதற்கான சட்டத்தை வகுப்பது தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபை கவனம் செலுத்தியுள்ளது.

வான் பகுதியில் பதாகைகள் காட்சிப்படுத்தப்படுவதனால் வான் பகுதி மாசுபடுத்தப்படுவதாக அதிகார சபையின் தலைவர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நகர பகுதிகளிலுள்ள சிறிய வான் பரப்புகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் இவ்வாறான பதாகைகள் காட்சிப் படுத்தப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

வான் பரப்பிற்கு இடையூறு விளைவிக்கும் நடவடிக்கைகள் குறித்து நாட்டில் இதற்கு முன்னர் எவ்வித வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை என மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சரித ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார்.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
யாழ்ப்பாணத்தில்
திங்கள், புதன், வெள்ளி புதிய பிரிவு ஆரம்பம்
06.02.2012 (இன்று)
பிரிவு 1 : காலை 9.00 - 10.00
பிரிவு 2 : மாலை 5.00 - 6.00
அரச தனியார் அலுவலர்கள், ஆசிரியர்கள், பட்டதாரிகள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், மற்றும் வெளிநாடு செல்வோருக்கான மற்றுமோர் சந்தர்ப்பம்
பயிற்சிக்கான மொத்தக்கட்டணம் : ரூபா 3000 மட்டும்
முதல் வகுப்புக்கான அனுமதி இலவசம்
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

வேலைவாய்ப்பு
கணினி ரைப் செற்றிங் செய்யக் கூடியவர்கள் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
10000- 15000 வரை
0772174751

கிழவன்காடு கலாமன்றம் காரைநகர்
அலங்கார வளைவு திறப்பு விழா
அழைப்பு



இடம்:- கலாமன்றம், காரைநகர்.
காலம்:- நாளை (07.02.2012) செவ்வாய்க்கிழமை
நேரம்:- முற்பகல் 11.00 மணி
தலைவர்
திரு. N.சோதிநாதன் அவர்கள்
(கலாமன்றத் தலைவர்)
பிரதம விருந்தினர்
கலாநிதி திருமதி V. தர்மரட்ணம் அவர்கள்
(வாழ்நாள் பேராசிரியர் யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்கள்
கலாநிதி திருமதி வீரமங்கை யோகரட்ணம் அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கிலத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
திரு. S. உதயபாலன் அவர்கள்
(இந்து கலாசார திணைக்கள உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)
திரு. S. சிவஞானம் அவர்கள்
(கௌரவ உறுப்பினர், கிழவன்காடு கலாமன்றம் - காரைநகர்)
திரு. E.S.P. நாகரத்தினம் அவர்கள்
(தொழிலதிபர் E.S.P. நிறுவனம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கிழவன்காடு, கலாமன்றம்.
நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
நீச்சல் தடாக திறப்பு விழா வாழ்த்துக்கள்
காலம்:- 06.02.2012 திங்கட்கிழமை
நேரம்:- முற்பகல் 11.00 மணி
பிரதம அதிதி
அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ
(இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு)
கௌரவ விருந்தினர்கள்
கௌரவ அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா (பா.உ)
(பாரம்பரிய கைத்தொழில் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு)
கௌரவ ஆளுநர்
மேஜர் ஜெனரல் G.A.சந்திரசிறி
(வடமாகாண ஆளுநர்)
கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்
நாமல் ராஜபக்ஷ
(தலைவர், ''இளைஞர்களுக்கான நாளை'' அமைப்பு)
மேற்படி நீச்சல் தடாக திறப்பு விழா சிறப்புற நடைபெற எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இந்த நிகழ்வை சிறப்புற நடத்துவதற்கு முழு முயற்சியை வழங்கிய அமைச்சரும் எமது மத்திய தாயின் பழைய மாணவனுமான
கௌரவ கே.என். டக்ளஸ் தேவானந்தா
அவர்களுக்கு எமது நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.
பழைய மாணவர் சங்கம்,
யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

A.L தமிழ்- seminar
2012, Day ஆரம்பம்
S.S.ஆனந்தன்
நாக.தமிழிந்திரன்
செவ்வாய்-7.30-8.30/8.30- 9.30
வியாழன்-3.30-5.00
கட்டணம்-450/=
விடைத் தொகுப்பு இலவசம்
2012 பரீட்சைக்காக
BEACON வெலிங்டன் சந்தி.யாழ்ப்பாணம்

புதிய தாசன் கல்வி நிலையம்
K.K.S வீதி, சுன்னாகம்.
A/L 2012 PAPER CLASS
கணக்கீடு
பகீரதன் திங்/புதன் 3.30 - 5.00
வணிகக்கல்வி
முரளி திங்/புதன் 5.00-6.00
ஆரம்பம்:- 08.02.2012

2013/14 A/L ICT,GIT
2012/13 O/L ICT
Free 5 Courses Fee Dip in Accounting, Dip in Web Design, DTP Dip in Business English, Dip in Ms Office
MCS Supported By UNDP/JRRP
பதிவுகளுக்கு 6.Feb.2012 க்கு முன் நேரில்
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324, Palaly Road, Parameswara Junction
Qualified Lectures panel, Passing Guarantee, 12 Years Experience

விற்பனைக்கு
வைத்தியரின் பாவனையிலுள்ள TOYOTA PASSO CAR (FULL OPTION) (வெள்ளை) விற்பனைக்குண்டு. 2007 (MODEL) தொடர்புகளுக்கு:-0777002818.

ஆரம்பம்:07/02/2012 By: மகேஸ்வரன் (Teacher of JHC)




BCS & BIT
BIT through FIT or A/L
Diploma in Business Management
TRANSITION
166/3, Navalar Rd, Jaffna.
T.P: 0212219330

கார் வாடகைக்கு உண்டு



திருமண வைபவங்கள் மற்றும் அதி விசேட வைபவங்களுக்கான புத்தம் புதிய 2012 (HYBRID)கார் (வெள்ளை நிறம்) வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு- S. மதன், 0777289283, 0778096873

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சண்முகநாதன் அருள்நங்கை அவர்களின் அருமை மகன்

# சந்துதன்

## 07.02.2000 நெஞ்சை மகிழவைத்த

## 12ஆம் அகவை நினைவுநாள் நாளைய தினமாகும்



அருமை மகனே அறிவுசால் புத்திரனே
நீர் பிறந்து வாழ்ந்த 9 ஆண்டுகளும் உன் பிறப்பின்
நன்நாளை உறவுகளை அழைத்து ஊரைக்கூட்டி
குதூகலித்துக் கொண்டாடிய காட்சிகளை நிழற்படத்தில்
பார்க்கவிட்டு எமைப்பிரிந்து சென்றுவிட்டாயடா
12ஆம் அகவையில் நீ இருந்திருந்தால் எப்படி வளர்ந்திருப்பாய்
உன் அழகுமுகம் எப்படி இருக்கும் என்று கற்பனையில்
உமை எண்ணி கண்ணீர் வடிக்கின்றோம். ஐயா நீ
9ஆம் அகவையில் நீ சொன்ன வார்த்தை இன்றும் காதிலே
ஒலிக்குதடா "நான் இனி வளர்ந்திட்டேன் அம்மா எனக்கு
இப்படி பிறந்தநாள் கொண்டாட வேண்டாம் என்று நீ
சொன்னாய்" அதற்கு நான் சொன்னேன் 9ஆவது அல்ல
90ஆவது பிறந்தநாள் என்றாலும் இப்படித்தான்
கொண்டாடுவேன் என்று. ஆனால் நீ சொன்ன
வார்த்தைதான் பலித்ததையா
நான் சொன்ன வார்த்தை பொய்க்க வைத்துவிட்டாய்
ஆனாலும் இந்நாளை உயிர் உள்ளவரையிலும்
எங்களால் மறக்கத்தான் முடியுமா
அன்பே ஆருயிர் புத்திரனே நீ வருவாய் என்றெண்ணி
உன் அருமை அப்பா நீ துயிலும் இல்லத்துக்கு அனுதினமும்
சென்று உன் வரவை பார்த்து ஏங்கும் செயல் பிறர்க்கு மடமை
என தெரிந்தாலும் எமக்கு அது ஆறுதலாய் இருக்குதடா
உன் மாமா உன்னைப்போல் பிள்ளையை நாம் எப்பிறப்பில்
காண்போம் என தவிப்பதும் உன் காதில் கேட்காது உறங்கும்
உறக்கம் தான் உனக்கு வந்ததடா. உற்றவரும் மற்றவரும்
கலங்கும் வகையில் அமைந்த உன் அழகு வதனத்தை
இனி எப்போ நாம் காண்போமடா
அருமைக் குழந்தாய் உன்னை வளர்த்தெடுத்து
வாழவைக்க முடியாத பாவிகளாய் தினமும்
அழுதழுது வாழ்கின்றோம் ஆனாலும் உன்னை நாம்
வந்தடையும் நாளை எதிர்பார்த்து நிற்கின்றோம்
நீ தெய்வம் என்பதால் எமக்கு எது எல்லாம் வேண்டுமென்று
நீ அறிந்து யாவற்றையும் தந்து மனம் மகிழ்ந்தாலும் அந்த
மகிழ்ச்சி எல்லாம் மகிழ்ச்சி அல்ல மகனே நீ எங்களுடன் வாழ்ந்த
9 ஆண்டுகள் போல் நாம் என்றும் மகிழவில்லை
உண்கிறோம் உறங்குகிறோம் அது காலத்தின் கட்டளையே
உன் அன்பு வதனத்தை மனதில் ரசித்து வாழ உம் நினைவைச்
சுமந்து வாழ பலன் தந்தீரய்யா

என்றென்றும் உம் நினைவைச் சுமந்து நிற்கும்
பெற்றவரும் உற்றவரும்

"லக்ஷ்மி",
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலை நகுலேஸ்வரம் மகா



## அருளாசிச் செய்தி



யாழ்ப்பாணம் கீரிமலை அருள்மிகு நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர சுவாமி ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றோம். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கேயிணைந்த சரித்திரப்பிரசித்தி வாய்ந்த இத்தலம் புனிதப்பிறவி எடுத்த மனித குலம் வணங்க வேண்டிய ஒன்றாகும்.

வழிபடும் அடியார்களின் துயர் நீக்கி அருள் சுரக்கும் நகுலேஸ்வரப் பெருமானின் திருவருட்கடாட்ஷம் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்று அருளாசிகள் வழங்கி வாழ்த்தி மகிழ்கிறோம். இன்று நிகழும் இந்த குட முழுக்குப் பெருஞ் சாந்தி எனப் படும் மகா கும்பாபிஷேகம் சிறப்புற எல்லாம் வல்ல நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானை உளமாரப் பிரார்த்தித்து ஆசி நல்கி நல்லைக்குருமணியின் பாதம் பணிந்து வணங்கி வாழ்த்துகின் றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

*ஸ்ரீலஸ்ரீ தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,*
*நல்லை ஆதீனம்.*

## அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி



தனக்கே உரித்தான தனிச்சிறப்புக்களுடனும், சகல வளங்களுடனும் திகழும் ஈழமணித் திருநாட்டிற்கு எழிலூட்டும் வகையில் கடல் சூழ இலங்குகின்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகுலேஸ்வரம் எனும் புண்ணிய ஷேத்திரத்தில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் நகுலேஸ்வரி சமேத நகுலேஸ்வரப் பெருமானுக்கு இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. மகாகும்பாபிஷேகம் என்று அழைக்கப்படுகின்ற பெரும் சாந்திப் பெருவிழா மக்களுக்குப் புனிதத்தை ஏற்படுத்துவதாகும். இவ் வழிபாட்டில் அனைவரும் ஈடுபட்டு மனித நேயத்தையும், மனித பண்புகளையும் வளர்த்துக் கொள்வதுடன், இன்று நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்வின் மூலம் சிவனின் அரு ளால் நாடு அமைதிபெற்று அனைத்து மக்களும் இன்புற்றிருக்க எல்லாம் வல்ல நகுலேஸ்வரப் பெருமானை வேண்டிக்கொள்கின்றேன்.

*திருமதி.இமெல்டா சுகுமார்,*
*அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்*

## பெருமகிழ்வடைகின்றோம்



ஈழத் திருநாட்டில் அமைந்துள்ள பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாக விளங்குவதும், வலி.வடக்கு பிரதேச சபையின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளதும் கீரிமலை நகுலேஸ்வரம் என்னும் திருக்கோயில் ஆகும். இவ்விடத்தில் புண்ணிய தீர்த்தமாக கீரிமலை கடல் அமைந்துள்ளது.

அனர்த்தங்களால் சோபையிழந்திருந்த நகுலேஸ்வரம் இன்று இராஜ இராஜ சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்க ளின் அயராத முயற்சியினாலும், அந்தணப் பெருமக்களின் உதவியாலும், மக்களின் சிறந்த சேவையினாலும் மிக விரைவாக புனருத் தாபனம் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடை பெறும் இத்தினத்தில் மகிழ்ச்சியடைவதுடன் கும்பாபிஷேகம் சிறப்புற பிரார்த்திக்கின்றோம்.

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க''

*திருமதி.யோ.சாசிலிங்கம்,*
*செயலாளர், வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.*

## பிரதேச செயலரின் ஆசிச் செய்தி

இலங்கையின் வடபால் அமைந்ததும் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாகவும் மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையே அமையப் பெற்றதும் திருத்தம்பலை என்ற புராதன பெயர் கொண்ட நகுலேஸ்வரர் ஆலயமானது வரலாற்றுப் பெருமை கொண்டது. நகுல முனிவரின் பிதிர் சாபம் நீங்கப் பெற்றதும் பாவம் வினையறுக்கும் கண்டகி தீர்த்தச் சிறப்பும் யாவரும் அறிந்ததே

இவ்வாறு சிறப்புப் பெற்ற இவ்வாலய மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு இறையருள் கூடியிருப்பது அனைவருக்கும் சிறப்பானதொன்றாகும். எனவே இந்தக் கும்பாபிஷேக பெரும் சாந்தி விழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக தனது சோபையையிழந்து பல வருடங்களாக கும்பாபிஷேகம் காணாதிருந் தது யாவரும் அறிந்ததே. இவ்வாலய பிரதம குருவின் அயராத முயற்சியாலும், அடியார்களின் பங்களிப்பினாலும் இன்று புதுப்பொலிவுடன் காட்சியளிப்பது எமக்கெல்லாம் மன நிறைவைத் தருகின்றது.

எனவே இக்கும் பாபிஷேக தினத்தில் எம் மக்களுக்கும் எமது நாட்டுக்கும் சாந்தியும் சமாதானமும் கிடைக்க வேண்டும் என எல்லாம் வல்ல நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரரை மனதார வணங்கி நிற்கிறேன்.

*திருமதி ஈ.அன்ரன் யோகநாயகம்*




## மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப்பெற்ற தலம்

வரலாற்றுப் பெருமைமிக்க கீரிமலை நகுலேஸ்வர சிவாலயத்தில் இன்று மகாகும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறுகிறது. இது மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப்பெற்ற திருத்தலமாகும். எங்கள் நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் அடியவர்களுக்கும் சாந்தி சமாதானம் கிடைக்க எல்லாம் வல்ல நகுலேஸ்வரப் பெருமானைப் வேண்டி கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற பிரார்த்திக்கின்றோம்.

*இ.ரா.இளங்கோவன்*
*கௌரவ செயலாளர், ஆளுநர் அலுவலகம், யாழ்ப்பாணம்.*

## சிறப்புற பிரார்த்திக்கின்றோம்



ஈழத்திருநாட்டில் வரலாற்றில் முதன்மை மிக்க தலமாக விளங்குவது கீரிமலை நகுலேஸ்வரப் பெருமான் திருக்கோவில். இத்திருக்கோவில் மேன்மைக்கு இலக்கணமாக விளங்குவது கண்டகி தீர்த்தம். பாவ வினைகளைப் போக்கி மோட்சம் நல்கும் சிவசேஷ்த்திரம் எனப் பல பண்டைய நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. இப்புண்ணிய தலத்தை போரின் அனர்த்தங்களால் இழந்து தவித்தவர்கள், சைவத்தமிழர்கள் பல வருட இடைவெளிக்குப் பின் நகுலேஸ்வரப் பெருமானின் கும்பாபிஷேகம் நடைபெறுவது சிறப்புக்குரிய விடயமாகும். இராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்களின் தளராத முயற்சியால் ஆலயம் மீளவும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இன்று ஆலய உட்பிரகாரம் முழுவதும் புதிய கோயிலாக கட்டப்பட்டுப் புதுப்பொலிவு பெற்றுள்ளது. இறை நியதிப்படி யாவும் நடந்து முடிந்தது. எல்லாம் வல்ல நகுலேஸ்வரப் பெருமானின் கும்பாபிஷேகம் சிறப்பாக நடை பெறப் பிரார்த்தித்து எனது வாழ்த்துரையைச் சமர்ப்பிக்கிறேன்.

*-செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்-*



## சிவாலய வரலாறு

யாழ்ப்பாணத்திலே மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயிலுக்கு வடமேற்கே 2 மைல் தூரத் தில் கீரிமலை உள்ளது. கீரிமலை நகுலேஸ்வரம் நகுலாம்பிகாதேவி சமேத ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி திருக்கோயில் வரலாறு மிகவும் புராதனமான அற்புதமான வரலாற்றைக் கொண்டது. இதனு டையகாலம் 4ஆம் நூற் றாண்டு என்பது ஆராய்ச்சி யாளர்களின் முடிவு ஆகும்.

நம் ஈழநாட்டுத் திருத்தலங்களில் இன்று பஞ்ச ஈஸ்வரங்களாகக் கருதப்படுவது திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னீஸ்வரம், தொண்டீஸ்வரம் ஆகும். நகுலேஸ்வர சிவாலயம் சிதைவடைந்து இருந்த காலத்தில் அதனைப் புதுப்பித்து புனருத்தாரணத் திருப்பணி வேலைகள் நடைபெற வேண்டுமென்று 1878ஆம் ஆண்டு வைகாசி மாதம் 24ஆம் திகதி சைவ மக்களின் விடி வெள்ளியாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் தமது கையொப்பத்தோடு விஞ்ஞாபனம் செய்தார்.

''நகுலேஸ்வரம் என்னும் கோயில் யாழ்ப்பாணத்திலே வட பாகத்திலே சாகர சங்கம புண்ணிய தீர்த்தக் கரையிலே இருக்கின்றது. இது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றிலும் மிக்கது. நகுலமுனி, முசுகுந்தன், அர்ச்சுனன், நளன், ஸ்ரீராமன் முதலிய பலராலும் பூசிக்கப்பட்ட தலம், இஷ்ட சித்திகளைக் கொடுக்கும் தலம். இது போர்த்துக்கேயர் காலத்திலே இடிபட்டது. இதன் பெருமை சூதசங்கிதையிலும், பஞ்ச புராணத்திலும் சுருக்கமாகவும் தட்சண கைலாச புராணத்திலே விரிவாகவும் சொல் லப்பட்டு இருக்கின்றது'' என நீர்வேலி சிவப் பிரகாச பண்டிதர் உரைசெய்த ''நகுலேஸ்வர மான்மியம்'' என்ற நூலுக்கு சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் வழங்கிய முகவுரையில் காணப்படுகின்றது.

மேலும் நகுலேஸ்வர சிவாலய வரலாறு பற்றி அறிந்த வரையில் 18 நூல்கள் காணப்படுகின்றன. இவற்றில் உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை அவர்கள் இயற்றிய ஈழமண்டல சதக நூலில் சாமகானம் பரவிய [illegible] வீணாகானபுரம் என்ற பெயருடையதாயிற்று. அன்றைய வீணாகானபுரமே இன்றைய யாழ்ப்பாணம். இவ்வாறு நகுலாசல மகிமை பேசப்படுகின்றது. ஈழமண்டல சதகம் என்கிறார் தமிழ் மூதறிஞர் கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள். விஜய மன்னன் புதுப்பித்த திருத்தலமென யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது.

ஆரம்பகாலத்தில் திருத்தம்பலேஸ்வரம் என அழைக்கப்பட்ட இத்திருக்கோயில் நகுல முனிவரின் வருகையாலும் நகுலமுனிவருக்கு கீரிமுகம் நீங்கப் பெற்றமையாலும் கீரிமலை நகுலேஸ்வரம் எனப் பெயர் பெறுகின்றது. கீரிமலையும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தது.




**Sairam Hardware & Construction**
கட்டடப்பொருள்கள் மின்சாரப் பொருள்கள் பெயின்ற் வகைகள் குளியலறைப் பொருள்கள் துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள் விற்பனையும் கட்டுமானங்களும்
கே.கே.எஸ்.வீதி தெல்லிப்பழை. தொ.பே 0777807373
அம்பனை சந்தி , பன்னாலை. தொ.பே 0772226241

**அண்ணா கோப்பி**
துரை வீதி, இணுவில்
அண்ணா நிறுவனத்தின் புதியதோர் உற்பத்தி
அண்ணா நூடில்ஸ் உடனடித் தயாரிப்பு உண்ணச் சுவையான உணவு அண்ணா உற்பத்தி விற்பனை நிலையங்கள் எல்லா இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

**North And East Engineering**
MAK Lubricants
Jaffna Road, Manipay.
Hot Line: 0777568685, 021 7200290

**பட்டாபி படமாடம்**
கண்ணாடி வகைகளின் ஏக விநியோகஸ்தர்
64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7821
இல.225, 227, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 4351

**ரமணன்**
கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
84, ஐயனார் கோயிலடி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 4923417, 021 222 9296

மின்சாரப்பொருள்கள் இலத்திரனியல் பொருள்களை நியாயமாகவும் தரமானதாகவும் பெற்றுக்கொள்ள
**சுந்தர்சன்**
யாழ்.வீதி, மானிப்பாய்.
TP: 021225 5136, Fax 021225 5136

Local Call, Net IDD Calls,
Net Browsing, Photocopy, DVD Writting,
DVD Movies,
Mobile Phone Sales& Parts.
**PSB Communication**
337 (555), K.K.S. Road, Jaffna.
T.P: 021 222 7477 Fx: 021 222 4501

**Seelan**
Aluminium Fitting
DOHA, DUBAI இல்
10 வருட அனுபவமுள்ளவர்
No: 54, K.K.S Road,
Kokuvil Junction.
Tel: 021 4902561, 077 8050918

**Arrul G**
Expre
இல.1 பிறவு
நாவலர் வீதி சந்தி,
International Courier
T.P: 021 222

**TRACTOR SPARES**
7, Kannathiddy Road, Jaffna.
T.P: 021 2225055
Importers and Dealers in Tractor Spare Parts, Specialist in Massy. Ferguson Engineers & Tipping Course Pressure Pipe fitting.
காயத்ரி மோட்டோர்ஸ்
கனகபுரம் கிளிநொச்சி

**அபிராமி கூ சென்ரர்**
155, 156, மொடேன் மாக்கற்
யாழ்ப்பாணம்.

**வஜிதா**
யமஹா சேவிஸ் ஒப்பந்தகாரரும்
மோட்டார் சைக்கிள் திருத்தகமும்
சேவிஸ் சென்ரரும்
300/1, நாவலர் வீதி,
உரிமையாளர் M.வசந்தன்
தொ.இல. 0778092741, 0215672219.


**அம்பாள்**
மரக்காலை
இல.261, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்பாள் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
0214921012, 0777111147

**வேல்முருகன்**
வணிக நிலையம்
இல.56 A(378), இல.295
(21), மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 021 222 9437

**தர்சினி**
மரத்தளபாட இயந்
தொழிற்சாலை
சகலவிதமான நுட்ப
வேலைகளுக்குச் சிறந்த
காளிகோயிலடி சங்கான
உரிமையாளர்: வ.திருநாவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கா கும்பாபிஷேகச் சிறப்புமலர்



சிவகாசி

இத்தனை மகிமை வாய்ந்த நகுலேஸ்வர திருத்தலத்தை வேத விற்பன்னர்களாகிய ஸ்ரீமத்கு.கார்த்திகேயக் குருக்களினதும் அவரது புதல்வர்களாகிய ஸ்ரீமத் கா.சபாபதிக்குருக்களின தும்ஸ்ரீமத் கா.தியாகராசக் குருக்களினதும் பெருமுயற்சிகளினால் 1878ஆம் ஆண்டு மீண்டும் இச்சிவாலயம் கட்டப்பட்டது. இன்று போற்றப்பெறும் நகுலேஸ்வர சிவாலயத்தை தமது தந்தையார் சிவஸ்ரீ தி.குமாரசாமிக் குருக்கள் 1947ஆம் ஆண்டு சிவபதம் அடைந்ததன் பின் 1948ஆம் ஆண்டு முதல் இன்றைய கும்பாபிஷேகம் வரை நகுலேஸ்வர ஆதீன மேலாளராகத் தொண்டு ஆற்றிவருகின்றார். இவர்கள் தான் நகுலேஸ்வர அனுக்கிரகம் பெற்ற இராஜராஜஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள். இங்கு சிவராத்திரி உற்சவம், வருடப்பிறப்பு உற்சவம், மாசிமகத் தீர்த்தம் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. சைவ உலகில் வாழும் அடியார்கள் தமது பிதுர் வழிபாட்டுக்கும் தீர்த்த விமோசனத்துக்கும் உகந்த கீரிமலையில் கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தம் ஆட ஆடி அமாவாசையில் எண்ணிறைந்த பல்லாயிர வர் பங்குகொண்டு நகுலேஸ்வரப் பெருமானையும் அம்மையையும் வழிபாடு இயற்றுதல் கண்கொள்ளாக் காட்சியாகும்.

எங்கள் நாட்டில் நிகழ்ந்த மிகவும் சோகம் மிகுந்த துன்பகரமான யுத்தத்தினால் பெரும் பாதிப்பையும் பெரும் அழிவையும் சந்தித்தது இந்த நகுலேஸ்வரர் சிவாலயம். இதனால் 16.10.1990 முதல் இராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் ஐயா தமது குடும்பத்துடன் திருக்கோயிலைவிட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. குருக்கள் ஐயா தமக்கு ஏற்பட்ட துன்பங்களையும் பொருள்செய்யாது சிவபெருமானைப் போல பிச்சாடன வடிவம் கொண்டு சைவமக்கள் வாழும் புலம்பெயர் நாடுகளுக்கும், பல இடங்களுக்கும் சென்று திருப்பணி நிதி சேர்த்து இன்று கும்பாபிஷேக நன்னீராட்டுப் பெருவிழாக் காணும் நகுலேஸ்வரப் பெருங்கோயிலைத் தரிசிக்க வந்திருக்கிறார்.

எனவே இத்திருக்கோயில் 1895, 1953, 1973க்குப் பின் நடைபெறும் கும்பாபிஷேகப் பெருவிழாவாகும். நகுலேஸ்வரர் திருக்கோயிலின் வரலாற்றில் சுருக்கத்தின் சுருக்கமே இங்கு தரப்பட்டுள்ளது. இன்று நம் நாட்டில் வாழ்கின்ற சைவத் தமிழ் மக்களுக்கும் ஏனைய அனைத்து மக்களுக்கும் சோக வாழ்க்கையை மறந்து சாந்தியும் சமாதானமும் ஏற்பட எல்லாம் வல்ல ஸ்ரீநகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமானை வழிபாடு செய்து மகாகும்பாபிஷேக விழாவாகிய திருக்குட நன்னீராட்டு விழாவைத் தரிசிப்போமாக.

தை மாதம் 23 ஆம் திகதி (06.02,2012) திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு புண்யாகவாசனம் தூபியாக மஹா பூர்ணாகுதி தூபி கும்பங்கள் வீதி பிரதட்சணம்
**காலை 6.21 - 7.21 இற்குள் தூபிகள் கும்பாபிஷேகம்**
தொடர்ந்து மஹாயாக மஹாபூர்ணாகுதி யாகதீபாராதனை வேத ஸ்தோத்ர உபசார சமர்ப்பணங்கள் 12 திருமுறை ஓதுதல் ஆசீர்வாதம் பிரதான கும்பங்கள் திரு வீதியுலா காலை 9.30 மணிக்கு மேல் 10.30 க்குள் சபரிவார சமேத நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரஸவாதி மஹாகும்பாபிஷேகம்



## குருக்களின் அருளாசியுரை

திருப்பெருமா மேருவரைச் சிகரமூன்றுட் சேருமிரு சிகரமாய் திகழுமீழத் துரப்பெருமா முகமெனும் யாழ்ப்பாணம் தன்னில் உத்தரத்திற் கீரிமலை உறைந்து நாளும்.

விருப்பமரு நகுலேஸ்வரரருளைக் கொண்டு மேவிய வங்கர் கோயில் விளங்குவாய்ந்த திருப்பணிகள் செய்பவரும் செய்விப்போரும் திரவியங்களீ பவரும் சிறந்து வாழீ

''நமஸ்சம்பலேச மயோபவேச நமஸ்சங்காராயச நமஸ்சிவாயச''

ஆதி அந்தம் இல்லா அரும் பெருஞ்சோதியும் பஞ்ச கிருத்தியங்களுக்கு காரணமானவரும் கண்ட தீர்த்தம், தலம், மூர்த் தியும் ஒருங்கே அமையப் பெற்றதும் புராணகாலச் சிறப்புப் பெற்றதுமான, பஞ்ச ஈஸ்வங்களில் ஒன்றானதும் கீரிமலை நகுலேஸ்வரம் என பெயர்ப் பெற்ற திவ்ய தலத்தில் நித்தியசான்னித்தியத்துடன் உறைந்திருக்கின்ற நகுலேஸ்வரப் பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும். கரவருடம் தை மாதம் 23 ஆம் நாள் (06.02.2012) திங்கட்கிழமை மிகச் சிறப்பாக ஜீர்ணோத்தாரண சுவர்ண பந்தன அஷ்ட பந்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழல் அனர்த்தம் காரணமாக கோயில் முற்றாக சேதமடைந்தது. நகுலேஸ்வரப் பெருமானின் திருவருளாலும் இலங்கை நாட்டிலுள்ள சைவ அன்பர்கள், புலம் பெயர்ந்து வாழும் சைவ அன்பர்கள் அனைவரினதும் பேராதரவோடும் பெருமுயற்ச்சியாலும் இவ்வாலயமானது அதிசிறந்த சிற்பாகம முறைப்படி புதிய மண்டபங்கள் அமைத்து வர்ண வேலைகளுடன் கலையம்சத்துடன் கம்பீரமாக காட்சியளிக்கின்றது. புதிதாக 11 தள ராஜகோபுரம் அமைப்பதற்கு பெருஞ்செலவில் வியாள வரி மட்டம் வரை தற்சமயம் கட்டடப்பட்டுள்ளது. கும்பாபிஷேக தினத்தன்று முதலாம் தளத்துக்கு சுபவேளையில் கால்கோள் விழா சிறப்பாக நடைபெறவுள்ளது. எல்லா சைவ அன்பர்களின் பேருதவியோடு மிகவிரைவில் ராஜகோபுரம் அமைய இறை திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

வடமொழி, தக்ஷிண கைலாச மான்மியம், மத்ஸியபுராணம், ராமாயணம், மகாபாரதம், மற்றும் பல தமிழ் நூல்களும் இத்தலத்தின் வரலாற்றுச் சிறப்பை எடுத்துக் கூறுகின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆலயத்தில் 29.01.2012 ஞாயிறு முதல் விநாயக வழிபாட்டுடன் கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகி 06.02.2012 திங்கட்கிழமை காலை 9.30 முதல் 10.30 மணிக்குள் மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமானின் இவ்வாலயத்தில் இரவு பகல் தொண்டாற்றிய தொண்டர்களுக்கும், எமது நாட்டு மக்களுக்கும், புலம் பெயர் வாழ் மக்களுக்கும், அரசாங்க துறையினருக்கும், உலக மக்களுக்கும் பேரருள் கிடைத்து பேரானந்த பெருவாழ்வு வாழ எனது அருளாசியை வழங்குகின்றேன்.

'சர்வே ஜனா சுகினோ பவந்து'

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

*குறிப்பு: பக்தர்கள் கண்டகி தீர்த்தத்திலிருந்து எடுத்து வரப்பட்ட தீர்த்தத்தை தங்கள் திருக்கரங்களால் சிவராத்திரி தினத்தன்று சகஸ்ர லிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்வித்து தங்கள் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.*

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். 07.02.2012 முதல் 21.02.2012 வரை எம்பெருமானுக்கு அலங்கார உற்சவமும் வீதியுலாவும் நடைபெறும். மண்டலாபிஷேக தினங்களில் நடைபெறும் உபயங்களில் பங்குபற்றி பேராதரவு நல்க வேண்டும் என்று அன்புடன் வேண்டுகின்றேன்.

நகுலேஸ்வரப் பெருமானுக்குப் பரிவார மூர்த்திகட்கும்,

திருப்பெறுமா மேருவரைச் சிகரமூன்றுட் சேருமிரு சிகரமாய் திகழுமீழத்

துருப்பெறுமா முகமெமும் யாழ்ப்பாணம் தன்னில் உத்தரத்திற் கீரிமலை யுறைந்து நாளும்

விருப்பமரு நகுலேஸ்ரருளே கொண்டு மேவியவங்கர் கோயில் விளங்கு வாய்ந்த

திருப்பணிகள் செய்பவரும் செய்விப்போரும் திருவியங் களீபவரம் சிறந்து வாழி!!!

*ராஜராஜ ஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்*





## பஞ்ச ஈச்சரங்களில் ஒன்று

அலைகடல் அருகமர்ந்த கீரிமலையிலே எழுந்தருளி அருள்மாரி பொழியும் நகுலேஸ்வரப் பெருமான் ஆலயத்தில் நீண்டகால இடைவெளியின் பின்னர் இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பேருவகையடைகின்றேன்.

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாக விளங்கும் திருத்தலத்தில் வீற்றிருந்து அடியவர்களுக்கெல்லாம் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் இறைவனுக்கும், பரிவாரத் தெய்வங்களுக்கும் இன்று நடைபெறும் மகாகும்பாபிஷேகம் சிறந்த முறையில் நிறைவேறவும், மக்களும் மண்ணும் செழித்தோங்கவும் நகுலேஸ்வரப் பெருமானின் பாதாரவிந்தங்களை வணங்கி பிரார்த்திக்கின்றோம்.

*சோ.சுகிர்தன்,*
*தலைவர், வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.*

## பெருவிழாவைத் தரிசிப்போம்

வரலாற்றுச் சிறப்பும், புராதன வழிபாட்டுப் பெருமையும் தன்னகத்தே கொண்ட திருத்தலம் கீரிமலை நகுலேஸ்வரர் திருத்தலமாகும். இங்கு தம் மூதாதையர்களுக்கு பிதிர்க் கடன் ஆற்ற ஆண்டுதோறும் ஆடிஅமாவாசை புண்ணிய நாளில் கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தம் ஆடவரும் அடியார் கூட்டம் எண் ணில் அடங்காதவை. இங்குவரும் அடியார்களுக்கு எல்லாம் முக்கிய ஷேத்திரமாக விளங்குவது நகுலேஸ்வரர் சிவாலயமாகும்.

1990 ஆம் ஆண்டு நாட்டு யுத்த நெருக்கடியால் பெரும் அழிவைக்கண்டு மூடிக்கிடந்த நகுலேஸ்வர சிவாலயத்தை இன்று புனரமைப்பு செய்து பல்வேறு திருப்பணிகளைச் செய்து அடியார்களுக்கு மகாகும்பாபிஷேக விழாவைத் தரிசிக்க வைத்துள்ளார் குருக்கள் ஐயா. நகுலேஸ்வர அனுக்கிரகம் பெற்று முப்போதும் திருமேனி திண்டி நித்திய நைமித்திய விழாக்கள் நடத்த வழி சமைத்த குருக்கள் ஐயாவின் திருத் தொண்டு வரலாற்றுப் பதிவகும். மாவிட்டபுரம், கீரிமலை ஆகியன புராதன வரலாற்றுத் தொடர்பு கொண்ட துர்க்கை அம்மன் கோவிலின் முன்னைய தலைவர் சிவத்தமிழ்செல்வி அம்மாவின் முக்கிய வழிபாட்டுத்தலங்களாகும். ''சிவாலய வழிபாடு வாழ்க்கையின் சீவநாடி'' என்பார் பண்டிதமணி அவர்கள். கீரிமலைக்கு நகுல முனிவரின் வருகையால் ''நகுலேஸ்வரம்'' ''நகுலாசலம்'' எனப் பெயர் பெறுகின்றது இத்தலம். இக்கோவிலின் ஸ்ரீநகுலாம் பிகை சமேத ஸ்ரீநகுலேஸ்வரப் பெருமானின் கண்கள் திறந்து மகா கும்பாபிஷேகப் பெருவிழாவில் தரிசிக்கும் அடியவர்களுக்கு திருவருள் மழை பொழிய வேண்டும் என்று பிரார்த்திப்போமாக.

*கா.சிவபாலன்*




TV, DVD Player, Amplifier, Speaker Box மற்றும் சகலவிதமான இலத்திரனியல்பொருள்களும் உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு
JAYAM ELECTRONICS
339, K.K.S.Road, Jaffna. T.P: 0774041910

சரவணா ரெக்ஸ்
கிளை I: இல.526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி), யாழ்ப்பாணம். TP :021 222 1723.
கிளை II: இல.770, 772, கே.கே.எஸ்.வீதி, (தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம். TP: 021 222 0421
கிளை III: இல.171, பிரதான வீதி, நெல்லியடி. TP: 021 226 2992

யாழகம்
568, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5563
யாழ்.என்ரப்பிறைஸ்
40, டிப்போ வீதி, கனகபுரம், கிளிநொச்சி.

சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 6972, Fax : 021 222 8869
சாரங்கா நாணயமாற்று சேவை
151/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6972

Arrul Global Express
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
International Courier Cargo Service
T.P: 021 222 6113

புடைவை அழகுசாதனப் பொருள் விற்பனையாளர்
கணேசன் சென்ரர்
கே.கே.எஸ்.வீதி இணுவில்.
021 222 5708

வர்ண உலகின் புரட்சி
கந்தவேலன் ரேடர்ஸ்
இல.110 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2822

க.கு.கந்தையாபிள்ளை
இல.318, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

லக்சுமி பான்சி
234, கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம்.
தொ.பே 0779582566

ப.நோ.கூ.சங்கம்
தெல்லிப்பழை
கே.கே.எஸ்.வீதி
தெல்லிப்பழை
021 321 2341

தர்சினி
த்தளபாட இயந்திர தொழிற்சாலை
கலவிதமான நுட்ப களுக்குச் சிறந்த இடம்
கோயிலடி சங்கானை.
யாளர்: வ.திருநாவுக்கரசு

இளவரசி சேலைச் சோலை
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்
52, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3096, 021 222 7286
57/47 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

செந்தூரன் மல்ரி சொப்
கே.கே.எஸ்.வீதி மாவிட்டபுரம்.
தொ.பே: 0774935243

கந்தன் ஸ்ரோர்ஸ்
மெயின்வீதி, பண்டத்தரிப்பு.
021 300 2770
கே.கே.எஸ்.வீதி, மாவிட்டபுரம்.
0772658030

புதிய வினோ நகைமாடம்
பிரதான வீதி, சங்கானை.
(செலான் வங்கிக்கு அருகில்)
0215672588, 0776002588.
கிளை நிறுவனம்:
மொபைல் பிளாஷா
பிரதான வீதி, சங்கானை.
(HNB Bank அருகில்)
தொ.பே:0779352902.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

## அமரர்
## திருமதி சந்திரா சிவகுருநாதன்




மலராக... 21-12-1948

சருகாக... 19-01-2011

திதி:06.02.2012

ஆண்டொன்று போனதம்மா
அன்னையுனை நாம் பிரிந்து
மாண்டழிந்து போனாலும்
மறக்க மாட்டோம் எம் அன்னையை
வெயிலுக்கு நிழலானாய்
மழைக்கு குடையானாய்
தாகத்திற்கு நீரானாய்
சோகத்திற்கு மடியானாய்–அம்மா
சோகம் தாழாமல் தவிக்கின்றோம்
எங்கே? உன்தாய்மடியம்மா
ஆண்டு ஒன்று போனாலும்
ஆறவில்லை எம் கவலை
எம் கவலை சொல்லியழ
புவிதன்னில் யாருமில்லை
ஈசனவன் காலடியில் என்றென்றும்
வாழ்ந்திடம்மா உன் நேசம் மறவாது
நிழலாய் நாம் இருப்போம்.



"குருஸ்தான்"
நுணாவில் மேற்கு
பருத்தித்துறை வீதி
சாவகச்சேரி

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

137324

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா.....

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்வதாக அறிய முடிகின்றது.

சபையின் அதிக பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும் வகையில் கிளின்ரன் கிளப்பியுள்ள விடயங்கள் உட்பட முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக செயற்படுவதற்கு இலங்கை அரசையே கட்டாயப்படுத்தும் வகையில் தீர்மானம் வடிவமைக்கப்படவிருக்கின்றது. எதுவானாலும் இதில் அதி முக்கிய விடயம் என்னவென்றால், தீர்மானத்தில் அரசு விரிவான செயற் திட்டம் ஒன்றை அறிவிப்பதற்கான காலக்கெடு அல்லது கிளப்பப்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உறுதியான வாக்குறுதியை வழங்க வேண்டும் என்பதாகும்.

இந்தக் காலக்கெடுவை இனிவரும் காலங்களில் நடைபெறும் பேரவை கூட்டங்களில் கண்காணிக்கப்படும். இம் மாதிரி நிலையொன்று வருமானால் இந்தியாவும் கூட தீர்மானத்தை ஆதரிக்கக் கூடிய சூழ்நிலை இருப்பதாக மேற்கத்திய ராஜதந்திர வட்டாரங்களில் கருதப்படுகின்றது. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாகவும், நல்லிணக்கத்துக்கான பொறிமுறை தொடர்பாகவும் இந்தியாவின் நிலைப்பாடு ஏற்கனவே வெளிப்படையானது. அத்துடன் அமெரிக்காவும் ஆதரித்துள்ளது. அந்த வகையிலேயே இவ்வாறு கருதப்படுகிறது. ஆனாலும் அமெரிக்காவின் மிகப் பிந்திய அணு குமுறை தொடர்பாக இந்தியாவின் நிலை இன்னமும் தெரியவரவில்லை.

இம்மாத இறுதியில் ஜெனிவாவில் ஆரம்பமாகவிருக்கும் மனித உரிமைப் பேரவையில் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் இலங்கையின் குழு கலந்து கொள்ளும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவொன்றும் ஆச்சரியமளிக்கும் விதத்தில் அங்கு செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதிகாரபூர்வ அந்தஸ்து இல்லாவிட்டாலும் மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகளின் பேராளர்களை இவர்கள் அங்குவரும் ஏனைய தமிழ் குழுக்களின் உறுப்பினர்களோடு சேர்த்து சந்தித்து உரையாடக் கூடும் என்று எதிர்பார்க்கலாம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அமெரிக்க உதவி வெளியுறவுச் செயலாளர் றொபேட் பிளேக்கை கடந்த வியாழனன்று சந்தித்துப் பேசினார். இலங்கை அரசுக்கு பொறுப்புக் கூறும் பிரச்சினை தொடர்பாக அழுத்தம் கொடுக்கச் செய்வது பற்றியதாக இது அமைந்திருந்தது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் அரசப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இரகசியப் பேச்சுக்கள் தொடர்கின்றன. இருதரப்புக்குமிடையிலான பேச்சுக்கள் தடைப்பட்டிருப்பதை முடிவுக்கு கொண்டு வருவதற்காக இந்த முயற்சிகள் நடைபெறுகின்றன. கூட்டமைப்பின் மனதை மாற்றம் செய்யலாம் என்று அரசு கருதுகின்றது. கூட்டமைப்பு நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கான உறுப்பினர்களை அவர்கள் நியமிக்கும் பட்சத்தில் இருதரப்புப் பேச்சுக்களைத் தொடரலாம் என்று அரசு கருதுகின் றது. இதில் ஏதும் முடிவு ஏற்படுமானால் கூட்டமைப்பு தமது உறுப்பினர்களை அறிவிக்கும் வரை மீண்டும் பேச்சை ஆரம்பிப்பதில்லை என்று அமைச்சரவை எடுத்துள்ளமுடிவை மாற்ற வேண்டியிருக்கும்.

# மஹிந்தவின்....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"ஆம்!" என்றதும் திட்ட ஆரம்பித்தார். பின்னர் ஒருபோதும் எமக்கு 'பக்ஸ்' வரவேயில்லை.

### பின்னணி யார்?

'பக்ஸ்' எண்ணை வைத்து இது உதயன் பத்திரிகை என்பதையும் இவர்களுக்கு 'பக்ஸ்' அனுப்புவது ஆபத்தானது என்பதையும் அவ்வளவு விரைவாக அந்த நிறுவனம் எப்படி அறிந்து கொண்டது என்பதை கிளறத் தொடங்கினோம். அப்போது மேலும் சில விவரங்கள் கிடைத்தன.

வடமாகாண விவசாயத் திணைக்களத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கும் இந்த விவகாரங்களுக்கும் இடையிலான தொடர்பு அப்போதான் அம்பலமானது.

அவர், அனுராதபுரத்தில் நீண்டகாலம் வாழ்ந்த ஒருவர். நன்றாகச் சிங்களம் பேசக்கூடியவர். எழுதுவினைஞராக உள்ளார்.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் இருந்து அவருக்கு வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்களின் அடிப்படையிலேயே இந்த ஒப்பந்த விவகாரம் நகர்த்தப்பட்டுள்ளது.

வடமகாண ஆளுநர் அலுவலகத்தில் உள்ள சிங்களம் மட்டும் பேசக்கூடிய, சிவில் சேவையைச் சேராத அதிகாரி ஒருவரே இந்த எழுதுவினைஞரை நெறிப்படுத்துகிறார்.

இவர் மூலமாக அனுப்பப்பட்ட கேள்வி கோரல்களில் எஸ்.என்.கே. கோல்டிங்ஸ் நிறுவனத்தின் கோரலை ஏற்குமாறு உயரதிகாரிகளுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.

ஆளுநர் அலுவலகத்தில் இருந்து வந்த நெறிப்படுத்தல் என்பதால் அதனைச் சிரமேற்கொண்டு அதிகாரிகளும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். இப்போது கேள்வி ஏதும் வந்து விடக்கூடாது என்பதற்காக அலுவலகக் கோவைக்கானபணிகள் வழக்கமான முறைமைக்குத் தலைகீழாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் உதயன் உறுதிப்படுத்தியிருக்கிறது.

ஆளுநர் அலுவலகத்தில் இருந்து ஒரு இளநிலை அலுவலர் மூலம் நெறிப்படுத்தல்கள் வழங்கப்படுவது குறித்து அமைச்சில் யாரும் கேள்வி கேட்பதில்லை. கேட்டு வேலைக்கு ஏன் வேட்டு வைக்க வேண்டும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

அவர்கள் என்னவாவது செய்து விட்டுப் போகட்டும். அது பற்றிக் கவலையில்லை. அது அவர்களின் பதவி நிலைகள் பற்றிய பிரச்சினை. எங்களின் கேள்விகள் எல்லாம் அமைச்சுக்கள் ஊடாக மக்களின் அபிவிருத்திக்கு என ஒதுக்கப்படும் நிதியை இப்படித் தில்லுமுல்லு செய்து கட்சி அரசியலுக்குப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தாமல் இந்த அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான்? அப்படியானால் இந்த ஊழலில் இவர்களுக்கும் தொடர்பு இருக்கிறது என்பதுதானே அர்த்தம்?

### நடவடிக்கை எடுப்பாரா ஜனாதிபதி


இப்படிப்பட்ட ஒரு சின்ன 'கட்டவுட்' வைக்கும் திட்டத்தின் மூலமே மக்கள் பணத்தில் சுமார் 30 லட்சம் ரூபா தில்லுமுல்லுகள் மூலம் வெளியேற்றப்பட்டால் இங்கு மக்களுக்கு என்ன போய்ச் சேரும்?

இலங்கை நாட்டின் ஜனாதிபதியின் வருகையை ஒட்டியே இத்தனை தில்லுமுல்லுகள் என்றால் பெரிய திட்டங்களில் பெருமளவு நிதிகையாளப்படும் திட்டங்களில் எவ்வளவு தில்லுமுல்லுகள், மோசடிகள், ஊழல்கள் நடக்கக்கூடும்?

இதைத் தடுக்க இன்று யாழ்ப்பாணம் வரும் மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுப்பாரா? இந்தக் 'கட்டவுட்' விடயத்தில் உண்மையில் நடந்தது என்ன என்பதை மக்கள் அறிய விசாரணைக் குழு ஒன்றை அவர் நியமிப்பாரா? இப்படி மக்கள் பணத்தைச் சூறையாடும் பெருச்சாளிகளை பொதுத் துறை நிறுவனங்களில் இருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுப்பாரா? அத்தகைய பெருச்சாளிகள் தன்னுடன் கூடவே இருக்கவேண்டும் என்று விடாப்பிடியாக நிற்கும் அரசின் உயர் மட்டங்களின் நோக்கங்கள் குறித்து ஆராய்வாரா? இந்தத் தில்லுமுல்லில் தொடர்புபட்டிருந்தவர்கள் இதன் மூலம் எவ்வளவு லாபமடைந்தார்கள் என்பது வெளிப்படுத்தப்படுமா?

யாழ்ப்பாண மக்கள் விடையறிய ஆவலாய் உள்ள கேள்விகள் இவை. பொறுத்திருந்து பார்க்கலாம். அதற்கிடையில் ஏனைய மோசடிகள் பற்றியும் தெரியப்படுத்தலாம்.


## தைப்பூச உலகப் பெருமஞ்சத் திருவிழா



அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயிலில் நாளை செவ்வாய்க்கிழமை மஞ்சத் திருவிழா நடைபெறவுள்ளது.

★காலை பூசை, 10.30 மணிக்கு 1008 சங்காபிஷேகம் எம்பெருமானுக்கு நடைபெறவுள்ளது.
★மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 7 மணிக்கு முருகப் பெருமான் மஞ்சத்தில் வீதியுலா வரும் காட்சியும்நடைபெறவுள்ளது.
★முருகன் அடியவர்கள் அனைவரும் வாரீர்.

கஜானன் திருமண கார் சேவை,
கஜானன் பான்சி கவுஸ்
தொ.பே:
ஸ்ரேசன் றோட், கோண்டாவில் 0778559833 0213006410

அனுசரணை

லக்சுமி இரும்பகம்
6B உப்புமடம் சந்தி,
K.K.S.வீதி
கோண்டாவில்.

சிவம் கிறேசர்
மட்டுவில் தெற்கு.
அனைத்து விதமான கட்டடங்களுக்கும் சல்லிக் கற்களை பெற்றுக்கொள்ளலாம்.

## ஆங்கில வகுப்புகள்

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இலகுவாக பேச, வாசிக்க வெளிநாட்டில் கற்பித்த அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.
[தனிப்பட்ட அனுமதிகளும் வழங்கப்படும்] NORTH LEAD
328 A, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

## வேலை ஆள்கள் தேவை

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் தேனீர்ச்சாலைக்கு
★சமையலாளர்
★றொட்டி மேக்கர்
★டீ மேக்கர்
★சப்பிளையர்
உடன் தேவை
தொடர்பு:- 0774682834, 0783967749, 0775836055

## மணமகள் தேவை

யாழ். உயர் கௌரவ குடும்பம், கனடா (citizen) வதியுரிமையுள்ள 49 வயது நிரம் பிய, 5'11'' உயரமும் இளமைத் தோற்றமுடைய ரேவதி 2ம் பாதம், B.sc(MATH), B.sc(Electrical ENGINEERIN) பட்டம் கனடாவில் பெற்று வேலை செய்யும் தற்போது இலங்கை வந்துள்ள மணமகனுக்கு படித்த குடும்பபாங்கான பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு:- 0775671922
Email:- postbox41@hotmail.com

## தைப்பூசத்தில் புதிய யோகா வகுப்பு ஆரம்பம்

ஆசிரியர்-ஸ்ரீகுகன்
நேரம்-07.02.2012
பகல் 11மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
தொடர்பு:- ஸ்ரீகுகன்
0776980573

## கிளி/முருகானந்தா கல்லூரி பழைய மாணவர் சங்கம் பொதுக்கூட்டம்


நாளை (07.02.2012) செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 4.00 மணி
இடம் :- கல்லூரி பிரதான மண்டபம்.
இக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம் பெறவுள்ளதுடன் கல்லூரியின் அபிவிருத்தி தொடர்பான பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.
அதிபர்
கிளி/முருகானந்தா கல்லூரி
(C/8818)(6-7-8)

## வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை


10 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் UK 625/= Germany 710/= France 765/=
மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது.
கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம்.
குறிப்பு :- 25Kg - 100 Kg வரையான பொதிகளுக்கு 550/= மட்டுமே
சகல நாடுகளிற்குமான [illegible] பெற்றுக்கொள்ளலாம்.
Arrul Global Express
International Courier & Cargo Service
T.P : 021 222 6113
இல.1 பிறவுண் வீதி, நாவலர் [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் பிரம்மஸ்ரீ
**கனகசபாபதிக் குருக்கள்**
**இரகுநாதக் குருக்கள்**
(விசுவமடு அதிசய விநாயகர் ஆலயப் பிரதம குரு)



அமரர் பிரம்மஸ்ரீ
**இரகுநாதக் குருக்கள்**
**கேசவசர்மன்**
(முழங்காவில் கிருஷ்ணர் ஆலயப் பிரதமகுரு)

திதி 06.02.2012 திங்கட்கிழமை

மூழ்கி நாமெடுத்த முத்தொன்று
முடிந்ததென்று நம்பவில்லை
மூன்று ஆண்டென்ன முப்பது ஆனாலும்
முடியுமா உமை மறக்க
மூச்சோடு கலந்த உம் நினைவு - எம்
மூச்சு உள்ளவரை நிலைக்கும்

ஓம் சாந்தி!!!

முரசுமோட்டை,
பரந்தன்.

(11020) (45-6-7)

**குடும்பத்தினர்.**

# சிரார்த்த தினம்

வடமராட்சி,பெப்.6

இலங்கையின்புகழ் பூத்த சட்ட மேதையும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நிறுவு நருமான அமரர் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் 35 ஆவது சிரார்த்த தினம் எதிர்வரும் 9 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றையதினம் காலை 9 மணிக்கு யாழ்.நகரில் உள்ள தமிழ்க் காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் கட்சித் தலைவர் ஆர். ஈ. ஆனந்தராஜா தலைமையில் நடைபெறும் சிரார்த்த நிகழ்வில் அண்ணாரின் உருவப் படத்துக்கு மலரஞ்சலி செலுத்தப் படுவதுடன் நினைவுரைகளும் இடம் பெறும்.

நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள். (ம-8)

**Dr.Pimple**
TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic
V Care
முகப்பருக்களுக்கு
**International Skin Peeling**
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு



எதிர்வரும் 4,5,6 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடைபெறவுள்ளது.
வவுனியாவில்12,13ஆம் திகதியில்.... முன்பதிவுகளுக்கு - **077-5426692**

V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28 ★ 09 ★ 1964



மறைவு
31 ★ 01 ★ 2007

## இரத்தினம் சிறிதரன்

திதி : - சதுர்த்தி

எங்கள் அன்பின் அப்பாவே!
ஆண்டுகள் ஐந்து கடந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது

நீதிராஜா வீதி
கொக்குவில் மேற்கு.

மனைவி,
பிள்ளைகள்.

(14110 )(6-7-8)

# மரண அறிவித்தல்



## சுப்பையா இராமச்சந்திரன்

(அப்புச்சி பத்தர்)

சுழிபுரம், தொல்புரம் வழக்கம்பரையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இராமச்சந்திரன் (அப்புச்சி பத்தர்) (04.02.2012) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் இ. பாக்கியலக்சுமியின் அன்புக் கணவரும், ஜீவராஜன், அஜந்தன், நீலேந்திரன், திருமதி நளாயினி ரஜன், திருமதி தமிழினி அகிலன், ஞானேந்திரன் ஆகியோரின் அன்புத்தந்தையு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2012) திங்கட்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**இ.ஜீவராஜன் [மகன்]**

**இல. 09 கலைவாணி,**
**மில் வீதி. பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு.**

# உதவிப் பணம் குறித்த மீளாய்வு

நாவற்குழி,பெப்.6

வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் மீளாய்வு செய்யப் பட்டு வருகின்றனர்.

சமூக சேவைகள் அதிகாரி திருமதி விஜயகுமாரி முகுந்தன் கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் சென்று மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

(ம-12)

**காணி விற்பனைக்கு**

உரும்பிராய் ஞானவைரவர் கோயில் வீதியில் கிராம சேவையாளர் அலுவலகத்துக்கு அண்மையில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 021 2230683
077 5082594

(13876 )(6-7-8)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆங்கிலத்தில் எழுத வாசிக்க, கதைக்கப்பயில
By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, சண்டிலிப்பாய்
இந்துக்கல்லூரி முன்பாக, யாழ்ப்பாணம்
பன்றிக்கோட்டுப்பிள்ளையார் கோயிலடி.
Tel - 077 6751649

(14134)(6-7-8)

**வயல் காணிவிற்பனைக்கு**

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் இருந்து 3.5 K.M. தூரத்தில் 5ஆம் வாய்க்காலில் அமைந்துள்ள இரு போகம் நெற் பயிர் செய்யக்கூடிய நீரப்பாசன வசதிகள் கொண்ட 21 ஏக்கர் வயல் காணி விற்பனைக்குண்டு.

(அதிக விலை கோரலுக்கு மட்டும்)

தொடர்பு : 077 2881855
021 2285317 ப. சிவசுப்பிரமணியம்
காணி உரிமையாளர்

( தரகர் தேவையில்லை)

(14121)(6-7-8)

# உரிமையுடன் அப்பாவிற்கு கண்ணீர் அஞ்சலி



அமரர் **பொன்னையா தங்கராஜா**

எம் அருமை அப்பாவே....
அழகிய உருவம், அமைதியான சிரிப்பு,
கள்ளம் கபடமற்ற உள்ளம் கொண்ட
எங்கள் அப்பாவே....
விதி என்னும் வலையில் அகப்பட்ட
பாவிகள்தாமப்பா...
எம் நிலையைப் புரிந்து கொள்ள
யாருளரோ...?
அப்பாச் செல்லமே...
உங்கள் மீது ஆணை
நீங்கள் வாழ்ந்த பூமிதனில்
முத்திரை பதிக்காது
எம் உயிர் மூச்சு ஓயாது

மருதகுலம் வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(11591)(6,8,45)

அன்புடன் பிள்ளைகள்,
தயாளநந்தி, தயாதேவி,
தயாள ரதி.

**சுஜித் என்றபிறைஸஸ்**
**டச்சு வீதி, சாவகச்சேரி**


எமது நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

க.பொ.த.சா/த. வரை கற்ற இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக்கலாம். சிங்களம் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. உணவு, தங்குமிட வசதி ஆண்களுக்கு வழங்கப்படும். சம்பளம் ரூபா 20,000/= தொடக்கம் ரூபா 25,000/= வரை வழங்கப் படும். வவுனியா, திருகோணமலை ஆகிய கிளைகளில் கடமையாற்ற விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: 021 227 0586

# மரண அறிவித்தல்

## ஆனந்தர் கோபாலகிருஷ்ணன்



சங்கானையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி மாரியம்மன் கோயிடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தர் கோபாலகிருஷ்ணன் 03.02.2012 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆனந்தர்- நீலாயதாட்சி தம்பதியரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - பட்டம்மாள் தம்பதியரின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் தயானி (ராதை- கனடா), கஜேந்திரன் (கஜன்-கனடா), மயூரன் (வைத்தியர்- போதனா வைத்தியசாலை - அனுராதபுரம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராஜன் (கனடா), சுமதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் கஸ்தூரி, காயத்திரி, மாதங்கி, ரிஷி ஆகியோரின் பாசமிகு பேரனும் சத்தியவதி, திலகவதி, நாகலட்சுமி, விக்கினேஸ்வரன், ஞானேஸ்வரி, குமுதினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கதிரவேல் மற்றும் அருளானந்தர், பாலசிங்கம் (ஜேர்மனி), இலட்சுமி, காலஞ்சென்ற சபாநாயகம் மற்றும் மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2012) திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**15/29, மாரியம்மன் வீதி,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்**

(14105)(45-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநெல்வேலி

# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்

## தேவஸ்தானம்

# மஹா கும்பாபிஷேகம்

## சிறப்புமலர் – 06.02.2012

கரவருடம் தை மாதம் வளர்பிறைச் சதுர்த்தியும் உத்தாராயணமும், புனர்பூச நட்சத்திரமும் அமிர்தசித்தயோகமும் சேர்ந்த 23 ஆம் நாள் (06.02.2012) திங்கட்கிழமை காலை 9.15 - 10 மணிவரையுள்ள மங்கள தாரகன் காலவேளையில் மீன லக்கின சுபவேளையில் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் அம்பாளின் அருட்கடாட்சத்தினால் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்.

### அருளாசிச் செய்தி



யாழ்ப்பாணம் திருநெல்வேலி அருள்மிகு பத்திராகாளி அம்பாள் தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

வழிபடும் அடியார்களின் துயர் நீக்கி அருள் அம்பாளின் திருவருட்கடாட்ஷம் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்று அருளாசிகள் வழங்கி வாழ்த்தி மகிழ்கிறோம். இன்று நிகழும் இந்த குடமுழுக்குப் பெருஞ் சாந்தி எனப் படும் மகா கும்பாபிஷேகம் சிறப்புற எல்லாம் வல்ல பத்திரகாளி அம்பாளை உளமாரப் பிரார்த்தித்து ஆசி நல்கி நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து வணங்கி வாழ்த்துகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

*ஸ்ரீலஸ்ரீ தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,*
*நல்லை ஆதீனம்.*

### பத்தர்கள் பாவம் தீர்ப்பாள் பத்திரகாளி

யாழ்பாடி புகழ்பெற்ற திருநாடு - மூன்று
ஆழ்கடலால் சூழ்ந்திருக்கும் தமிழ்நாடு
இங்கு திருநெல்வேலியெனும் பொற்றூராம் - அங்கு
நல்லாட்சி புரிகின்றாள் பத்திரகாளி.

வளைந்தோடும் சிற்றுளிதனிலே நுளைந்தாடும் சிற்பவர் கரமால்
விளைந்திட்ட சித்திரத் தேரில் சிறந்திட்ட சிற்பவள் இவளாம்
பவனித்து பக்தர்கள் பாவம் பறந்தோடும் அவர்கள் விட்டு
அவனிந்த அவனிதனிலே அவை பாதகமும் பாதமும் உளதோ.

*சங்கர், ஆலய பரிபாலன சபை.*



### பிரதமகுருவின் ஆசிச்செய்தி



விண்ணூறும் மண்ணூறும் விளங்குறக்காட்டி
அண்ணூறும் பின்னூறும் அமைவுறக் கூட்டி
அன்னையின் கும்பாபிஷேகத் திருநாளில்
அனைவரின் வாழ்வும் ஒளிபெற போற்றி.

யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் பஞ்ச கிருத்திய காரணியான பராபரை பத்திரகாளி என்ற திருமேனிதாங்கி வேண்டு வார்க்கு வேண்டுவனவெல்லாம் ஈந்து அருள் பாலிக்கின்றாள்.

இன்று திங்கட்கிழமை காலை 9.15 - 10 மணிவரையுள்ள மங்கள தாரகன் காலவேளையில் மீன லக்கின சுபவேளையில் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் அம்பாளின் அருட்கடாட்சத்தினால் அன்னையின் மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. எனவே மகாதிரிபுர சுந்தரியான பத்திரேஸ்வரி திருத்தேரேறி வரும் திருக்காட்சிகாண அடியவர்களுக்கு அன்னை இன்னருள் நல்குவதாகுக


*மகாகணபதீஸ்வரக் குருக்கள்*

### செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி



நீதி நெறிமுறை காக்கக் கடல் கடந்த சுவாமி ஞானப்பிரகாசர் பிறந்த புண்ணிய பூமி திருநெல்வேலி. சைவப் பாரம்பரியம் நிறைந்த திருப்பதி. இத்திருப்பதியில் கலைஞர்கள் நிறைந்த சோலைகளில் குடிகொண்டு அருள் புரியும் மாகாளி அம்பாள் திருக்கோயில் மகாகும்பாபி சேகம் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். இத்திருக்கோயில் முற்று முழுதாகப் புதிய பாணியில் உருவாக்கப் பட்டுள்ளது. சிற்பம் நிறைந்த தெய்வீகத் திருத்தலமா உருவாக்கப்பட்டுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும். பல திருக்கோவில்களின் திருத்தேர்களையும் அருள்வடிவங்களையும் உருவாக்கிய கலைஞர்கள் தம் குலதெய்வத்தின் திருவறை சிற்பசேத்திரமாக மாற்றியிருப்பது தனித்துவ மிக்க விடயமாகும். இத் திருக்கோயில் கலைக் கோயிலாக எம் மண்ணில் சிறக்கப் பிரார்த்தித்து, ஆலயத் திருப்பணிக் காக உழைத்த அன்பர்கள் அனை வருக்கும் இனிய வாழ்த்துக்களைக் கூறி அமைகிறேன்.

**ஆறு. திருமுருகன்**
*தலைவர்- ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பளை*







## ஆறுமுகம்
### சிற்பாலயம்



காளிகோயிலடி,
திருநெல்வேலி மேற்கு,
திருநெல்வேலி.
021 222 2892

## காங்கேயன்
### கலைக்கூடம்
*Kangeyan Kalaikoodam*



காளிகோயிலடி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 0051


அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: ஶ.சங்கர்

## தனுஷா
### சிற்பாலயம்

அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0214900013, 0776047287

உரிமையாளர்:
பரஞ்சோதி சதீஸ்வரன் ஆச்சாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆலய வரலாறு

எடுத்த காரியம் யாவினும் வெற்றி
எங்கு நோக்கினும் வெற்றிமற் றாங்கே
விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி
வேண்டி னேனுக் கருளினள் காளி
தடுத்து நிற்பது தெய்வத மேனும்
சாகு மானுட மாயினும் அஃதைப்
படுத்து மாய்ப்பாள் அருட் பெருங்காளி
பாரில் வெற்றி எனக்குறு மாறே

எனச் சக்தி உபாசகனாக மகாகவி சுப்பரமணிய பாரதி பணித்தவாறு நீர்வளமும், நில வளமும் அறிஞர் தம் ஞானவளமும் அடியார் தம் பக்தி வளமும் மிக்க யாழ்ப்பாணம், திருநெல்வேலிப் பதியில் கோயில் கொண்டருளி இருக்கும் உலக மாதாவான ஸ்ரீ பத்திரகாளி அம்பாளை அடியார்கள் போற்றித் துதித்து நல்வரங்களைப் பெற்று மகிழ்வது மிகவும் தொன்மையானதாகும்.

தெய்வம் கோயில் கொண்டருளி உள்ள தலத்தினை அண்மித்து வாழுகின்ற மக்களின் குலதெய்வமாகி தோன்றாத் துணையாக அருளிநிற்றல்; இயற்கை. அவ்வாறே திருநெல்வேலி வாழ் விஸ்வகுல மக்களின் குல தெய்வமாகத் துலங்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் அவர் தம் பேரன்புக்குரிய ஆச்சி அதாவது என்றென்றும் அன்பும் ஆதரவும் அருளும் நல்கின்ற சக்தி சொரூபமான இனியதாய்! உலகியல் பந்த பாசத் தளைகளினால் சேய் தாயை மறந்து விடுவதுண்டு, எனினும் தாய் தன் சேயை என்றும் மறப்பதில்லை. எண்ணிலாத பொருட்குவை தானும், ஏற்றமும் புவியாட்சியும் ஆங்கே விண்ணில் ஆதவன் நேர்ந்திடும் ஒளியும், வெம்மையும் பெருந் திண்மையும் அறிவும் தண்ணிலாவின் அமைதியும் அருளும் எம் ஆச்சி தன் சேய்களை ஆதரவாக அரவணைத்தே நிற்கின்றாள்.

ஒரே வீதியில் வலது புறத்தில் கூப்பிடு தொலைவில் தலங்காவல் பிள்ளையார் ஆலயத்தினையும் இடது புறத்தில் ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயத்தினையும் கொண்டு நடு நாயகமாக விளங்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் உருவாகி இற்றைக்கு நூற்று எழுபத்தாறு வருடங்கள் ஆகின்றன என அறியக் கிடக்கின்றது.

இந்தக் கோயில் உருவானதற்கான காரணத்தை விளக்கும் ஒரு சம்பவமும் பெரியோர் வாயிலாக வழி வழியாகக் கூறப்பட்டு வருவதை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானது.

## தேவ கன்னிகை

பொழுது சாய்ந்த வேளையில் சகோதரர் இருவர் தமது குலத் தொழிலை முடித்து வீடு திரும்பும் வேளையில் அழகு மிகுந்த தேவ கன்னிகை ஒருத்தி அவர்கள் முன் நடனமாடியதாகவும் அதைக் கண்ணுற்ற அவர்கள் வியப்பும் அதிர்ச்சியும் அச்சமும் கொண்டு அந்தக்கன்னியை பயபக்தியுடன் வழிபட்டு அன்னைக்குக் கோயில் வைப்பதாகவும் கூறியதாகவும் அவ்வாறே அவர்கள் இன்றுவரை கம்பீரமாக நின்று கிளைவிட்டுப் பூத்துக் குலுங்குகின்ற மரத்தின் கீழ் ஒரு கல்லை எடுத்து வைத்துப் பிரதிஷ்டை செய்ததாகவும் மறுநாள் காலை அவர்கள் சென்று பார்க்கையில் அக்கல்லானது அவர்களது வேலைத்தலத்தில் (கம்மாலையில்) இருக்கக் கண்டு ஆச்சரியமுற்று அவ்விடத்திலேயே சிறு கொட்டிலாக கோவிலை அமைத்ததாகவும் கூறப்படுகின்றது.

இன்று அம்பாள் கோயில் கொண்டருளியுள்ள மூலஸ்தானமே அன்று அந்தக் கம்மாலை இருந்த இடமெனவும் கூறுகின்றனர்.

## கம்பீரம் மிக்க ஆலயம்

பல அன்பர்கள் மனமுவந்து நன்கொடையாக ஆலயத்திற்கான காணிகளை வழங்கினார்கள். சிறு கொட்டிலில் விருப்புடன் கோயில் கொண்டருளிய அம்மை கம்பீரமும் கவர்ச்சியும் மிக்க ஆலயத்தில் மிளிர்வது காலத்தின் வளர்ச்சியினாலாகும். இந்த இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தே கோயில் வளர்ச்சி பெற்று வந்துள்ளதை அறிய முடிகின்றது. அந்நியர் ஆட்சியும் அந்நிய மொழியும், அந்நிய மதமும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவ மதத்தினையும் சைவத்தோடு இணைந்த தமிழ்க் கலாசாரத்தினையும் நசுக்க முனைந்திருந்த வேளை சைவாலயங்கள் புத்துயிர் பெறாதிருந்தமை ஒன்றும் ஆச்சரியமானதல்ல.

இருபதாம் நூற்றாண்டாகிய இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்த அடியார்கள் அவ்வப்பொழுது திருப்பணி வேலைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். இன்று கணீரென ஒலித்து அடியார்களை விழிப்புற வைக்கும் கோயில் மணி 1916ஆம் ஆண்டு சின்னத்தம்பி கனகர் என்பவரினால் செய்து கொடுக்கப்பட்டது எனவும் கோயிலுக்கு அர்ச்சகர் ஒருவர் நியமிக்கப்படு முன்னர் நாகமணி என்பவர் சைவாசார சீலராய் பூசகராகக் கடமையாற்றி வந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



## பிடியரிசி

அம்பாளுக்கு அணிவிக்கப் பெற்றுள்ள ஐந்தரைக் தங்கப்பவுண் எடையுள்ள பதக்கம் ஊரில் அடியார்களை பிடியரிசி போடவைத்து அதனைச் சேகரித்து விற்ற பணத்தில் வாங்கப்பட்டது எனவும் அதன் அன்றைய விலை (1927.80 ரூபா) எனவும் அன்பர் ஒருவர் தெரிவித்தார்.

ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் பரிபாலனசபை முதன் முறையாக 09.09.1920இல் ஆரம்பிக்கப்பட்டது. 01.04.1934இல் கூடிய மகாசபையில் பரிபாலன சபைக்காக பிரமாணங்கள் வகுக்கப்பட்டன. அன்று சபையில் அங்கம் வகிப்போருக்கான வருடாந்த சந்தா 16 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு ஒரு ரூபாவாகவும் 16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டு ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

1924ஆம் ஆண்டு உள் கொட்டகையும் 1942ஆம் ஆண்டு வெளிக் கொட்டகையும் அமைக்கப்பட்டன.

இவ்வாறாகப் படிப்படியாக திருப்பணி வேலைகளுடன் வளர்ச்சி பெற்ற ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெறவும் வருடாந்த திருவிழாக்களை நடத்தவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. 1971ஆம் ஆண்டு நிகழ்ந்த மகா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து அடுத்த ஆண்டிலேயே கொடியேற்றத் திருவிழாவும் ரதோற்சவமும், தீர்த்தோற்சவமும் இடம்பெற அம்பாள் அருள் பாலித்தாள்.

## மூதாட்டியாக

பக்தர்கள் அன்போடு குறிப்பிடுகின்ற ஆச்சி என்ற பதத்துக்கு ஏற்ப சர்வாலங்கார பூஜிதையாகிய அம்பாள் வெண்ணிற ஆடையணிந்த கரியமேனி கொண்ட மூதாட்டியாகவே அடியார்களின் கனவில் தோன்றி திருவாய் மலர்கிறாள் என்று கூறக் கேட்கும்போது மிகவும் வியப்புத்தோன்றுகின்றது.

## கனவில் தோன்றி

ஒரு முறை பணப் பற்றாக்குறையினால் வருடாந்த திருவிழாவினை நடத்துவதில்லை எனத் தீர்மானித்தபோது அன்றைய தினம் இரவே அடியார் ஒருவரது கனவில் மூதாட்டி ஒருத்தி தோன்றி இம்முறை எனக்குத் திருவிழா நடத்தப் போவதில்லையா? என்று கேட்டாராம். உடனேயே அந்த அடியார் ( நிர்வாக சபை உறுப்பினர்) கண் விழித்து எழுந்து அம்பாளின் திருவாய் மொழி நினைந்து மெய் சிலிர்த்தாராம்.

அந்த அர்த்த சாமத்திலேயே அவர் வேறு ஒரு சிலரிடம் சென்று தூக்கத்தில் இருந்த அவர்களை எழுப்பி தான் கண்ட கனவைக் கூறி திருவிழா நடத்த ஏற்பாடு செய்வதாகக் குறிப்பிட்டார். திருவிழாச் செலவை தான் ஏற்றுக் கொண்டதாகவும் அவர் கூறினார்.

இதேபோன்று ஒரு சம்பவத்தினை வேறு ஒரு அடியாரும் குறிப்பிட்டதில் இருந்து அம்பாளின் உருவ ஒற்றுமையை உணர முடிகின்றது.

இந்த நிலையிலும் மகாகவி பாரதியின் மஹா சக்தி வெண்பாவினை நினைவு கூர்ந்து முடிப்பது சாலப் பொருத்தமானதாகும்.

தன்னை மறந்து சகல உலகினையும்
மன்ன நிதங் காக்கும் மஹாசக்தி அன்னை
அவளே துணையென் றனவரதம் நெஞ்சம்
துவளா திருத்தல் சுகம்.

(இக்கட்டுரை திருமதி அன்னலட்சுமி இராசதுரை அவர்களால் 1985ஆம் ஆண்டு மஹா கும்பாபிஷேக மலரில் எழுதப்பட்டதில் இருந்து தொகுக்கப்பட்டது)

ஷா
யம்
வேலி கிழக்கு,
ம்.
, 0776047287
ளர்:
ன் ஆச்சாரி

காமாட்சி அம்பாள்
ஓவியக் கலையகம்
அரசடி லேன், திருநெல்வேலி.
உரிமையாளர்: செல்லையா செல்தாஸ்
தொ.பே: 0771290751

றூபி நகைமாடம்
இல.7 பலாலி வீதி,
திருநெல்வேலி சந்தி,
தொ.பே: 0779905819

நல்லைநாதன்
இரும்புத் தொழிலகம்
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி

செல்வதி
ஓவியக் கலைக்கூடம்
காளி கோயிலடி, திருநெல்வேலி.
உரிமையாளர்: அரசரத்தினம் அஜெந்தன்


தர்சினி
மரத்தளபாட இயந்திரத் தொழிற்சாலை
சகலவிதமான நுட்ப வேலைகளுக்குச் சிறந்த இடம்
காளிகோயிலடி, சங்கானை
021 321 9133, 0779576705

விநாயகர்
சிற்பாலயம்
தலங்காவல் பிள்ளையார் கோயிலடி,
திருநெல்வேலி.
உரிமையாளர்: எஸ்.இராசரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் மறவாத 17ஆம் ஆண்டு நினைவலைகள்

**அமரர் ஏரம்பு சோதிலிங்கம்.**



(தலைவர், மதி ஒளி ச.ச நிலையம்,
பண்டிதர் நூல் நிலையம்,
இணக்க சபை உறுப்பினர்)

திதி நினைவு தினம்
06.02.2012

சோதி எனும் நாமம் சொன்னால் மண்டைதீவு எனும் ஊர் பெயர் துலங்கிடுமே. சட்டம் படித்தவர் முதல் சாதாரண பாமரன் வரை அவர் பெயர் தெரிந்திடுமே! வீரத்தின் இலக்கணமே! வெற்றித்திருமனே! மானிடரால் வெல்ல முடியாத உங்களை வென்றுவிட்டான் காலனவன் காலம் எல்லாம் கலங்கி நிற்கின்றோம் யாம் இப்பூவுலகில்.

ஓம் சாந்தி!

2/2 ,நிராவியடி,
யாழ்ப்பாணம்.

மகன், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## விற்பனைக்கு

TATA 407 (LH) இலக்கத்தையுடைய 10½ அடி நீள டிப்பர் செசியுடன் கூடிய லொறி விற்பனைக்கு உண்டு. 20,000 கி.மீ மட்டுமே ஓடியது.

தொடர்புக்கு:
0777568685

## காணி விற்பனைக்கு

மருதனார் மடம், வலிகாமம் கல்வி வலய அலுவலகத்துக்கு அண்மையில் கிணற்றுடன் கூடிய 11 பரப்புக்காணி முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விற்பனைக்குண்டு.

தொடர்பு - 0777110513



ஒன்லைன் மூலம்
கொள்வனவுகளை
மேற் கொள்பவர்
களுக்கு
விநியோகம்
இலவசம்
www.titusstores.com
புறக்கோட்டை விபேட்டி பிளாஸா
2439422

## 7ஆம் ஆண்டு நினைவுகளில்...

**அமரர் செல்லையா ரஜனிகாந்**

(சுரேன், சங்கமன்)



திதி: தைமாத வளர்பிறை சதுர்த்தசி

மலர்வு .
22.11.1974
உதிர்வு
25.01.2005

*நித்தம் நித்தம் நீ தந்த அன்புண்டு*
*பார்த்து பார்த்து நீ வளர்த்த பாசம் உண்டு*
*சிரிப்பால் அரவணைத்த நட்புண்டு*
*எம் நெஞ்சினிலே நீ தந்த நேர்மையுண்டு*
*நெஞ்சமதில் அன்பை நீ தேக்கி வைத்தாய்*
*தெய்வமென நீ எமக்குள் வாழ்கின்றாய்*

*4/2 அம்பாள் வீதி,*
*நாயன்மார்கட்டு,*
*யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்

## இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

VCare

**DR.HAIR X**
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic



தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள் நாங்கள்!

தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புளுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் 4,5,6 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா- 12,13ஆகிய திகதிகளில். முன் பதிவுகளுக்கு 021 - 4923416

V care Colombo - No.190, George R.De Silva Mawatha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 2220288.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சிற்பக்கலா சுரபி
சீர்காழியூர் க.புருஷோத்தமன்

இறைபணி வித்தகர்
இணுவையூர் செ.சிவலிங்கம்







நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய புனருத்தாரணப் பணியையும் 108 அடியுயர இராஜகோபுரப் பணியையும் மிகவும் சிறந்த முறையிலும் அழகுறவும் நிறைவேற்றியமைக்காக உட்கட்டுமானப் பணிப் பொறுப்பாளர் திரு.செ.சிவலிங்கம் அவர்களுக்கும் சிற்பவேலைப் பொறுப்பாளர் திரு.க.புருஷோத்தமன் அவர்களுக்கும் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய அறங்காவலர் சபையினரால் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டதையிட்டு மகிழ்வடைந்து இவர்களது நெறிப்படுத்தலின் கீழ் பணியாற்றிய பேற்றினை அன்போடு நினைந்து மகிழ்ந்து இருவரையும் மனமாரப் பாராட்டி இவர்கள் உள - உடல் நலத்தோடு பல்லாண்டு காலம் வாழ இறையருளை வேண்டுகின்றோம்.

கட்டுமானத் தொழிலாளர்கள்
நயினாதீவு

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டிற்கான சிறந்த தொழிலதிபருக்கான விருது வழங்கும் விழாவில் வடமாகாணத்தின் சிறந்த தொழிலதிபருக்கான விருதினைப் பெற்றுக்கொண்ட கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை உரிமையாளர்,

**பொறியியலாளர் திருநாவுக்கரசு சேந்தன்**

அவர்களை மனதார வாழ்த்துவதுடன் மேலும் பல விருதுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென இறைவனை வேண்டிக்கொள்கின்றோம்.

*வாழ்த்துவோர்*
கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம்,
பருத்தித்துறை.

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா No.1 புறொயிலர் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும்(09.02.2012) விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

தொடர்பு:

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர், | நல்லூர் பாம் சென்ரர், | சுட்டி பாம் சென்ரர், |
| 19, முருகேசர் ஒழுங்கை, | கனகபுரம் வீதி, கிளிநொச்சி. | வட்டுக்கோட்டை |
| நல்லூர். 0212226944 | 0776225944 | 0778996085 |

## உள்நாடு வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை விஸ்தரிக்கும் முகமாக DHL யாழ்.குடாநாட்டுகளில் நம்பமுடியாத கட்டணங்கள் இப்பொழுது வழங்கப்படுகின்றது...

உள்நாட்டுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை 24 மணிநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

DHL வடமாகாணத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்

5 கிலோவிற்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு
அதிரடி விசேட சலுகை...!

கனடா - 1 kg - 500/= சுவிஸ் - 1 kg - 400/=



**திருமுருகன் கொம் நெற்**

இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05,திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 2 தொ.பே.:021 222 7835

## விற்பனைக்கு

மாயவனார் வட்டக்கச்சி கிளிநொச்சியில் இயங்கிவரும் ''சினி குளோபல்'' எனப்படும் மினி சினிமா மொத்த மாகவும், பகுதியாகவும் விற்பனைக்குண்டு.

1. புறொஜெக்டர் Epson Eb - s7 வெண்திரையுடன் (12' x 12')
2. D.cp 650 Va

ஏனைய விவரங்களுக்குப் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் 2012.02.15 ஆம் திகதிக்கு முன்பு தொடர்பு கொள்ளவும்.

**0777240639, 0770690031, 0772017236**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## இரத்தினம் நல்லம்மா



சிலம்புப் புளியடி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் நல்லம்மா நேற்று (05.02.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவப்பிரகாசத்தின் (N.K.S) சகோதரியும் மகாதேவன், தங்கேஸ்வரி, சந்திரவதனா, காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் வாமதேவி, ஞானதேவன், வாசுதேவன், வாசுதேவி, இந்திராதேவி, காமதேவன் ஆகியோரின் அன்புத் தாயும் சந்திராதேவி, பரம்சோதி, பாலசிங்கம், சிவலோகநாயகி, இராசரத்தினம்(M.R.S), புவனேஸ்வரி, தேம்பாமலர், காலஞ்சென்ற குபேரன் (K.S.K) மற்றும் நாகரத்தினம், புஸ்பவதி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2012) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிலம்புப்புளியடி,
சங்கானை.

தகவல்
குடும்பத்தினர்.

# யாழ். நீதிமன்ற பதிவாளராக துளசிகன்

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ். நீதிவான் நீதிமன்றப் பதிவாளராக ச.துளசிகன் நியமிக்கப்பட்டுள்ளார். இது வரை காலமும் நீதிவான் நீதிமன்றில் கடமையாற்றிய எஸ்.வன்னியசிங்கன் யாழ். மேல் நீதிமன்றுக்குப் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மேல் நீதிமன்றுக்கு இரண்டு பதிவாளர்கள் நியமிக்கப்படவேண்டியிருந்தும் இதுவரை எம்.எஸ்.எம்.நஸீர் மட்டுமே பதிவாளராகக் கடமையாற்றிவந்தார். தற்போது அந்த வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வன்னியசிங்கன், யாழ். நீதிவான் நீதிமன்ற எழுதுவினையராகப் பணியாற்றிய பின்னர் ஊர்காவற்றுறை பிரதம எழுதுவினைஞராகப் பணியாற்றி வந்தபோது யாழ். நீதிவான் நீதிமன்ற பதிவாளராகப் பதவி உயர்வுபெற்றார். தற்போது யாழ். மேல் நீதிமன்றுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

துளசிகன், யாழ். நீதிவான் நீதிமன்ற எழுதுவினையராகப் பணியாற்றி பின்னர் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்துக்கு இடமாற்றமாகி பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன்ற பதிவாளராகப் பதவியேற்றார். தொடர்ந்து வவுனியா நீதிவான் நீதிமன்ற பதிவாளராக நியமிக்கப்பட்டு தற்போது யாழ். நீதிவான் நீதிமன்றப் பதிவாளராக இடமாற்றத்துடன் இங்கு வந்துள்ளார். (ஒ-4)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1983 ஆம் ஆண்டு, விசாகம் 2ம் பாதம், கிரகபாவம் 49 உள்ள கனடாவில் பிரஜா உரிமைபெற்ற மணமகனுக்கு பெற்றோர் பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு. 075 0398826 (14151)

## மணிவிழா நாயகியை மனமுவந்து வாழ்த்துகின்றோம்

சைவப்புலவர் செல்வி மகேஸ்வரி சுப்பிரமணியம்



(கலைப்பட்டதாரி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா, ஆசிரியர் சேவை தரம் 1, சுச்சாய் அ.த.க பாடசாலை)

(06.02.2012)

அகவை அறுபது காணும் எம் இனிய
ஆசானே இனிய குரலினிலே இனிய
இசைபாடி இனிய தமிழ் புகட்டி
இங்கிதமாய் கதைபேசி கேட்போரை
ஈர்க்கும் பெருந்தகையே ஓய்வு
காலமதில் நோய் நொடியின்றி
சமய,சமூக பணி சிறக்க மீசாலை
திருநீலகண்ட வெள்ளை மாவடியான்
அருள்வேண்டி நீடூழி வாழ்க என
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
மீசாலை விக்னேஸ்வர மகாவித்தியாலயம்.
2006 - க.பொ.த (உ.த) மாணவர்கள்,
கச்சாய் அ.த.க. பாடசாலை,
2010 - க.பொ.த (சா.த) மாணவர்கள்.

(11588) (6-7-8)

Knowledge Universe
College of Business and IT
100% வெற்றி
A1/B1/B2
IELTS
Spoken English
நொலிட்ஜ் யூனிவேர்ஸ்
City & Guilds Approved Centre
Knowledge Universe Sri Lanka
www.kugroup.info 0776458253
இல 75, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

COMPUTER TRAINING
MS Office Application
Desktop Publishing
IT & Web Programming
Information Technology
Web Design & Development
Professional Graphic Design
புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்
CSC-ASIAN COMPUTER EDUCATION

| யாழ். நகரில் | நெல்லியடியில் | சாவகச்சேரியில் | கிளிநொச்சியில் |
|---|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, | கொடிகாமம் வீதி, | 230, கண்டி வீதி, | 45, அம்மன் கோவில் வீதி |
| T.P : 021-222 5677 | T.P : 021-2262399 | T.P : 021-2270267 | ஆனந்தபுரம் 021-2285644 |


2012 Chemistry - பிரத்தியேகவகுப்பு
2012/2013 Batch, Physical Chemistry organic, Inorganic Chemistry கடந்தகால வினாக்கள் அனுபவமிக்க ஆசிரியரால் (B.Sc, M.Sc (Chemistry) தனியாகவோ, குழுவாகவோ கற்பிக்கப்படும். தொடர்பு : 077 6038913

# மரண அறிவித்தல்



## இராசையா முருகேசு

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடா, மார்க்கத்தை வதிவிடமாகவும் கொண்ட இராசையா முருகேசு (02.02.2012) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு -சின்னம்மா தம்பதியின் அருமைமகனும், காலஞ்சென்ற விஸ்வலிங்கம் மற்றும் ராணி தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரி, இந்திரா ஆகியோரின் பாசமிகு கணவரும், இந்துமதி (சுவிஸ்), ஜெயமதி (பரீஸ்), மாலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறீ (சுவிஸ்), தவம் (பரீஸ்), நரேஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், வேலாயுதம் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம் முத்தம்மா, இராசம்மா, சாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இந்திரா, ஆனந்தம் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து நடேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆகாஷ், அனீஷா, சரிக்கா, கிரித்தா, சர்மினி, சாம்பவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
011 905 209 9691 குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## விஸ்வநாதர் மாணிக்கவாசகர்

புத்தூர் மேற்கு, சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட விஸ்வநாதர் மாணிக்கவாசகர் (04.02.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வநாதர் - சோதிப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், செல்லம்மா, தணிகாசலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், விஸ்வநாதன் (சிமெந்துக்கூட்டுத்தாபனம் காங்கேசன் துறை), காலஞ்சென்ற வைகுந்தநாதன் மற்றும் விஜயலட்சுமி (நிர்வாக உத்தியோகத்தர், வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்), மகாலட்சுமி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சீதாதேவி, சண்முகவடிவேலு, மனோகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், சிந்துஜன், ஆதித்தன், ஆரூரன், துஷீபன், கீர்த்தனா, பிரணவன், சங்கவி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிந்துசிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி
ஒழுங்கை, சிவன்கோயிலடி, புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 11 | 07 |
| ★ | ★ |
| 01 | 01 |
| ★ | ★ |
| 1946 | 2012 |



அமரர்

## சுப்பிரமணியம் தம்பிராசா

எமது குடும்பத் தலைவர் சுப்பிரமணியம் தம்பிராசா கடந்த (07.01.2012) அன்று இறைபதம் அடைந்த செய்திகேட்டு எம் துன்பத்தில் பங்குகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (06.02.2012) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

'திருப்பதி'
தாழையடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்

(சி/8816) (45-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



திருமதி

## ஞானராஜா இராஜேஸ்வரி (நீற்றா)

கடந்த (03.02.2012) அன்று கர்த்தருக்குள் நித்திரையாகிய எமது குடும்ப விளக்கான திருமதி ஞானராஜா இராஜேஸ்வரியின் (நீற்றா) மரணச் செய்திகேட்டு ஓடிவந்து இரவு, பகல் பாராது சகல வழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் மரணச்சடங்கில் கலந்துகொண்ட வர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பி எமது துயரில் பங்கெடுத்துக் கொண்ட திருச்சபை போதகர், ஊழியர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், சக ஊழியர்கள் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, (07.02.2012) அன்று ஒளித்தென்றல் புகைப்படக்கலையகம், அம்பலப்பெருமாள் சந்தி, அக்கராயன் குளம் என்னும் முகவரியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறுகின்ற மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஒளித்தென்றல் புகைப்படக் கலையகம்
அம்பலப்பெருமாள் சந்தி,
அக்கராயன் குளம்.

கணவர், பிள்ளைகள்
(தகவல் - சுகந்தன்)

(14147)(45-6-7)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சல்



திருமதி

## விஜயரத்தினம் மகேஸ்வரி

அன்னை மடியில் 28-04-1933

சிவன் அடியில் 28-01-2010

திதி: பூர்வபக்க சதுர்த்தசி

அம்மம்மா!
நேசமிகு உறவாய்
பாசமிகு தாயாய் வாழ்ந்தீர்கள் - உங்கள்
பிரிவின் பெருந்துயரால்
நினைவுகள் நிழலாய் தொடர்கிறது!

காலங்கடந்து ஈராண்டாகியும்
காயத்தின் வலி ஆறவில்லை - தாயே!
விண்ணோடு சேர்ந்தபோதும்
கண்ணின் மணியாய் எம்முடனுள்ளீர்கள்!

மகிழ்வும், வசந்தமும்
வாழ்வுள்ளவரை மட்டும் தான் - எனினும்,
விட்டுச்சென்ற உறவுகளின்
வழிகாட்டல்கள் மறையா ஒளிவிளக்கே!

84/6, தபாற்கந்தோர் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

## வேலணைப் பகுதி அபிவிருத்தி: 4 திட்டங்கள் முன்மொழிவு

யாழ்ப்பாணம், பெப். 06

2012இல் கட்டம் III நெல்சிப் அபிவிருத்திக்கு நான்கு திட்டங்களை வேலணைப் பிரதேச சபை முன்மொழிந்துள்ளது.

சபை அங்கத்தவர்களின் தீர்மானத்துடன் III கட்டம் அபிவிருத்திக்கு 4 திட்டங்களை முன்னெடுத்துள்ளதாக பிரதேச சபை தலைவர் சி.சிவராசா தெரிவித்துள்ளார்.

அந்தத் திட்டங்கள் வருமாறு-

* வங்களாவடி சந்தியில் மாடிகள் கொண்ட நவீன இரு கடைத் தொகுதி.
* வேலணைத் துறையூரில் புதிய மீன் சந்தை அமைத்தல்.
* புங்குடுதீவு மடத்து வெளியில் புதிய மீன் சந்தை அமைத்தல்.
* மண்டைதீவில் நவீன முன்பள்ளிக் கட்டடம் அமைத்தல் என்பவையாகும்.

மேற்படி திட்ட விவரம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தலைவர் சி.சிவராசா தெரிவித்துள்ளார். (ஒ)

## புதிய முன்பள்ளி

அச்சுவேலி, பெப்.6

அச்சுவேலி தெற்கு நவோதயா சனசமூக நிலைய முன்னெடுத்தல் குழுவின் ஏற்பாட்டில் புதிய பாலர் முன்பள்ளி செயற்படவுள்ளது.

நவோதயா சமூக முன்னெடுத்தல் குழுவின் கோரிக்கையை ஏற்று வலி கிழக்கு பிரதேச செயலகமும் புதிய முன்பள்ளியை ஆரம்பிக்க அனுமதியை வாழங்கியுள்ளது.

அச்சுவேலி தெற்கு, கரதடி, மாவடி கிராமத்தைச் சேர்ந்த சிறுவர்கள் முன்பள்ளிகளைத் தேடி நீண்ட தூரம் செல்வதைக் கருத்தில் கொண்டும் சிறுவர்களுக்கு பொருத்தமான வசதியைச் செய்து கொடுப்பதை நோக்காகக் கொண்டு புதிய முன்பள்ளி ஆரம்பிக்கப்படவுள்ளது.

பாலர் முன்பள்ளிக்கான தளபாடங்கள் உபகரணங்கள், ஆசிரியர்களுக்கான மாதாந்த ஊதியம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்கி உதவுவதற்கு ஏ.ஏ.ஏ முவிஸ் பவுண்டேஸன் நிறுவனம் முன்வந்துள்ளது. (ஓ-11)

## காணி விற்பனைக்கு உண்டு

ஆனைக்கோட்டையில் கிணறுடன் கூடிய 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 021 222 3375, 0776147399

# 9ஆம் மாத நினைவஞ்சலி

அன்னை அரவணைப்பில் 1974.10.02

பாதகன் அழிப்பில் 2011.05.16



## சதாசிவம் ஸ்ரீகரன்

அன்பான குலவிளக்கே
உன் உயிர் பறித்துப்
பத்து மாதம் ஆகிறதே
எப்பொழுது அறுவடை
செய்யப் போகின்றனரோ
காலம் தான் பதில் சொல்லும்
எம் வாழ்வே இருளாகி விட்டதே
உம் அன்பான வார்த்தைகள்
இன்னும் எம் காதில் ஒலிக்கிறதே
உன் அன்புத் தாய் சகோதரர்களின்
நெஞ்சம் துடியாகத் துடிக்கிறதே
உம் நினைவுகளால்.

15ம் வட்டாரம்,
நெடுந்தீவு.

தாய், அக்கா, தம்பி,
குடும்பத்தினர்.

(14142)(6-7-8)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகரத்தினம் மகேஸ்வரி



சாவகச்சேரி, கற்குழி வடக்கை பிறப்பிடமாகக் கொண்ட கனகரத்தினம் மகேஸ்வரி 03.02.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி-நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், ஜீவராணி, காலஞ்சென்ற ஜெயராமச்சந்திரன் மற்றும் மீனா, கோசலா ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சகுந்தலாதேவி மற்றும் அசோகமாலா தேவி, ரங்கநாதன், பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும், ரவீக்கா நாகராஜா, ரவீந்திரா தவரூபி, ரமேஷ் விஜிதா, ராஜினி லோகேஸ்வரன், துஷாந்தி இன்பகீதன், ஜெயமோகன்,ஜயதர்சி கௌரீஸ்வரன், ஜெயதீபா ஜெயதர்சன், தர்மினி துதிஸ்யன், தர் சன், காலஞ்சென்ற சிவகரன் மற்றும் பரணீதரன், பாஸ்கரன் சுபாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், குயானன், அபி லாஷ், சாதனா, மிதூன், றொகான், சாயகி, வர்சி, அர்சிகன் ஆகி யோரின் பாசத்துக்குரிய பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2012) திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்குழிவடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(C\8819) (6,7,10)



ஐயாகடையடி, மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி சதாசிவம் சிவபாக்கியம்

(02.02.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சதாசிவத்தின் அன்பு மனைவியும், கருணாநிதி (சரவணபவன் ஆபரண மாளிகை-சாவகச்சேரி), கைலை நாதன் (குஞ்சுமணி- இந்தியா), கணேசநாதன் (குஞ்சு-லண்டன்), தவமலர், சிவகடாட்சம் (சிவா-கொலண்ட்), சிவயோகமலர் (யோகா- ஜேர்மனி), சிவகுமார், வளர்மதி ஆகியோரின் அன்புத் தாயும் சிவரஞ்சினி, லோகேஸ்வரி, சாந்தநாயகி, இராசநாதன் (ஓய்வுபெற்ற அலுவலகப் பணியாளர் - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - சாவகச்சேரி), புனிதவதி, யோகராசா, வேல்முருகன் ஆகியோரின் அன்பு மாமியும் பிரதீபன், துஜீவன், சரண்யா, சஞ்ஜீவன், தர்சிகா, இளங்கோவன், கயூரன், லக்ஷிகா, தேனுகன், சுலக்ஷன், கிருஸ்ணகா, நிவேதா, சங்கவி, யோகிந்தா, துலக்ஷன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் அல்லாரை கொற்புலவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயா கடையடி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்: மகன்
ச.கருணாநிதி (கருணா),
(சரவணபவன் ஆபரண மாளிகை)

(C8809) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## சண்முகம் துரைராசா



(பவானி விலாஸ் உரிமையாளர்)

அவர்கள் கடந்த வெள்ளிக் கிழமை (03.02. 2012) இந்தியாவில் காலமான செய்தியறிந்து அதிர்ச்சி யடைகின்றோம்.

அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து எமது இதய அஞ்சலிகளைச் சமர்ப்பிப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

**நியூ சந்திரா தொழிலகம்**

# மரண அறிவித்தல்

## திருமதி தம்பையா சிவக்கொழுந்து



வாதரவத்தையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட திருமதி தம்பையை சிவக்கொழுந்து நேற்று (05.02.2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான அம்பலம்- முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை (பூசாரியார்) அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலம்சென்ற தம்பையாவின் அன்பு மனைவியும், யோகராணி, சந்திரமூர்த்தி (எழுதுவினைஞர் சேவைகள், பதவி நிலை உதவியாளர்-மருத்துவபீடம், யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், இராசரத்தினம், துஷானி ஆகியோரின் அன்பு மாமியும் யதுசாமினி, தயாளினி, பர்மினி, யதுர்சன் ஆகியோரின் அன்புப் போர்த்தியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, சின்னத்தம்பி (ஆசிரியர்), இராசதுரை மற்றும் சிவயோகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகசிங்கம் மற்றும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, பாக்கியம், மகாலிங்கம், சின்னத்துரை (கிராமசேவை நிர்வாக உத்தியோகத்தர் பிரதேச செயலகம், கோப்பாய், உடுவில்) ஆகியோரின் மைத்துனியும் ஆவர்.

அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று (06.02.2012) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வாதரவத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வாதரவத்தை, புத்தூர் — த.சந்திரமூர்த்தி (மகன்)

வலி. தென்மேற்கு பிரதேச சபையில்

# படையினருக்கு எதிராகத் தீர்மானம் எதிர்க் கட்சியினரால் நிராகரிப்பு

சண்டிலிப்பாய், பெப்.6

வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் கடந்த மாதம் கடற்படையினரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கடற்படையினருக்கு எதிராக வலி. தென் மேற்குப்பிரதேச சபைக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானம் எதிர்க்கட்சி உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்டது.

வலி. தெற்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் பிரதேச சபை மண்டபத்தில் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது.

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வலி. வடக்குப் பிரதேசத்தில் கீரிமலை, சேந்தான்குளம் பகுதியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த மக்கள் பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்டனர். இந்தச் சம்புவம் அறிந்து அந்த இடத்துக்கு விரைந்து சென்ற வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவர், உறுப்பினர் ஆகியோரும் படையினரால் தாக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை கண்டித்து வலி. தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் சுப்பிரமணியம் முன்மொழிந்த கண்டனத் தீர்மானம் பரிசீலணைக்கு எடுக்கப்பட்டது.

இந்தத்தீர்மாணம் குறித்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர் செல்வராஜா இத் தீர்மானத்தை நிராகரித்ததுடன் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகில் கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் இருப்பதனாலும் பாதுகாப்புப் படையினரின் அனுமதி பெறாமல் குப்பைகள் எரிக்கப்பட்டதுமே இதற்குக் காரணம் என்று தெரிவித்தார். பாதுகாப்புப் படையினரின் அனுமதி பெறாமல் அங்கு சென்றது தவறென்றும் வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவர் பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்டது தவறு என்று கூறி அவர் மேற்படி தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவிக்க மறுத்துவிட்டார்.

இதனால் இந்தத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது கூட்டமைப்பைச் சேர்ந்த 12 உறுப்பினர்களும் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். எதிர்க்கட்சி உறுப்பினர்களான 3 உறுப்பினர்களும் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை எனினும் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஓ-115)

## இன்று தேர்

காரைநகர் பயிரிக்கூடல் சுப்பிரமணிய சுவாமி கோயில் தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது. காலை 7 மணிக்கு ஆயிரம் சங்குகளால் அபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வந்து தேர் உற்சவம் ஆரம்பமாகும். (ஓ-4)

## விற்பனைக்கு

விரிவுரைக் கதிரைகள் (குசன், 20) புற ஜெக்ரர் EPSON உம் விற்பனைக்குண்டு.
TP:- 0756438553

# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை வில்வரெத்தினம்



(துரைராஜா துரை)

மண்டைதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மண்கும்பான் 5ஆம் வட்டாரத்தை வாழ்விடமாகவும் தற்போது பண்டாரக்குளம் வீதி, நல்லூரில் வசித்தவருமான ஐயாத்துரை வில்வரெத்தினம் கடந்த (04.02.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - தில்லைவனம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசரத்தினம் (சேனாதிபதி) மற்றும் கண்மணி (மண்கும்பான்) தம்பதியரின் மருமகனும், புஸ்பராணியின் (தேவி) பாசமிகு கணவரும் கோமலா, வளர்மதி, மைதிலி, கஜந்தினி, யசிந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேசு, சசிக்குமார், ரவீந்திரகுமார் ஆகியோரின் மாமனும் இராசரெத்தினம் (இந்தியா), சிவகிரி நாயகி, காலஞ்சென்ற நவரத்தினம் ஆகியோரின் சகோதரரும் வசந்த கோவிலம், காலஞ்சென்றவர்களான தெட்சணாமூர்த்தி, ஏரம்பமூர்த்தி மற்றும் பராசக்தி, செல்வரத்தினம் (கொத்தல), மனோகரன், காலஞ்சென்ற மகேந்திரன் (சிவம்) ஆகியோரின் மைத்துனரும் அனுத்தா, அஜித்தா, சரவணப்பிரியன், ஜனுசன், சுவேனிகா, திவியன், கிரிசன், சபிதன் ஆகியோரின் பாசமிகு பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்17/21, பண்டாரக்குளம் வீதி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (2012. 02.06) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் மு.பகல் 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்குதகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

17/21, பண்டாரக்குளம் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்
சசிக்குமார் (மருமகன்)

# மங்கலகரமான திறப்பு விழா



# ஜொலி

## றெஸ்ரோறன்ட்

பலாலி வீதி - திருநெல்வேலி சந்தி.

எமது வியாபார ஸ்தாபனமானது
திருநெல்வேலிச் சந்தியில்
புதுப்பொலிவுடனும், புதிய வசதிகளுடனும்,
புதிய கட்டடத்தில் இன்று (06.02.2012)
திங்கட்கிழமை பி.ப. 12.30 தொடக்கம்
1.30 மணிக்கு

**திரு.நா.சோதிநாதன்**

*(யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர்)*

அவர்களால் திறந்து வைக்கப்படுகின்றது என்பதை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதோடு இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளும்படி வேண்டிநிற்கின்றோம்.

உரிமையாளர் -
வ.பஞ்சநாதன்.

# நன்றி நவில்கின்றோம்

**05/02/2012 ஞாயிற்றுக்கிழமை**

TILKO **ஹோட்டலில் இடம் பெற்ற எமது திருமண விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பித்த மேலதிக அரசாங்க அதிபர், அவர்தம் உத்தியோகத்தர்கள், இலங்கை வங்கி சுன்னாகக்கிளை முகாமையாளர், உத்தியோகத்தர்கள் தொழில் அதிபர்கள், ஊழியர்கள் நண்பர்கள் மற்றும் நலன் விரும்பிகள்** TILKO **ஹோட்டல் நிர்வாகத்தினர், ஊழியர்கள் "பவாவின் நண்பர்கள்" இசைக்குழுவினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

இல. 13, நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

திரு. திருமதி. தவச்செல்வன்
(தவம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org